மனிதர்கள் ஜாக்கிரதை

V.PR.PL.M.K.
Paganeri

கவிஞர்

சுப்பு ஆறுமுகம்

சேகர் பதிப்பகம்

30, போஸ்ட் ஆபீஸ் தெரு

சென்னை—1

முதற் பதிப்பு : ஏப்ரல், 1966.

விலை ரூ. 3·00

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை—14.

முன்னுரை

இன்றைய சமுதாயத்தில் இருக்கிற மைதா மாவுப் பஞ்சமும், அரிசி, கோதுமைப் பஞ்சமும்தான், அனைவருக்கும் தெரிகிறதே தவிர, மனிதத் தன்மைக்கு ஏற்பட்டிருக்கிற பஞ்சம் அவ்வளவாகத் தெரியவில்லை. இதைப்பற்றிக் கவலைப் படுவோர், ஏன், மேலெழுந்தவாரியாகப் பேசுவோர்கூட இப்போது, அதிகமாக இல்லை.

இன்றைய மனிதன், தினசரி காலண்டரில் தேதி கிழித் துக்கொண்டே, காலத்தைக் கொன்றுவிடும் ஓர் அதிசயப் பிராணியாகிவிட்டான்!

ஏதோ அவனுக்கே புரியாத ஒருவித அவசர வாழ்க்கை— யந்திர வாழ்க்கை அவனை ஆட்கொண்டுவிட்டது. வணங்கு குவது, நலம் விசாரிப்பது, ஒருவர்க்கொருவர் வருந்துவது, மகிழ்வது இதெல்லாம்கூட இன்று இதயத்தால் நடைபெறுவ தில்லை; வெறும் வெளியுலக சம்பிரதாயத்துக்காக நிகழும் ஒரு கிரியையாகவே நடந்துவிடுகின்றன!

''மனித மாமிசம் சாப்பிட்டால், ஆயுள் விருத்தி உண்டு'' என்று ஒரு நிருபர் ஒரு பத்திரிகையில் சரடு விட்டுவிட்டால் கூட போதும்; அன்றிரவே எளியோர் பலரை, வலியோர் சிலர் கசாப்புக்காகத் தூக்கிச் சென்றாலும் வியப்பதற்கில்லை. அத்தகைய பயங்கரச் சூழ்நிலையில்தான் இன்று வாழ்கிறோம்.

இதைப்பற்றிப் பேச, நாம் அருவருப்படையக் கூடாது. இதைப்பற்றிக் கவலைப்பட நாம் கற்றுக்கொள்ள வேண்டும். இதைப்பற்றி, ஒழுங்காகக் கவலைப்பட்டாலே போதும்; அதுவே ஓர் இலக்கியம்தானே! இத்தகைய சிந்தனைகள் தான், என்னை 'மனிதர்கள் ஜாக்கிரதை!' என்ற இந்த நகைச் சுவை நாடகத்தை எழுதத் தூண்டின. மூன்று திங்களுக்கு

முன், இந்நாடகம் சென்னையில் அரங்கேற்றப்பட்டபோது, ரசிகப் பெருமக்கள் பாராட்டினர். இன்று, வாசகர்களின் அன்புக் கரங்களில் இந்நூலைப் பணிவுடன் தருகிறேன்.

வாழ்வில் மனிதனையே காணமுடியாமல் வருந்திய நாட்களில், 'மனிதனைக் காணோம்' என்ற நூலை எழுதினேன். இன்று நான் அந்நிலையில் இல்லை. என் அன்புச் சகோதரர் கவிஞர் திரு. வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்களை, வாழ்வில் சந்தித்ததிலிருந்து ஒரு 'மனிதனைக் கண்டேன்' என்ற மன நிறைவு பெற்றிருக்கிறேன். அவரது தூய்மை மிக்க சேகர் பதிப்பகத்தின் மூலம் இந்நாடக நூல் வெளிவருவது குறித்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். பதிப்பகத்தாருக்கும், நாடக அரங்கேற்றத்திற்கு வந்திருந்து பெருமை தந்து, இதற்கு விமர்சனம் எழுதியுள்ள தமிழகத்தின் தலை சிறந்த இலக்கிய விமர்சகர் திரு. தி. க. சிவசங்கரன் அவர்களுக்கும் என் இதயங் கனிந்த நன்றி.

சென்னை-17.
1—4—66

அன்பன்,
சுப்பு ஆறுமுகம்.

நாடக விமர்சனம்

குடியரசு நாளன்று, எஸ். ஐ. இ. டி. மகளிர் கல்லூரியில், 'என். எஸ். கே. இம்மார்ட்டல் ஆர்ட்ஸ்' குழுவினரின், "மனிதர்கள் ஜாக்கிரதை" என்னும் நாடகத்தைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனின் வழியில் நையாண்டிச் சுவையின் வாயிலாக நாட்டின் நிலையைப் படம் பிடிப்பதும், நம் மக்களைச் சிந்திக்கச் செய்வதுமே இந்நாடகக் குழுவினரின் குறிக்கோள் எனத் தோன்றுகிறது.

"தேடிச் சோறு நிதந்தின்று-பல சின்னஞ்சிறு கதைகள் பேசி-மனம் வாடித் துன்பம் மிக உழன்று-பிறர் வாடப் பல செயல்கள் செய்து" நம்மிடையே வாழும்; வேடிக்கை மனிதர்கள் சிலரை நாம் இந்நாடகத்தில் காண்கிறோம்.

இந்நாடகத்தின் கதை வசனம், பாடல்களை எழுதியிருப்பவர் திரு. சுப்பு ஆறுமுகம்.

நாடகத்தின் காட்சியமைப்பிலும், இயக்கத்திலும் முடிவிலும் பலவீனங்கள் உள்ளன எனினும், அதன் குறிக்கோள் பாராட்டத்தக்கது. மக்கள் நலனுக்கு உகந்தது.

இன்றைய அரசியல், கலை, வணிகம். சமுதாயம் ஆகியவற்றில் புரையோடிப் போயிருக்கும் வெளிவேடங்களையும் திருகுதாளங்களையும் நாடகப் பாத்திரங்களின் வாயிலாக உலவ விட்டு, இவர்களிடையே முருகன் என்னும் அப்பாவியைச் சுழலவிட்டு, ஒரு நையாண்டி நாடகத்தை உருவாக்கியிருக்கிறார், ஆசிரியர்.

ஆண்டவனிடம் பேரும் புகழும் யாசித்துவிட்டு, மக்களிடையே செல்லும் முருகன் என்னும் இளகிய நெஞ்சுடைய இளைஞன் நம் சமுதாயத்தின் பலதரப்பட்ட பிரதிநிதிகளையும் காண்கிறான்.

பண்ணையார், வட்டிக்கடைக்காரர், வியாபாரி, அரசியல் வாதி ஆகியோரிடமெல்லாம் ஒட்டிப் பழகுகிறான்; அவர்

களுக்குப் பேரும், புகழும், பணமும், பதவியும் வந்த விதத்தைக் ''குட்டுப்பட்டு''த் தெரிந்து கொள்ளுகிறான்.

அனுபவ ஞானத்தால், தானும் கோணல் வழிகளைக் கடைப்பிடிக்க முடிவு செய்கிறான். ஒரு கவிஞனின் உதவியாளாக மாறிச் சில காலம் உல்லாச வாழ்வு நடத்துகிறான். எனினும் அவனது மனச்சான்று முழுதும் மரத்துப் போய் விடவில்லை. அவனது மனிதாபிமானமும் அறவுணர்வும் மீண்டும் தலைதூக்கின. அவன் கவிஞனிடமிருந்து விலகி, பழைய நாடோடியாகிறான்.

அவனுக்கு ஓர் அதிர்ச்சி காத்திருக்கிறது. பண்பாளராக இருந்த அவன் மாமாவும் பணத்தின் சதிராட்டத்தின் முன்னே மயங்கி விடுகிறார். தமது மகளை—முருகன் காதலித்த அஞ்சுகத்தை—ஒரு மில் முதலாளிக்குக் கட்டிக் கொடுத்து விடுகிறார். ஆனால் முருகனுக்கு வேறொருத்தி கிடைத்து விடுகிறாள். பண்ணையாராக இருந்து பராரியானவரின் மகள்—முந்திய எஜமானரின் மகள்—கழுத்தை நீட்டுகிறாள்! வாழ்விலே அனுபவங்கள் பெற்று முருகன், அஞ்ஞான வாசம் புரியத் தீர்மானித்துக் கானகம் ஏகுகிறான்!

திரு. சுப்பு ஆறுமுகம் வசனங்களை மிக இயற்கையாக தெளிவாக, நையாண்டிச் சுவை கொப்பளிக்க, மிகச் சிறப்பாக எழுதியுள்ளார். அவரது வசன வளத்தாலும், வலிமையாலுமே மூன்று மணி நேரத்தை என்னால் இனிமையாகப் போக்க முடிந்தது.

ஷாவைப் போலவும், சார்லி சாப்ளினைப் போலவும், என். எஸ். கிருஷ்ணனைப் போலவும் திரு சுப்பு ஆறுகத்திற்கு அற்புதமான குறிக்கோள் இருக்கிறது. அருமையான நையாண்டி வசனம் எழுதும் திறனும் இருக்கிறது. இவையே இந்நாடகத்தில் என்னைக் கவர்ந்த அம்சங்கள்.

—தி. க. சிவசங்கரன்.

பதிப்புரை

''கவிஞர் திரு சுப்பு ஆறுமுகம் அவர்கள் அருவி நீர் போன்ற அமைதியுடையவர்; இனிமையுடையவர். ஆழ்ந்த கருத்துக்களை அடக்கமாக—ஆனால் அழுத்தமாக, எளிதில் பதியும்படி எழுத வல்லவர்.'' இவையெல்லாம் அவர்தம் நூல்கள் நமக்களித்துள்ள அறிமுகக் குறிப்புக்கள்.

கலைவாணர் என். எஸ். கே. அவர்களின் அன்புக்கும் பாராட்டுக்கும் உரியவராக இருந்த இந்நூலாசிரியர், அவரைப் போலவே வாழ்க்கையை அன்பு நோக்கோடு கலை யுணர்வோடு ரசிப்பவர். அதன் விளைவினால் முன்பு, ''மனிதனைக் காணோம்!'' என்ற சிறந்த நூல் ஒன்றை எழுதி னார். அதனை நாங்கள் மகிழ்வோடு வாங்கி வெளியிட்டோம். அது மிகுந்த பாராட்டும் பெற்றது; திரைப் படமாகவும் உருவாகி வெளிவர இருக்கிறது.

இயற்கையிலே கருணையுள்ளம் படைத்த அவர் இப் பொழுது நமக்கு விழிப்பைத் தர, ''மனிதர்கள் ஜாக்கிரதை!'' என்று நமக்கு எச்சரிக்கை செய்கிறார்.

பண்பு, படிப்பினை, மனித வாழ்வு இவற்றையெல்லாம் மிக அழகாக எளிய சொல்லாடல் மூலம் இந்நூலில் விளக்கு கிறார். நாடகப் பாத்திரங்கள் அத்தனையும் இங்கே நடமாடும் மனிதர்களை நம்முன் புடம் போட்டு விளக்கு கின்றன. சிரிக்க வைத்துச் சிந்திக்க வைக்கும் ஆசிரியரின் இயல்பான கைவண்ணம் மிகவும் போற்றற்குரியதாகும். அவர்கட்கு எமது அன்பும் நன்றியும் உரியது.

அருட் பிரகாச வள்ளலாரின் கனிமொழிகள் நம் சிந்தை யில் எதிரொலி செய்தவாறு இருக்கும். அனைவரும் படிக்கத் தகுந்தது; அறிவுக்கேற்றது. படியுங்கள்.

—சேகர் பதிப்பகத்தார்

நாடகப் பாத்திரங்கள்

முருகன்	...	கதாநாயகன்
விருத்தாசலம்	...	முருகனின் எசமான்
பொன்னம்பலம்	...	முருகனின் தாய்மாமன்
பார்வதி	...	விருத்தாசலத்தின் மகள்
அஞ்சுகம்	...	பொன்னம்பலத்தின் மகள்
மிஸ்டர் பாபு	...	அரசியல்வாதி
தர்மலிங்கம்	...	வட்டிக்கடைக்காரர்
பெரியசாமி	...	எழுத்தாளர் மேதை
வேலு	...	முருகனின் நண்பன்

மற்றும் மளிகைக்கடைக்காரர், பாதிரியார்.

மனிதர்கள் ஜாக்கிரதை

காட்சி : 1

இடம் : கோவில்.

பாத்திரங்கள் : முருகன், வேலு.

[முருகன் பூமாலையுடன் வந்து, சுற்றுக் கட்டிடமே இல்லாத கோயில் சிலையைக் கட்டித் தழுவித் தொட்டு வணங்கிப் பயபக்தியுடன்]

முருகன் : சாமி! உம்மைச் சில பேர் உண்டுன்னு சொல்றுங்க! பலபேர் இல்லேன்னு சொல்றுங்க! இன்னும் சிலபேர் உண்டுன்னு மனசிலே நினைச்சிக்கிட்டு வெளியிலே இல்லேன்னு பேசிக்கிறுங்க! இன்னும் சிலபேரு நீ இல்லேன்னு மனசிலே நினைச்சிக்கிட்டு வெளியிலே நீர் உண்டுன்னு பக்தி வேஷம் போட்டுக் கிட்டிருக்காங்க. நான், அந்த மாதிரி வம்புக் கெல்லாம் போகலே! உம்மை, எப்பவும் பரிபூரணமா யாரையும் விடவும் அதிகமா நம்பிக் கும்பிடறேன். நீர் எனக்குச் செய்யவேண்டியது என்னன்ன, என்னே

முன்னுக்குக் கொண்டு வந்து இந்த உலகமே புகழுறப் போல ஆக்கிடணும். ஆமா...அவ்வளவு தான்.

[பணிவுடனும், பக்தியுடனும், மீண்டும் சுற்றி வந்து வணங்கிவிட்டு, இரண்டு பூவை எடுத்துக் காதில் சொருகிக்கொண்டு வரும்போது, அவன் வாழும் குடிசைப் பகுதியில் உள்ள வேலு வந்து]

வேலு : என்ன முருகா! பிரார்த்தனை பண்ணி வரமெல்லாம் கேட்டாச்சா. இதை நீ விடமாட்டே போலிருக்கே. ஊரிலே உலகத்திலே என்னடான்னு அன்றாடம் காலம் கழிக்கவே குட்டிக்கரணம் போட்டுக்கிட்டு இருக்கான். நீ என்னென்னு பேரு புகழுன்னு சாமியைப் பிடிச்சு அசைச்சுக்கிட்டு இருக்கே. ஆமாம், நான்தான் கேக்கிறேன். புகழிலே உனக்கு அப்படி என்னதான் மயக்கம்?

முரு : வேலு அண்ணே! புகழிலேதான் அண்ணே இந்த உலகமே முன்னேறி வருது. அதோ அந்த ஆட்டைப் பாத்தியா! அதுக்குப் புகழிலே ஆசையில்லே! அதனுல்தான் அசோகர், ஔரங்கசீப் காலம் முதலே ஒரே நிலையிலிருந்து, ஒரே மாதிரியே கத்திக்கிட்டிருக்கு. குதிரையைப் பாரு, குலோத்துங்கரை ஏத்திக்கிட்டுப் போறபோது எப்படி கனைச்சுதோ, அப்படியேதான் இப்ப கிண்டி ரேசிலே ஜாக்கி ஏறும் குதிரையும் கனைக்குது! மாடு, கழுதை இதெல்லாம் கூட முன்னே இருந்த நிலையில்தான் இப்பவும் இருந்துக்கிட்டு இருக்கு. அண்ணே தாசியையே, உத்தமின்னு புகழு...அவளுக்கே உத்தமியாயிட்டா என்னன்னு புதுவாழ்விலே ஒரு டேஸ்ட் வந்திடும். மனித வளர்ச்சியே புகழ்லேதாண்ணே இருக்கு.

உலகத்திலே நாமதான் வளர்ந்துக்கிட்டு இருக்கோம். எப்படி வளர்ந்தோம்? புகழிலே இருக்கிற ஆசை யிலேதானே? மனுஷனுக்கு இருக்கிற சிறப்பான அம்சமே இதுதாண்ணே. இதைப் போய் வேண் டாங்கிறியே.

வேலு : அது சரி. புகழ் வாங்கிறதுன்னு அதுக்கு ஒரு தகுதி வேண்டாமா? நீயெல்லாம் புகழுக்கு ஆசைப் பட்டா...

முரு : வேலண்ணே! என்ன இப்படி சொல்லிட்டே. என்னைவிட எப்படி எப்படியோ நிலையில் இருந்த வங்க எல்லாம் உலகப் புகழ் வாங்கி இருக்காங்க. காலுக்குச் செருப்பு தைச்சவரெல்லாம் காலத் தையே மாத்தியிருக்கார். பசிக்குச் சோறில்லாம ராத்திரி மலை வாழைப்பழத்தை வாங்கி உறிச்சு சாப்பிட்டவர் மணி மண்டபம் கட்டி நினைக்கிற அளவுக்கு உசந்திருக்காரு. ஒருத்தரைக் கண்டதும் சம்பளம் தரலைன்னு பல பள்ளிக்கூடங்கள் கதவை மூடிக்கிடுச்சாம். அப்புறம் அவரே முயற்சி யாலே முன்னுக்கு வந்து பல பள்ளிக்கூடங்களைக் கட்டி, கதவைத் தன் கையாலே திறந்து வைச்சிருக்கார் அண்ணே! அவரு யாரு தெரியுமா? அவர்தான் நம் கலைவாணர் என். எஸ். கே! அவ ரெல்லாம் எனக்கு வழிகாட்டியாயிருக்காரு. நீ என்னைப் போய் முன்னுக்கு வர முடியாதுங்குறியே!

வேலு : உங்கிட்டேதான் சபல புத்தி இருக்கிறதே. ஒரு இடத்திலே ஒரு தொழில்லே நிலைச்சு வேலை பார்க்க மாட்டேங்கிறியே. எலிப்பொறிலே சிக்கின எலி, சும்மா அதுக்குள்ளேயே சுத்திச் சுத்தி ஓடுற மாதிரி சதா இந்த சாந்தி நகரையே சுத்திக்கிட்டிருக் கிறியே. நீயெல்லாம் புகழை விரும்பினா நடக்குமா?

முரு : சலனமில்லாட்டி வாழ்க்கையே இல்லண்ணே! அதோ அந்தக் குளத்தைப் பாரு. சின்ன அலைகள் சலனமா காட்சி தர்றதாலேதான் பாக்கிறதுக்கு அழகா இருக்கு. காற்றிலே சலனமிருந்தாதான், நான் பேசறது உன் காதிலே விழுகுது. ஒளியிலே சலனமிருக்கிறதால்தான் நீ என்னைப் பார்க்க முடியுது. ரத்தத்திலே சலனமில்லேன்னா—நான், ஏன், என்னையே சொல்லிக்கிறேன்—நீ செத்துப் போயிருப்பே! படங்கள் சலனமாகிக்கிட்டிருக்கிற தினாலேதான், திரைப்படக் கலையே வந்தது. அப்படியே ஒரே தினுசா, ஸ்டெடியா வாழ்க்கை நடந்தா, வாழ்க்கைத் திரைப்படம் மாதிரி இருக்காது. சிலைடு மாதிரியேதான் நிற்கும்! தெரிஞ்சுக்க!

வேலு : இப்படியெல்லாம் பதில் பேசிக்கிட்டேயிருந்தா நீ இப்படியே இருக்க வேண்டியதுதான். வளரனும்னு நினைக்கிறவன் யாரும் ஏதாவது குத்தம் சொன்னா அதிலேயும் ஏதாவது தேவையான விபரம் இருக்குதான்னு சீர்தூக்கிப் பார்க்கணுமப்பா!

முரு : சரி! இப்ப என்னதான் செய்யச் சொல்ற?

வேலு : புகழ் வேணும்னா, இப்படியே காதிலே பூவைச் சொருகிக்கிட்டு, சாமியைக் கும்பிட்டுத் திரிஞ்சா புகழ் வந்திடுமா? இப்படி கும்பிடற காட்சிதான் கடவுளுக்குப் பிடிக்கும்னா, உன் கை இரண்டையும் ஒட்ட வச்சேதான் படைச்சிருப்பாரே. அவருதான் கையை 'பிரீயா' விட்டுட்டாரே. பாடுபடுங்கடா, முன்னேறுங்கடான்னு! இந்தா பாரு! ஒரு ஊருக்குப் போகணும்னா, அந்த ஊர் போற ரயில்லேதான் ஏறிக்கிடணும். சும்மா குட்ஸ் ஷெட்டிலே நிக்கிற கேரேஜிலே உட்கார்ந்து ஊர் வரலியேன்னு துடிச்சா

நடக்குமா? புகழ் வேணும்னு அதுக்குள்ள வழி முறையைப் பாரு! கடினமா பாடுபடு!! சுறுசுறுப்பா யிரு!! குட்டை நீர் மாதிரி தேங்கி நிற்காதே! ஆத்து நீர் மாதிரி சதா ஓடிக்கிட்டே இரு.

முரு : அப்பவும் அணைகள் தடுக்குமே.

வேலு : அதையும் உடைச்சாத்தான் கடலுங்கிற புகழை நீ சந்திக்க முடியும். தெரிஞ்சுதா? நீ எங்களோட வந்து கடினமா பாடுபட்டாலே முன் னுக்கு வந்திடலாமே. நீதான் இந்த சாந்தி நகர் பணக்காரங்க நிழலிலேயே ஒதுங்கிப் பழக்கப் பட்டுட்டியே.

முரு : அதை மட்டும் சொல்லாதே. எங்கிட்டே அவுங்க எவ்வளவு பாசமா இருக்காங்க தெரியுமா? ஏன் நீங்க அவங்களை தப்பா நினைக்கிறீங்க.

வேலு : முருகா! அவங்க உங்கிட்டே பழகுறுங்கன்னு ஏதாவதொரு பயனுக்குத்தானப்பா பழகுறுங்க! திடீரென ஒரு நாள் அவங்க வீட்டிலே உள்ள நாய் கள் பேச ஆரம்பிச்சுட்டுதுன்னு வச்சுக்க. உடனே என்ன செய்வாங்க தெரியுமா? பேசுற பிராணி இரண்டு எதுக்குன்னு, நாயை மட்டும் வச்சுக் கிட்டு உன்னையெல்லாம் அனுப்பிடுவாங்கப்பா.

முரு : (கலக்கத்துடன்) அப்படியா!

வேலு : அங்கேயுள்ள சோபாவை நீயெல்லாம் துடைக்க முடியுமே தவிர, அதில் உட்கார முடியுமா? ரேடியோ பாடறபோது, நீ கேட்க முடியுமே தவிர, நீ விரும்புறபோது அது பாடுமா? அழுகாத பழம் எப்பவாவது உனக்குக் கிடைச்சிருக்கா? உணவு கெட்டுப்போன பிறகுதானப்பா உன் நினைவே அவுங்களுக்கு வரும்.

முரு : அது சரியண்ணே! அந்த உணவு கெட்டுப்போனு கூட, அதிலே உப்பு சேர்ந்துதானே இருக்குது! அதுக்கு நான் துரோகம் செய்யமாட்டேன். என் காது கேட்க அவுங்களைத் தாக்கிப் பேசாதே!

வேலு : முருகா! பணக்காரங்க அன்பு ஏழைக்கு உதவாதப்பா! வாசனைப் பன்னீர் தாகத்துக்கு உதவுமா? ஒரு விஷயம் சொல்றேன். புரிஞ்சுக்க. இப்ப நாங்க எங்கே போயிட்டு வர்ரோம் தெரியுமா? நம்ம குடிசைப் பகுதியிலே அங்கே இருக்கிற கோழிகள், இவுங்க பங்களா பக்கம் பறந்து வந்துடுதாம். அங்கேயுள்ள பசங்க கோவணத் தோட இங்கே வந்திடுறுங்களாம். பாக்கவே சகிக்கலையாம். அதாலே மத்தியிலே குறுக்குச் சுவர் வைக்க, அவங்களே எங்களைக் கூப்பிட்டு, வைக்கச் சொன்ஞங்க. எங்க கையாலேயே சுவரு வைச்சிட்டுக் கூலியை வாங்கிட்டு வர்ரோம். இப்படி மத்தியிலே ஒரு சுவரே இருக்கு. நீ என்னமோ, பாவம், புரியாமப் பேசற!

முரு : இந்தா பாரு. அவங்களை என் முன்ஞலே தாக்கிப் பேசாதே. நன்றி என்னைப் பிடிச்சு உலுக்குது.

வேலு : ரொம்பத்தான் நன்றின்னு பேசாதேப்பா! முந்தின ஜென்மத்திலே நீ நாயாகப் பிறந்து அவங்க வீட்டிலேயே வளர்ந்தேன்னு சொல்லிடப் போருங்க. எனக்கென்ன? நான் போய்ட்டு வர்றேன். குடிசையிலே உன் மாமன் பொன்னம் பலம் தேடிக்கிட்டு இருக்காரு. அடிக்கடி வந்து பார்த்துக்க.

[போகும்போது அலட்சியமாக சல்யூட் அடிக்கிருன்.]

முரு : பாத்தியா, பாத்தியா! எனக்கே பேரு, புகழு இருந்தா, இப்படி அலட்சியமா ஒரு விரலாலே சலாம் வச்சுட்டுப் போவியா. 'மிஸ்டர் முருகன்! நான் போயிட்டு வரட்டுங்களா'ன்னு ரெண்டு கையாலே கும்பிடுவேல்ல. இதுக்குத்தான்யா புகழ் வேணுங்கிறது. சரி; போ, போ!

[அவன் போனதும் தனக்குள் யோசிக்கிருன்.]

ம்...என்ன சொன்னுன்! கடினமா பாடுபட்டா, சுறுசுறுப்பா இருந்தா முன்னுக்கு வந்திடலாம். புகழ் கிடைக்கும். ம்...!

[ஒரு முடிவுடன் போகிருன்.]

திரை

கட்சி : 2

இடம் : பங்களா.

பாத்திரங்கள் : முருகன், விருத்தாச்சலம்.

[விருத்தாச்சலம் பிள்ளை மூக்குக் கண்ணுடியைத் துடைத்துப் போட்டுக்கொண்டு பேப்பர் படித்தல்.]

விருத்தாச்சலம் : தலைவர்களுக்கு மக்கள் செய்த உபதேசம்...ம்...இது என்னடா இது அதிசயமாயிருக்கு. நல்லா பார்ப்போம்.

[மீண்டும் கண்ணுடியைத் துடைத்து]

மக்களுக்குத் தலைவர்கள் செய்த உபதேசம்.

முருகன் : இதையா எஜமான் மாத்திப் படிச்சிட்டீங்க!

விருத் : ஆமாம். மாத்திப் படிச்சிட்டேன். தலைவர்களுக்கு மக்கள் உபதேசம்னு. அநேகமாக இன்னும்

கொஞ்சம் நாளிலே இப்படித்தான் நடக்கும் போலிருக்கு!

முரு : யஜமான்! அது என்னமோ போங்க! இப்படியே வெளியே உள்ள கண் பார்வை மங்க மங்கத்தான் உள்ளே அகக்கண் பார்வை தெளிவாகுது. இருந் தாலும் அகக் கண் மட்டும் இருந்தா உலகத்துக்குப் போதாதுங்க! வெளிக் கண் வியாதியையும் கொஞ் சம் குணப்படுத்திக்குங்க!...

விருத் : என்னடா செய்யறது! கண் பார்வை சம்பந்த மான வைத்திய ஆராய்ச்சிக்குப் புஸ்தகங்களே வாங்கிப் படிச்சு மேலும்தான் கண் கெட்டுப் போயிருக்கு. மாலைக் கண் வியாதி குணமாகட் டும்னு திருச்செந்தூர் முருகனுக்குத் தங்கத்திலே கண் செஞ்சு போடறேன்னு நேர்ந்துக்கிட்டேன்!

முரு : தங்கத்திலே!

விருத் : ஆமாம்!

முரு : அதுவும் இப்ப!

விருத் : ஆமாம். அப்படியும் செஞ்சு போட்டாச்சு. கண்ணு சரியா வரலையே!

முரு : ஒரு தரம் நேராவே போயிட்டு வந்திடுங்களேன் எஜமான்!

விருத் : அப்படியும் எனக்கு யோசனைதான். அதுக்குள்ள கால்லே வாதம் வந்து நடக்க முடியலையே! எப்படி போய்ட்டு வர்றது. இந்த வாதம் குணமாயிடுச்சுனு சங்கரநயினர் கோவிலுக்கு தங்கத்திலே ஒரு காலு செஞ்சு போடுறதா நேர்ந்துக்கிட்டேன்.

முரு : தங்கத்திலே.

விருத் : ஆமாம்.

முரு : அதுவும் இப்ப.

விருத் : ஆமாம். அப்படியும் செய்து போட்டேன். குணமாகலியே. இது சம்பந்தமாக யோசிச்சு, யோசிச்சே ஒரு தலைவலி வேறே. இது குணமாகட்டும்னு கழுகுமலை கந்தசாமிக்கு ஒரு தலையே தங்கத்திலே செஞ்சு போடறேன்னு நேர்ந்துக்கிட்டேன்.

முரு : தங்கத்திலே.

விருத் : ஆமாம்.

முரு : அதுவும் இப்ப.

விருத் : ஆமாம். அப்படியும் செஞ்சு போட்டேன். நடக்கலையே.

முரு : ஏன் எஜமான், ஒண்ணு செய்யுங்களேன். தினம் மனமுருகி வீட்டிலே இருந்தபடியே தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திருவருட்பா பாடுங்களேன்.

விருத் : எப்படிப் பாடுகிறது! தொண்டையிலே கட்டி வந்து தொந்தரவு தருது. இது குணமாகட்டும்னு பழனிமலைச்சாமிக்கு தங்கத்தினாலே ஒரு தொண்டையே செஞ்சு போடறேன்னு வேண்டிக்கிட்டேன்.

முரு : தங்கத்திலே.

விருத் : ஆமாம்.

முரு : அதுவும் இப்ப.

விருத் : ஆமாம். அப்படியும் செஞ்சு போட்டேன். அப்படியேதான் இருக்கு. இது போக மூணு மாசமா புதுசா ஒரு தொந்தரவு.

முரு : என்னுங்க...?

விருத் : உடம்பு பூராவும் ஒரே நமைச்சல். என்னுன்னு தெரியலே!

[திடுக்கிட்டு அருகில் உட்கார்ந்திருந்த முருகன் சற்றுத் தள்ளி நின்று கேட்டல்]

ஒரு வேளை—''மத்தது'' ஸ்டாட்டிங்கோன்னுகூட பயமாயிருக்கு! உடம்பு பூராவுமே இருக்கு. இதுக்கு என்ன செய்யறதுன்னே தெரியலே?

முரு : ஏன் எஜமான். உடம்பு பூராவும் இருக்குதா? அப்ப உங்களை மாதிரியே ஒரு உருவம் தங்கத்திலே செஞ்சு போட்டுடுங்களேன்.

விருத் : தங்கத்திலே.

முரு : ஆமாம்.

விருத் : அதுவும் இப்ப.

முரு : ஆமாம்.

விருத் : பரவாயில்லியேடா. இதுவரை உடம்பிலே ஒவ்வொரு பார்ட்டா செய்து ரெடிமேடாவே வச்சிருந்தேன். இனிமே முழு உருவமே செய்யச் சொல்லி, ஆர்டர் கொடுக்க வேண்டியதுதான் போலிருக்கு!

முரு : யசமான்! ஒண்ணு செய்யுங்க! நம்ம மருதமலை யோரத்திலே ஒரு கோவில் இருக்குதாம். யாருக்காவது நோய் நொடி வந்தா அவுங்களுக்கு இருக்கிற சொத்து, பணம், காசு எல்லாத்தையுமே அந்த சாமிக்கு எழுதி வச்சா போதுமாம். உடனே ஒரு மண்டலத்திலே ஆரோக்கியம் வந்திடுமாம்.

விருத் : வேண்டாண்டா. அப்படி ஆரோக்கியம் எனக்கு வேண்டாண்டா. வள்ளுவர்கூட பொருள் இல்

லார்க்கு இவ்வுலகம் இல்லேன்னு சொன்னுரே தவிர, ஆரோக்கியமில்லா்தவனுக்கு இவ்வுலகமில்லேன்னு சொல்லலேயே! பணமிருந்து நோயிருந்தா டாக்டரை வரவழைச்சு குணப்படுத்திக்க முடியும். ஏழையாயிருந்தா பட்டினி, வந்திட்டா...! அப்புறம் அந்தத் தொடர் கதைக்கு முடிவே கிடையாதுடா?

முரு : யசமான்! ஏழ்மைன்னு ஏன் இப்படிப் பயப்படு றீங்க?

விருந் : உலகத்திலே பயப்பட வேண்டிய ஒரே விஷயமே அதுதாண்டா. இப்ப நாம ஓர் கல்யாண வீட்டுக்குப் போமுேம்னு வைச்சுக்க. அங்கே திடீர்னு ஒரு தங்க மோதிரத்தைக் காணுேம்னு வைச்சுக்க. நானே எடுத்திருந்தாலும் என்னேச் சொல்லமாட்டான். நீ ஏழைங்கறதுனுலே உன்னேத்தான் சொல்லுவான். எனக்கு நிஜமாகவே காசநோய் இருக்குதில்லே! இதை சாதாரண இருமல்னு நினேச்சுப் பழகுவான். நீ சும்மா ஜலதோஷத்தினுலே இருமினுலும், காசம் 'அட்டேக்' ஆயிருக்குன்னு ஒதுங்குவான் தெரியுமா! சாகிறதிலேகூட பணக்காரன் செத்தா தான் பலமா சத்தம் போட்டு அழுவாங்கடா. ஏழை செத்தா விஷயமே ஏழெட்டு நாள் கழிச்சுதான் தெரியும்!

முரு : என்னமோ எசமான். நீங்கதான் பணக்காரங் களேப் புகழ்ந்து பேசறீங்க. அந்தக் குடிசைப் பக்கத் திலே உள்ள எங்க வேலு அண்ணே எல்லாருமே தாக்குறுங்க தெரியுமா?

விருந் : உலகம் புரியாதவங்க. இந்த உலகத்திலே பணக் காரங்கன்னு அவங்க ரெண்டாவது கடவுள் மாதிரி

தாண்டா; இரண்டாம் ஜார்ஜ் மன்னன் இரண்டாவது ஜேம்ஸ்னு சொல்றுங்களே! அப்படி!

முரு : நீங்க இப்படி சொல்றீங்க. அவங்க என்னுன்னு பணக்காரங்க கிணத்துக்குச் சமம், அதிலே போய் விழுந்திடாதேன்னு சொல்றுங்க!

விருத் : இந்த மாதிரி கிணறுகள் இருக்கிறதிலுலேதான் அவங்க தேவைப்படுறபோது தண்ணீர் வாரிக்க முடியுதுன்னு சொல்றதுதானே. இந்தப் பதிலைக் கூடச் சொல்ல முடியாதவன் எபபடித்தான் புகழ் வாங்கி முன்னேறப் போறயோ?

முரு : யசமான்! நான் முன்னேற வழி கண்டு பிடிச்சுட்டேன். கடினமாகவும், சுறுசுறுப்பாகவும் பாடு பட்டாத்தான் முன்னேற முடியும்னு ஒருத்தர் சொன்னுரு. இனி பாருங்களேன். அப்படியே பாடுபட்டு, இது டிசம்பர்தானே, ஜனவரி, பிப்ரவரி, மார்ச், எப்ரல், மே-க்குள்ளே முன்னேறிக் காட்டுறேன்.

விருத் : அதெல்லாம் இருக்கட்டும். முதல்லே இந்தக் கடிதத்தைக் கொண்டுபோய் மில் ஓனர் செல்வநாயகம் வீட்டிலே கொடுத்திட்டு வா. நீ முன்னேற்றத்துக்கு வர்றதுக்குள்ள என் வேலையை எல்லாம் செஞ்சு முடிச்சுடுப்பா!

முரு : சரிங்க எசமான்.

[முருகன் போகிறுன்.]

திரை

காட்சி : 3

இடம்: பொன்னம்பலம் வீடு.

பாத்திரங்கள்: பொன்னம்பலம், அஞ்சுகம்.

[பொன்னம்பலம் வருகிருர்.]

பொன்னம்பலம் : பாரதியார் என்னடான்னு தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்னுரு! இப்ப என்னடான்னு தனி ஒருவனுக்கு உணவு இல்லை எனில் தனியாய் போய்ச் சாப்பிடுவோம்கிருன். சாப்பிடாதவன் வந்தான்னு, ஓட்டல்லே தனியா போய் ஒதுங்கிடருன். காலம் அப்படியிருக்கு!

அஞ்சுகம் : என்னப்பா, தனியா பேசிக்கிட்டே வர்றீங்களே. என்ன சங்கதி?

பொன் : இந்தா பாரு. நான் பசியா வந்திருக்கேன். போய்ச் சாப்பாடு எடுத்து வை!

அஞ் : என்னப்பா டிபன் பாக்ஸ்லே, டிபன் கொடுத்து விட்டேனே, சாப்பிடலையா. டிபன் பாக்ஸ் எங்கே. என்ன விஷயம்பா?

பொன் : அஞ்சுகம், ஒரு ஏழை பசிக்குதுன்னு ஒரு ஆளு கிட்டே கேட்டுக்கிட்டு இருந்தான். அந்த ஆளு என்னடான்னு இந்த தனி ஒருவனைத் தவிக்க விட்டுட்டு, தனியா டிபன் சாப்பிட போயிட்டான். அதனுலே நான் நீ கொடுத்த டிபனை, டிபன் பாக்சோட அவன் கிட்டே கொடுத்துட்டு, அவன் பசி மயக்கத்தை நான் வாங்கிக்கிட்டு வந்திருக்கேன்.

அஞ் : நம்ம தரத்துக்கு, நம்ம வசதிக்கு இதெல்லாம் எதுக்கப்பா!

பொன் : அவன் பசிங்கறுன், என்னுலே தாங்க முடியலே- கொடுத்திட்டேன். இந்த ஊர்லே ஒரு அன்னச் சத்திரம் ஏற்படாத வரைக்கும் இந்தக் கஷ்டம் இருந்துகிட்டேதான் இருக்கும். என் கண்ணுள்ள போதே ஒரு அன்னச் சத்திரம் இந்த ஊர்ல உண் டாக்கி எல்லோருக்கும் சோறு போடலேன்னு எம்பேரு பொன்னம்பலம் இல்லே. இந்தா பாரு அஞ் சுகம்! காக்காய்களைப் பாத்தியா? காக்காய்க்கு நம் போல அதிக வார்த்தை தெரியலே. ஒரே ஒரு வார்த்தைதான் பேசத் தெரியும், காகான்னு! அந்த ஒரு வார்த்தையிலேயே எல்லா காக்காயையும் கூப் பிட்டு எவ்வளவு ஒற்றுமையா சாப்பிடுது. மனு சனுக்கு எவ்வளவு வார்த்தை தெரியும். பிரயோ ஜனம்?

அஞ் : அப்பா, காக்கா கூப்பிடறது, சாப்பிட இருக்கா தப்பா. பயந்து போய்தான் கூப்பிடும்னு நினைக் கிறேன்.

பொன் : ஆமாம்மா, இந்த 66-வது வருஷத்து காக் காய்ங்க, பயந்து போய்தான் கூப்பிட்டாலும் கூப்பிடும்மா! ஆமா! நம்ம பக்கத்து வீட்டு வேலாயி சௌக்கியமா இருக்காளா?

அஞ் : ரொம்ப முடியலேன்னு பக்கத்து டவுன்லே உள்ள ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போயிருக்காங்க.

பொன் : பாத்தியா, பாத்தியா, இதுக்குத்தான்! ஒரு தரும ஆஸ்பத்திரி கட்டணும்னு சொல்றேன். என்னிக்கு இந்த ஊர்லே ஒரு ஆஸ்பத்திரி கட்டி மிக்சர் வாங்கிக் குடித்து உனக்கும் வாங்கிக் கொடுக் கிறேனே அப்பதான் என் மனசு குளிரும். டவுனுக்குக் கொண்டு போயிருச்காங்க. போற வழியிலே

என்ன ஆச்சோ! என்ன சமாசாரமோ! தெரியலே. இப்ப உலகத்திலே எந்தப்பக்கத்திலே திரும்பினுலும் துயரக் காட்சிதான். அஞ்சுகம், இன்னொரு சேதி உனக்குத் தெரியுமா?

அஞ் : என்னப்பா!

பொன் : யாரோ அனுதையாம். பரிதாபமாயிருந்துது! அண்ணன் காலமாயிட்டானும், அம்மா செத்து போயிட்டாளாம், அப்பா இறந்து போயிட்டாராம், மாமா ஒருத்தர் இருந்தாராம். அவரும் மறைஞ்சுட்டாராம். எங்காவது தங்க இடம் கிடைக்காதான்னு தவிச்சான். அந்த அனுதையைக் காப்பாத்த நானே ஒரு பொய் சொன்னேன். பக்கத்து ஊர்ல ஒரு பெரிய பணக்காரரு, சின்ன வயசிலேயே காணும போன தன் மகனை நினைச்சு வருந்திக்கிட்டு இருந்தாரு. இந்த பையனையும் அவரையும் ஒருவாறு சரிகட்டி இவந்தான் உங்க மகன்னு கொண்டு போய் விட்டுட்டேன். அவன் அங்கே செல்லமா இருக்கான். பொய் சொன்ன பாவம் எனக்கு வந்தாலும் சரி. அந்த அனுதை சந்தோஷமா இருந்தா போதும்ன்னு முடிவு கட்டிட்டேன். இந்தா பாரு அஞ்சுகம்! ஒரு அனுதை நிலயம் கட்டுறவரைக்கும், நான் சும்மா இருக்கப் போறதில்லே.

அஞ் : வீட்டு வாசல்ல வெயிலுக்கு ஒரு பந்தல் போடச் சொல்லி மூனு மாசமாச்சு! அதுவே உங்களாலே முடியல்ல. அன்ன சத்திரம், தர்ம ஆஸ்பத்திரி, அனுதை விடுதியெல்லாம் கட்டறதுன்னு நல்ல விஷயம்தான். ஆனல், நமக்குத் தகுதி இருக்காப்பா!

பொன் : இந்த மாதிரி சமாச்சாரத்துக்கெல்லாம் மனுஷங்கிற தகுதி போதாதா! நான் என்னம்மா

செய்யட்டும்! ஏன் வாழ்க்கையே எனக்கு நினைவில்லே யேம்மா!... நம்ம குப்பத்திலே பாரு! எத்தனையோ பேரு கஷ்டப்படுறுங்க! அவுங்களுக்கு ஏதாவது இந்த மாதிரி உதவி செய்யனும்னு துடிப்பாயிருக்கு! அவங்க நிலைமையை நினைச்சா மனசுக்கு சங்கடமா யிருக்கு!

அஞ் : உங்களை நினைச்சா அதிசயமாயிருக்கப்பா!

பொன் : இது என்னம்மா அதிசயம். மனுசங்க கஷ்டப் படுறதைப் பார்த்துதானே கவலைப்படறேன்! அருட்பிரகாசர் வள்ளலார், இராமலிங்க சுவாமிகள் வாடிய பயிரைக் கண்டே வருத்தப் பட்டிருக் காரம்மா! இந்த உலகத்தைப் பாத்து அவர் மனசு கஷ்டப்பட்டு என்ன பாடிருக்குது தெரியுமா?

> "பட முடியாது இனி துயரம் அரசே
> பட்டதெல்லாம் போதும் அரசே!"

அஞ் : என்னப்பா இது! நீங்களும் வர, வர, எங்க சின்ன எசமானியம்மா பார்வதி மாதிரி படிச் சதையே பேச ஆரம்பிச்சுட்டீங்களே!

பொன் : என்னம்மா!

அஞ் : உங்க கிட்டே சொல்ல வேண்டாம்னுதாம்பா நினைச்சேன். சொல்லாம முடியலே!

பொன் : என்னம்மா! சும்மா சொல்லு!

அஞ் : விருத்தாச்சலம் பிள்ளை வீட்டு வேலையை விட் டுடலாம்னு தோணுதப்பா! அங்கே அவர் மகள் பார்வதி தொல்லே பொறுக்க முடியலே! சதா படிப்பு படிப்புன்னு படிப்பைப்பத்திப் பேசி, என்னை ரொம்ப தொல்லேப்படுத்துது!

பொன் : என்ன?

அஞ் : வாஸ்கோடா காமா இந்தியாவுக்கு எப்போது வந்தார்னு என் கிட்டே கேட்டு வேதனைப்படுத்து துப்பா! கலிலீயோ என்ற பெரிய விஞ்ஞானி கண்டு பிடிச்சதை சொல்லலே உன் காதைத் திருகுவேன்னு என் கதைப் பிடிச்சுக்கிட்டுதப்பா!

பொன் : ஐயைய்யோ...

அஞ் : யாரோ ஜோன் அப் ஆர்காம், தீ வைத்துக் கொளுத்தும் போதும்கூட, கொள்கையிலே தீவிரமா இருந்தாளாம். சாந்த்பீபி பெரிய சண்டை போட்டாளாம்! அரிசி கல் பார்க்கிற முறத்தை வைச்சு, நம்ம பொம்பளை ஒருத்தி புலியைத் துரத்தினாளாம்! இதையெல்லாம் சொல்லி என்னை சங்கடப்படுத்துதப்பா...!

பொன் : அஞ்சுகம்! அவர் செலவழிச்சு படிக்கவச்சதை உனக்கு அது இலவசமா சொல்லித் தருது. கேட்டுக் கியேம்மா...!

அஞ் : கேட்டுக்கலாம்பா! அது என்னமோ, நான் இதை யெல்லாம் மறுக்கிற மாதிரி அடிச்சுப் பேசுது. இதைக் கேளுங்கப்பா...! சமையலுக்கு கீரை பறிச்சு வச்சுக்கிட்டிருந்தா, அடியே பாவி! ஏன் இதைப் பறிச்சே. ஜகதீஷ்சந்திரபோஸ் என்ன சொல்றார் தெரியுமா. தாவரங்களுக்கு உயிர் இருக்குதுன்னு சொல்றார். நீ இப்படி கீரையைப் பறிச்சு தாவரக் கொலை பண்ணிட்டியேன்னு தடபுடல் பண்ண ஆரம்பிச்சுட்டுது.

பொன் : வேடிக்கையாத்தான் இருக்கு.

அஞ் : இதையெல்லாம் கூட பொறுத்துக்கலாம்பா. ஏதோ ஒரு மருத்துவ ஆராய்ச்சி பண்ணிக்கிட்

டிருக்காம். அதைப் பத்தியும் பேசுது. அதாவது உலகத்தில் இதுவரைக்கும் யாருமே கண்டுபிடிக்காத ஊசி மருந்து கண்டுபிடிச்சிருக்காம். ஒரு தரம் அதைப்போட்டுக்கிட்டா பணத்திலே ஆசை குறைஞ் சுடுமாம். அதைத் தொடர்ந்து பாசம் வளர்ந்து பாவம் குறைஞ்சுடுமாம். இப்படி சொல்லி ஒரு ஊசியை எடுத்து வைச்சுக்கிட்டு என் கையிலே குத்த வந்திடுச்சு அப்பா. நான் ஏதோ நாலு காசு சேரா தான்னு துடிச்சுட்டிருந்தா!

பொன்: ஆமாம்மா! அப்படியெல்லாம் ஊசி மருந்து கண்டு பிடிக்க முடியுமாம்மா...! அது வந்தாதான் எவ்வளவோ சௌகர்யமாப் போச்சே. நம்ம நாட் டிலே எல்லாருக்கும் ஒருதரம் போட்டு திருத்திட லாமே. ஆனு ஒரே ஒருத்தருக்கு மட்டுமே அந்த ஊசி தேவையில்லம்மா!

அஞ்: அவர் யாருங்கப்பா? நீங்களா?

பொன்: இல்லேம்மா! எனக்கு ஏது அந்தப் பக்குவம்! அவர்தாம்மா பூதான முனிவர் விஞேபாபாவே! அவரைச் சொல்றேன்.

அஞ்: அப்படியா! அப்பா இன்னும் ஒரு விஷயம் கேட் டீங்களா. அவங்க அம்மா படத்துக்கு பூஜை பண் ணும்போது இங்கிலீஷிலேயே தேவாரம், திரு அருட் பால்லாம் படிக்குதுப்பா! என்னமோ அங்கு இருக் கவே எனக்குப் பிடிக்கலேப்பா!

பொன்: அவசரப்படாதே அஞ்சுகம்! உனக்கு ஒரு அக்காள் அப்படி இருந்தா, என்ன பண்ணுவியோ அப்படியே நினேச்சுக்கியேன். கொஞ்ச நாள் பொறு மையுடன் அங்கே வேலே பாரு. இன்னும் ஒரு சமாச் சாரம் வர்ற சித்திரையிலே உனக்கும் நம்ம முரு

கனுக்கும் கல்யாணம் பண்ணி வைக்கலாம்னு தீர்மானிச்சிருக்கேன். அதுக்கு அந்த விருத்தாச்சலம் பிள்ளேக்கிட்டேதான் கொஞ்சம் பணம் கேட்கலாம்னு இருக்கேன். காரியத்தைக் கெடுத்துப் போடாதே. இந்தக் கல்யாணம் நடக்கணுமேன்னு சாமியைக் கும்பிட்டுக்கிட்டு இருக்கேன்.

அஞ் : *அது சரியப்பா! அதுக்குள்ளே அந்தம்மா கூடவே பழகிப்பழகி நானும் அவங்க மாதிரியே சதா படிப்பு படிப்புனு ஆயிடுவேனோன்னு பயமாயிருக்கு! அந்த மாதிரி ஆயிடக் கூடாதேன்னு, இதுக்கும் சேத்து உங்கள் சாமிக்கிட்ட பிரார்த்தனை பண்ணுங்கிங்கப்பா.*

[போகிருள்.]

திரை

காட்சி : 4

இடம் : தெரு.

பாத்திரங்கள் : முருகன், பாபு வீட்டுக்காரர்.

[''தணிகாலசலம் வாழ்க'' என்ற வாழ்த்துக் குரல். 'தலைவர் தணிகாசலம் பேசுவார்' என்ற போஸ்டர்களைப் பார்த்தபடி முருகன் பெருமூச்சுடன் படிக்கிருன்.]

முருகன்: *ஐயோ! யார்யாரையோ ஊர்வலமாகக் கொண்டு போருங்களே. என்னையும் அப்படி நாலு பேருக்கு மத்தியிலே கொண்டுபோற நாள் எப்ப வருமோ? ''தலைவர் தணிகாசலம் பேசுவார்''. அடேயப்பா! எவ்வளவு பெரிய எழுத்திலே போட்டிருக்காங்க!*

ஒண்ணுன்னும், அவன் உயரத்துக்கே இருக்கும் போல இருக்கே! உம்...! நம்ம பேரும் எப்ப இப்படி வருமோ! தணிகாசலத்தோட வால்போஸ்டு பக்கந்தான் வரமுடியுது! அவரோட வாழ்க்கை அளவுக்கு எப்ப நெருங்க போறோம்! அப்பாட...!

[திண்ணையில் போய் அயர்ந்து உட்காருகிறான்.]

கடவுளே! கந்தப்பா!! கடினமா சுறுசுறுப்பா முன்னுக்கு வந்துடலாம்னு ஒரு பெரிய மனுஷன் சொன்னான். அப்படியே கேட்டு கடினமாப் பாடு பட்டேன். முன்னுக்கு வரமுடியலே! முதுகு வலி தான் மிச்சம். களைப்பும் சலிப்புந்தான் வந்ததே தவிர, உழைப்புக்குத் தகுந்த உயர்வு வரலே. இனி மேலும் இந்த ரூட்டிலேயே போறதா? இப்படி கடினமாப் பாடுபட்டு முன்னுக்கு வர்றதுக்குள்ளே மூச்சே நின்னு போயிடும் போலிருக்கே!

[கதவைத் திறந்து ஒருவர் வந்து]

ஒருவர் : யாரது! சோம்பேறி!! திண்ணையிலே வந்து இருந்துகிட்டு புலம்பறது. இப்படித்தான் சாது மாதிரி உட்கார்ந்திருந்துகிட்டு சமயம் பார்த்து உள்ளே வந்து பாத்திரம் பண்டங்களையெல்லாம் கட்டிக்கிட்டுப் போறதுக்கா? உம், உம்...இடத்தைக் காலிபண்ணு.

முரு : இந்தாப்பா! என்னை என்ன வேணும்னாலும் சொல்லு. திருடன் கிருடன்னு மட்டும் பேசாதே. ஆமா. பொல்லாத கோபம் வரும்!

ஒரு : இதோ பாரு. இது என் வீடு. ஆகவே இது என் திண்ணை! என் திண்ணையிலே வந்து உட்கார்ந்தா நான் அப்படித்தான் பேசுவேன். எழுந்திரு. உம். உம்...!

முரு : சரிதாய்யா! எழுந்திருன்னு எழுந்திரிஞ்சுட்டுப் போறேன். என்னமோ பெரிய சிம்மாசனம் மாதிரியும் அதிலே வந்து உட்கார்ந்த மாதிரியும் விரட்டுறியே.

[முருகன் எழுகிருன். வீட்டுக்காரர் கோபத்தோடு கதவைச் சாத்திவிட்டுப் போகிருர்.]

உம்! இப்படி விரட்ருன்! எனக்கே பேரும் புகழும் இருந்தா இப்படி விரட்டுவாஞ? அவனே உள்ளே கூப்பிட்டு வெள்ளித் தட்டிலே விருந்து வைக்க மாட்டாஞ? எல்லாம் மனுஷனுக்குப் புகழ் இருந்தா தானேயா! இதுக்குத்தானே நான் ஏதாவது துறையிலே புகழ் வாங்கிடனும்னு துடிக்கிறேன். நடக்க மாட்டேங்குதே!

[பாபு ஸ்டெயிலாக வந்து]

பாபு : முருகா! புகழ் வேணும், புகழ் வேணும்னு கடினமா பாடுபட்டா, புகழை நீ வாங்கிட முடியும்னு நினைக்கிறியா? அழுக்குமூட்டை சுமக்கிற கழுதைகளே விடவும், வயலிலே ஏர் உழுகிற எருதுகளே விடவுமா நீ பாடுபடப் போறே? அந்தக் கழுதையைக்கூட வேலே தீர்ந்துட்டா அடிச்சுப் பத்தருங்க! எருதுகள் கொஞ்சம் மெலிஞ்சதும் கசாப்புக் கடைக்காரன் கிட்டே தள்ளிடருங்க! கடினமா பாடுபட்டா முன்னுக்கு வரலாம்னு ஒரு பழமொழிக்கு, அழகுக்காக சொல்லியிருக்கலாம்! பிரத்யட்ச உலகத்திலே, அப்படி ஆரம்பிச்சவனெல்லாம் இப்ப சானிடோரியத்துக்கு அட்ரஸ் கேட்டுக்கிட்டு இருக்காங்க!

முரு : அப்போ கடினமாப் பாடுபட்டா பலனில்லேங்கிறியா?

பாபு : உண்டு. யாரில்லேங்றது? யாரு வேலே வாங்குறுங் களோ அவங்களுக்குத்தான் நல்ல பலன் உண்டு. உன்னேட ஒவ்வொரு துளி வியர்வையும், அவ னுக்கு ஒவ்வொரு ரூபாயா மாறிக்கிட்டிருக்கும்!

முரு : அப்ப என்ன செய்யச் சொல்ற?

பாபு : அப்படி வா வழிக்கு! என்னைப் பாத்தியா. எனக்கு ஏதாவது ஒரு வசதி குறைச்சலா போயிட் டுதா? ஊரிலே மிஸ்டர் பாபுன்னு எல்லோருக்கும் தெரியவும் செய்தது பாத்தியா?

முரு : ஆமாம்.

பாபு : எப்படி நடக்குது?

முரு : எப்படி நடக்குது?

பாபு : அப்படி யோசனே பண்ணு! அதாவது முருகா! இந்தக் காலத்திலே முன்னுக்கு வரணும்னு டிப் டாப்பா டிரஸ் பண்ணனும். விலே உயர்ந்த சிகரெட் டின்னே கையிலே எடுத்துக்க. உள்ளே என்ன வேணும்னுலும் போட்டுக்க. தடபுடலா திரியணும். யாரைப் பார்த்தாலும் அவனுக்கு என்ன தெரி யும்னு கேளு! உனக்கு எல்லாம் தெரியும்னு நினைப் பான்! யாரையும் இறக்கியே பேசணும். தமிழோட கொஞ்சம் அப்படியே இங்கிலீஷையும் கலந்து விடணும், துணியின் கரையிலே ஜரிகை கொஞ்சம் ஒட்டியிருக்கிற மாதிரி! எதைப்பத்தியெல்லாம் தெரியாதோ அதையெல்லாம் ஒரு லிஸ்டு எடு. அதைப் பத்தியெல்லாம் அதிகமாகப் பேசனும்! பாரு. நாலே நாலுநாளிலே, உன்பேரு ஊரிலே அடிபடும். சில பேரு தூத்துவான். சில பேர் தாக்கு வான். போகப் போக மொத்தத்திலே, எல்லாரும் ‘எப்படியோ புத்திசாலி புழைக்கத் தெரிஞ்சவ’ன்னு

ஏகமனதாகப் பாராட்ட ஆரம்பிச்சுடுவான்! முருகா! நீ நினைக்கிற மாதிரி உலகம் என்னவோ இல்லேப்பா! உலகம் இவ்வளவுதான்!

முரு : நீ சொல்ற வழி தப்பான வழியாய் இருக்கு மோன்னுதான் யோசிக்கிறேன்!

பாபு : தப்பு எது? சரி எதுன்னு யோசிக்காதே. அப்படி யோசிக்கறதுக்குள்ளே காலம் நம்மைவிட்டு ரொம்ப தூரம் ஓடிடும். தப்பைக்கூட தைரியமா செய்ற போது, சரி மாதிரி ஆகிவிடும்! சரியான விஷயம் கூட சஞ்சலப்பட்டுச் செய்தால், தப்பாயிடும்.

முரு : அது எப்படி?

பாபு : ஒரு கடுதாசியை அப்பாவுக்கு எழுதி அந்தப் பக்கம் இந்தப் பக்கம் பார்த்துப் பயந்துகிட்டே தபால் பெட்டியிலே போடு! மொட்டை| கடுதாசி பேரடு ருன்னு சொல்வான்! மொட்டைக் கடுதாசியை எழுதி டிப்டாப்பா போட்டா பாதருக்கு லெட்டர் போடுருன்னு சொல்வான்! தைரியத்தையே ஒரு லெட்சுமியாக்கி நம்ம முன்னோர்கள் தைரிய லெட் மின்னு சொல்லியிருக்காங்கப்பா! தைரியத்தை ஏழாவது அறிவுன்னும் சொல்லியிருக்காங்க! இந்தா பாரு முருகா! நான் சொல்றதைக் கடைப்பிடி. முன்னேற்றம் உன் முகவரியைத் தேடிக்கிட்டு வந்திடும்.

முரு : இல்லே! எல்லாரையும் ஏக காலத்திலே முட்டா ளாக்கச் சொல்றியே, நடக்குமான்னுதான்...!

பாபு : உலகம் நீ நினைக்கிறபடி சர்வகலாசாலே இல் லேப்பா! இந்த உலகம் ஒரு சாராயக் கடை மாதிரி தான். இங்கே தைரியமா சத்தம் போட்டு உளறு கிறவன்தான் பெரியவன்.

முரு: அப்படி நடந்தா அயோக்கியன்னு சொல்லிட மாட்டான்.

பாபு: மாட்டான்; புத்திசாலி, பொழைக்கத் தெரிஞ்சவன்னுதான் சொல்லுவான். என்னமோ ஒரு குறிப்பு கொடுத்திட்டேன். மனுஷனுக்கு மனுஷன் இவ்வளவுதான் செய்ய முடியும். புத்தியிருந்தா புழைச்சுக்க.

[முருகன் உடன் பாய்ந்து பாபுவின் சட்டையைப் பிடித்துக் கொண்டு மிரட்டி]

முரு: வாட்? நான்சென்ஸ்! புத்தியிருக்குதான்னு சொல்றியா? எனக்குப் புத்தி இருக்கிறதைப் பத்தி உனக்கு அவ்வளவு சந்தேகமாகிப் போச்சு. இடியட்! மடையா! என் படிப்பு என்ன, அறிவு என்ன, 'லேங்கியேஜ்' என்ன, என் 'ப்ரைன்' என்ன! இதைப்பத்தி உனக்கு என்னடா தெரியும்?

பாபு: (பயத்துடன்) என்ன! என்னையே கோபிச்சிக்கிறே?

முரு: (திடீரென பணிவுடன்) பயப்படாதே. உலகத்தை இப்படி தைரியமா துணிந்து மிரட்டினா போதுமில்லே. ஒரு சாம்பிளுக்குதான் உன் கிட்டேயே பரீட்சை பண்ணி பார்த்துக்கிட்டேன்.

பாபு: ஓ... அப்படியா சேதி! என்னடான்னு பார்த்தேன். அவ்வளவுதானா விஷயம். நீ இனிமே பெரிய மனுசனாகி விடுவேப்பா. அதுக்குள்ள அறிகுறி வந்தாச்சு. விஷ் யூ குட் லக். போய் வா.

[பாபு சற்று அச்சத்துடன் செல்லல். முருகன் தனக்குள் யோசிக்கிறான்.]

முரு : (தனக்குள்) உலகம் நான் நினைக்கிறபடி சர்வ காலசாலை இல்லையா? சாராயக் கடைதானா?

இங்கே சத்தம் போட்டு உளர்ரவன்தான் பெரிய மனுஷனா?

தடபுடலா இருந்தா முன்னுக்கு வந்திடலாமா?

திரை

காட்சி : 5

இடம் : விருத்தாச்சலம் பிள்ளை வீடு.

பாத்திரங்கள் : மாப்பிள்ளை வீட்டார், விருத்தாச்சலம், பார்வதி.

[மாப்பிள்ளை வீட்டார் வந்து உட்கார்ந்து இருக்கிறார்கள்.]

வீட்டார் : பையன் எம். ஏ.

விருத்தாச்சலம் : படிச்சிருக்கானா, பலே பலே!

வீட் : நினைச்சான்! அதுக்குள்ளே ஏதோ இடைஞ்சல் வந்திடுச்சு, அப்புறம் ஒரு தினுசா தமிழ் வித்வான் படிப்பு...?

விருத் : படிச்சிட்டானா?

வீட் : நினைச்சான்! அதுக்குள்ளே ஏதேதோ தடங்கல்கள், சங்கடங்கள், இடைஞ்சல்கள்! அப்புறம் யோசிச்சான். பள்ளிப் படிப்பிலே என்ன இருக்கு. பெரும் பெரும் அருஞ்செயல்களைச் செய்தவங்களெல்லாம், பள்ளிக்கூடக் கட்டிடத்துக்கு வெளியிலே நின்னு படிச்சவங்களாத்தானே இருக்காங்கன்னு நினைச்சு, பயல் பள்ளிக் கட்டிடத்துக்கு வெளியே இருந்தே

படிக்க ஆரம்பிச்சுட்டான்! அப்புறம், இப்பதான் சமீபத்திலே அமெரிக்கா, லண்டன், ரஷ்யா, இங்கே யெல்லாம் ஒரு சுத்துப் பயணம்...!

விருத் : போய்ட்டு வந்திட்டானு?

விட் : நினைச்சான்! புறப்படுற நேரம் பாத்துடைபாய்டு அட்டேக்! அப்புறம் போன மாசம் 7-ம் தேதிதான் ஏதோ வெளிநாட்டுப் பயணம்னு முடிவு பண்ணி யாச்சே, போய்ட்டு வந்திடலாம்னு, இந்த மலேயா, சிங்கப்பூர், சிலோன் வரைக்குமாவது போய் வெளி யுலக அனுபவம் வரலாம்னு...!

விருத் : நினைச்சானு? எல்லாம் நினைப்பு அளவிலே இருக்குற குடும்பம் போல இருக்கு!

[அசட்டுச் சிரிப்புடன்]

விட் : இன்றைய நினைப்புத்தாங்களே நாளைய வரலாறு ஆகுது!

விருத் : ஆமாம், ஆமாம்!

விட் : அப்ப பையன் ஜாதகத்தைக் கொண்டு வந்திருக் கேன். ஒரு ஜோசியரைக் கூப்பிட்டுப் பொருத்தம் பார்த்துடலாமுங்களா?

விருத் : வேண்டாம். ஜாதகம் நீங்கள் வைச்சுக்குங்க. கல்யாண விஷயமா, ஏற்கனவே ஒரு நல்ல இடம் முடிவாயிருக்குது! அப்பா...! கொஞ்சம் இடுப்பு வலி. தைலம் போட்டுக்கிட்டே பேசுவோம்!

விட் : அப்ப நான்...!

விருத் : வேண்டாங்க. தைலம் போடுறதுக்கு எல்லாம் ஆளு இருக்காங்க! அப்ப...

விட் : நாங்க போய்ட்டு வர்ரோம்!

விருத் : போய்ட்டு வாங்க!

[விருத்தாச்சலத்தின் ஒரே மகள் பார்வதி வருகிருள். கல்லூரியில் படித்தவள். கையில் புத்தகத்தோடு வருகிருள்]

பார்வதி : அப்பா! ஏன்ப்பா இப்படி 'ரப்பா' உட்கார்ந்திருக்கீங்க! அன்னிக்கு யாரோ ஒருத்தர் இப்படித் தான் உட்கார்ந்திருக்கணும்! டார்வின் பார்த்திருப்பாரு! அப்பதான் டார்வினுக்கு அப்படி ஆராய்ச்சி பண்ணத் தோணியிருக்கணும்! அப்பா! அவரு குரங்கிலே இருந்து மனிதன் வந்தான்னு சொன்ஞரே! நான் ஒரு புது ஆராய்ச்சி கண்டு பிடிச்சிருக்கேன்பா...!

விருத் : என்னம்மா...?

பார் : மனுஷன் திருப்பவும் குரங்காகவே மாறிக்கிட்டிருக்கான்னு! எப்படி? இதைப்பத்தி நான் ஒரு பெரிய புத்தகமே எழுதப் போறேன்பா!

விருத் : பார்வதி! எனக்கு இருக்கிற எல்லா வியாதிகளேயும்கூட ஒரு தினுசா தாங்குவேம்மா! நீ படிச்சுட்டு, அதையே பேசிக்கிட்டு, படிப்புக்கப்புறமும் வேற ஒரு உலகம் இருக்குங்கறதையே மறந்துட்டியே! இதை என்ஞலே தாங்க முடியலேம்மா! ஏன்மா! உலகம் ரொம்ப பெரிசில்ல! பலகோடி சதுரமைல் இருக்குமே! புத்தகம் ஏறத்தாழ 20, 25 சதுர அங்குலம்தானே இருக்குது!

பார் : அப்பா! மனிதகுலம் வளர்ந்திருக்குதுன்ஞ அதுக்குக் காரணமே புத்தகம்தாம்பா! புத்தகங்கள் தான் ரொம்ப நல்ல நண்பர்கள்னு பெரியவங்களே சொல்லியிருக்காங்க!

விருத் : நல்லா சொன்னுன்போ! இந்தப் பெரியவனுங்க சும்மா இருக்கமாட்டாங்க. அவனவனுக்கு தோன்று கிற பொன்மொழிகளைச் சொல்லிட்டுப் போயிட ருனுக. ஒண்ணுக்கொன்னு எதிர்ப்பாவே இருக்கு. இதிலே எது நல்லதுன்னு தேர்ந்தெடுக்கிறதுக் குள்ளே நமக்கே ஒரு பொன்மொழி உதயமாகிடுது. இந்தா பாரு பார்வதி! அந்த மில் ஓனர் வீட்டி லிருந்து எந்த நேரமும் உன்னைப் பார்க்க வரலாம். நீ இப்படி படிச்ச புத்தகத்தையே புலம்பிக்கிட்டிருக் காதே.

பார் : என்னப்பா! புலம்பல்னு அப்படி சாதாரணமா சொல்லிட்டீங்களே! கம்பர் மண்டோதிரி புலம் பல்னு ஒரு இலக்கியமே ஆக்கியிருக்காரப்பா...!

விருத் : (எரிச்சலுடன்) இப்ப் எங்கேயிருந்தம்மா, திடீர்னு மண்டோதிரி வந்து குதிச்சா! திடீர்னு மண்டோதிரிங்கற! திடீர்னு மார்லின் மன்ரோங்கறே! நெப்போலியன்ங்ற, திடீர்னு நெடுநெல்வாடைங் கிற, ஜூலியஸ் சீசரைப் பத்தி பேசிக்கிட்டே வந்து, உடனே சுடலையாண்டி பிள்ளைங்கற! ரேடியோ வைக் கண்டு பிடிச்சவர் 'குக்லியன் மோ மார்கோனி' என்று சொல்லிட்டு, உடனே குணங்குடி மஸ்தான் பாட்டுக்கு வந்திட்டே.

பார் : அப்பா! மனுஷங்களை நினைக்கிறதைவிட, புத்த கங்களை நினைக்கிறது எவ்வளவோ இன்பமா இருக்கு தப்பா! என்னைப் புரிஞ்சுக்காமலே எனக்குக் கல்யாணம் பேசறீங்களேப்பா! என்னோட புத்தக அறையில் யார் யாரெல்லாம் இருக்காங்க தெரியுமா?

விருத் : (திடுக்கிட்டு) யாரம்மா...?

பார் : சாக்ரடீஸ் முதல் உ. வே. சாமிநாத ஐயர் வரை இருக்காங்க! கார்ல் மார்க்ஸ் முதல் காந்திவரை

இருக்காங்க! அல்லா முதல் அபூல் கலாம் ஆசாத்வரை இருக்காங்க! ஆபிரகாம் லிங்கன் முதல் கென்னடி வரை இருக்காங்க! ஏன், வள்ளுவர் முதல் வள்ளலார் வரையிலும்கூட இருக்காங்கப்பா!

விருத் : ஏம்மா? இவ்வளவு பேர் இருக்காங்கங்கிறீயே? யாராவது ஒருத்தர் நீ எப்படி வாழணும்னு சொல்லலையா...!

பார் : நான் எப்படி வாழனும்னு தெரிஞ்சுக்க, அவங்க ஏடுகளைப் படிக்கலைப்பா! எனக்கு சிந்தனையெல்லாம் உலக முன்னேற்றம் மனிதகுலம் பத்தித் தான்பா!

விருந் : ஏம்மா! கல்யாணம் ஆகுற வயசில்ல இப்படி சம்பந்தமில்லாம பேசறீயே! உன்னை என்ன நினைக்க மாட்டாங்க?

பார் : மீராவை அப்படித்தான் நினைச்சாங்க! ஜோரா கண்ணன் திருவடியிலே கலந்துட்டாளே. ஆண்டாளை அப்படித்தான் நினைச்சாங்க. நினைச்சவங்கத் தான் தின்னுட்டு குழந்தை பெத்து, தொட்டிலாட்டி, தாயாகி, பாட்டியாகி முடிஞ்சு போய்ட்டாங்க! ஆனால் அவங்களோட கண்டனத்துக்கு ஆளான ஆண்டாள் இன்னும் மாண்டுபோகாம என் ரூமுக்குள்ளே பீரோவிலே வந்து இருக்கிறு, திருப்பாவை ரூபத்திலே!

விருத் : என்னைச் சித்திரவதை செய்யாதேம்மா! உனக்காகத்தான் நான் வாழ்ந்துக்கிட்டிருக்கேன். நீ வீடும் விளக்குமாகி, அதைப் பார்க்கக் கொடுத்து வைக்கணும்னு நான் கட்டின மனக்கோட்டையை நீ புத்தகங்களை தூக்கி எறிஞ்சே தூள் தூளா நொறுக்கிடுவேப் போலிருக்கே.

பார் : அப்பா! நான் கண்டிப்பா சொல்லிட்டேன். என்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போறவரு ரொம்ப பெரிய படிப்பாளியாக இருக்கணும்! இந்த சாதாரண படிப்புள்ள பணக்காரரை நான் திருமணம் செய்துக்க மாட்டேன்பா.

விருத்: பார்வதி! இந்தக் காலத்திலே படிப்பை யாரம்மா மதிக்கிரு? ஏழையைக் கட்டிக்கிட்டா இருக்கிறதைத்தான் பங்கு வைப்பான்! பணத்தோட தாம்மா பணம் சேரணும். படிப்புக்கு என்னம்மா மதிப்பு? பெரிய பி. ஏ., எம். ஏ. படிச்ச பெரியவங்க ஒரு ஊருக்குப் போயிட்டு வரட்டும். இருக்கிற தைத்தான் தடபுடலா செலவு பண்ணிட்டு வந்து நிப்பாங்க! ஆனுல், கொஞ்சம் பணம் போய்ட்டு வரட்டும். வரும்போது வட்டியோட வரும்மா!

பார் : என்னமோ! என்னுலே படிப்பை மதிக்கிற மாதிரி பணத்தை மதிக்க முடியலப்பா.

விருத் : அந்தப் படிப்பே பணத்தாலே வந்தது தானேம்மா! பணமில்லாட்டி படிக்க முடியுமா? படிச்சு முடிச்ச பிறகு, அந்தப் படிப்பே பணத்தை நன்றி கெட்டுத் திட்டலாமா பார்வதி! இந்தக் கல் யாணத்துக்கு நான் சம்மதிச்சுட்டேம்மா? இனி மாறிப் பேசினு என்னை மதிப்பாங்களா? நீயும் சம்மதிக்கிலேன்னு இந்த அதிர்ச்சியிலேயே நான் இந்த உலகத்தை விட்டே பிரிஞ்சுடுவேம்மா.

[விருத்தாசலம் இவ்வாறு பேசிக்கொண்டு வரும் போதே மனம் நொந்து அழுகிருர். தந்தையின் கண்ணீரைப் பார்வதி அன்புடன் துடைத்தவ ளாகத் திடீரென மனம் மாறி ஆறுதல் கூறு கிருள்.]

பார் : அப்பா! நான் இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிக் கிறேன்பா. பிடிவாதத்தாலே பெத்த தகப்பனையே கொன்ன பாவிங்கிற பேரு எனக்கு வேண்டாம்பா. அப்பா சொன்ன சொல்லுக்காக தன்னையே அழிச்சு கிட்ட ஒரு மகள்ங்கிற பேரு எனக்குப் போதும்பா...! சம்மதிக்கிறேன். மிஞ்சினு இந்த உலகத்திலே 25, 30 வருஷம் இருக்கப் போறோம். அதுலே எதுக் கப்பா இலட்சியம், மண்ணாங்கட்டி வேண்டி யிருக்கு. நம்மாலே யாரும் வருத்தப்படாமே வாழ்ந்திட்டா, அதே போதும்பா. நான் இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிக்கிறேன்பா. நான் சம்மதிக்கிறேன்.

[விருத்தாச்சலம் நிம்மதிப் பெருமூச்சு விடுகிறார்.]

விருத் : (மகிழ்வுடன்) பார்வதி...!

பார் : (நிம்மதியுடன்) அப்பா!

திரை

காட்சி : 6

இடம் : குடிசை வீடு.

பாத்திரங்கள் : முருகன், பொன்னம்பலம்.

[பொன்னம்பலம்பிள்ளை ஒரு அருட்பாடலைப் பாடிக் கொண்டிருக்கிறார். முன்னுக்கு வர ஆசை யுடன் இருந்த முருகன், பூட்சு சத்தம் தடபுடலாகக் கேட்கும்படி மிகவும் கம்பீரமாக வருகிறான்.]

முருகன் : என்ன மாமா? How are you? என்ன சமாச் சாரம்? எப்படி சௌக்கியமா?

பொன்னம்பலம் : இதுவரை சௌக்கியமாத்தான் இருந்தேன். இனிமே நீ கேட்டதுக்கப்புறம்தான் ஏதாவது மாற்றம் வரலாமோன்னு பயமாயிருக்குது.

முரு : என்ன மாமா அப்படிச் சொல்லிட்டீங்க?

பொன் : பின்ன என்ன மாப்பிள்ளே. நேத்து பாத்தவங்களே இன்னிக்குப் பார்க்க முடியலேன்னு எதுக்கோ சொல்லி வச்சாங்க. அது இப்ப உன்னைப் பொறுத்தவரையிலும் ரொம்ப சரியாயிடுத்தே. நேத்து எவ்வளவு நல்லா இருந்தே. இன்னிக்கு எப்படி மாறிட்டீயே. காலுக்குக் குழாயி, முழுக்கைச் சட்டை! கழுத்திலே டை! இதுக பேரகட்டும். என் க்ஷேமத்தை வந்து இங்கிலீஷிலே கேட்க ஆரம்பிச்சுட்டியே.

முரு : மாமா! காலம் மாறிக்கிட்டேயிருக்குது. அதோட நாமும் மாறிக்கிட்டே இருக்கணும். இல்லேன்ஞ் பின் தங்கிடுவோம்.

பொன் : இந்தா பாரு மாப்பிள்ளே. சில பட்டிக்காட்டுக்குக் காரிலே போனு, பின்னலே நாயி ஓடி ஓடி தொடர்ந்து வரும். அந்த மாதிரி காலத்தைத் தொடர்ந்து நாம ஏன் மாப்பிளே போகணும். காலந்தான் நம்ம பின்னலே வரட்டுமே.

முரு : அது என்ன அவ்வளவு சாமான்யமா சொல்லிட்டீங்க. காலம்னு என்ன தெரியுமா?

பொன் : காலம் காலம்னு பூச்சாண்டி காட்டாதேங்க மாப்பிள்ளே. காலம்ங்றதே நம்மைப் போல நாலு பேரு சேர்த்துச் செய்யற முடிவுதானே. என்ன மாப்பிள்ளே இது. நமக்கு நெருங்கின உறவு நீ. இப்படி போயிட்டியே.

முரு : உலகம் நாடக மேடைன்னு சொல்றதை நீங்க ஏத்துக்கிறீங்களா?

பொன் : ஏத்துக்கிறேன்.

முரு : அப்ப நான் அந்த உலகத்திலே! புதுவேடம் செய்யறதாக நினைச்சுக்குங்களேன். ஏன் மாமா, ஒரு நாடகமின்னா உங்களை மாதிரி சில பேரு என்னை மாதிரி சில பேரு இருந்தாதானே ரசிக்கும்.

பொன் : என்ன மாப்பிள்ளே! நம்ம தரத்துக்கு மீறின விஷயங்களைப் பேச ஆரம்பிச்சுட்டியே. இந்த மாதிரி தவறு முன்னே எப்பவும் செய்ய மாட்டியே.

முரு : இனிமே இதுதான் தொடர்ந்து நடக்கப்போவுது மாமா. ஏது தெரியலையோ! அதைப்பத்தியெல்லாம் அதிகம் பேசப் போறேன். யாரும் நிகரில்லைன்னு திரியப் போறேன். எவனையும் 'கேர்' பண்ணப் போறதில்லை.

பொன் : அது சரி. ஏன் இப்படி திடீர்னு இந்த முடிவுக்கு வந்துட்டே. என்ன சங்கதி? கீழே விழுந்து தலையிலே பலமா அடிபட்டுடிச்சா என்ன? என்ன விஷயம்?

முரு : தலையிலே இல்லை மாமா. நெஞ்சிலே.

பொன் : நெஞ்சா? X-Ray எடுத்துப் பார்க்கலாமா?

முரு : மாமா! நெஞ்சிலேன்னா வெளியிலே இல்லே. மனசிலே. மாமா! கடினமா பாடுபட்டேன். முன்னுக்கு வரமுடியலை. முதுகு வலிதான் வந்தது. நுனிப்புல் மேய்கிற மாதிரி லேசாக நகத்திலே அழுக்குப் படாம பாடுபட்டபோது என்னை எதுவும் சொல்லலை. கடினமா பாடுபட்டேனா இல்லையோ, என்னைப் பார்த்ததும் மாடு ஞாபகந்தான் எல்லோ

ருக்கும் வந்தது. மாடு மாதிரி பாடுபடறுன்னுதான் சொன்னுங்களே தவிர, ஒரு நல்ல சொல்லாலே கூட பாராட்டலே. முன்னுக்கு வர முடியலே.

பொன் : அதுக்காக...?

முரு : பிளானே மாத்திக்கிட்டேன். ஒரு பெரியவர் ரூட்டை மாத்தி விட்டுட்டார். இனிமே இந்த ரூட்லே போயி முன்னுக்கு வந்து, ஒரு நாளாவது நான் இந்த ஊர்லே யாருங்கிறதைக் காட்டப் போறேன். பொருள் இல்லாம கஷ்டப் படுறவங்களேத்தானே உங்க கண்ணுக்குத் தெரியுது. இன்னும் ஒரு ஸ்டெப் தள்ளி வந்து உலகத்தை உற்றுப் பாருங்க. போதிய திறமை இருந்தும் பேரு புகழ் இல்லாததாலே எவ்வளவு பேரு கஷ்டப்படறுங்க தெரியுமா?

பொன் : யாரோ உன் புத்தியைக் கெடுத்திட்டாங்க போலிருக்கே. கெட்டுட்டே.

முரு : தாக்குங்க, மாமா—தாக்குங்க. முதல்லே யாருக்குமே புகழ் இந்த 'டைப்'பிலே அதாவது தாக்குதல் ரூபத்திலேதான் வரும்னு சொல்றுங்க.

பொன் : இந்தா பாரு முருகா. புகழ் முன்னேற்றம்னு அலேயாதே. பேசாம வாழுற வழியைப் பாரு. வர்ற சித்திரையிலே அஞ்சுகத்தைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்னுதான் உன் மனசு ஒரு ஒழுங்குக்கு வரும்னு நினேக்கிறேன்.

முரு : என்ன கல்யாணமா? அந்தப் பேச்சையே இப்ப எடுக்காதீங்க மாமா. நான் மணமேடையிலே சும்மா எல்லோரையும் மாதிரி வந்து உட்காந்துட் மாட்டேன்.

பொன் : பிறகு எப்படி வந்து உட்காரப் போகிறே?

முரு : என் பொறுப்பு, என் Position, என் பொருளாதாரம், புகழாதாரம், எல்லாம் யோசித்துப் பார்த்துட்டுத்தான், சின்சியரா காலெடுத்து வந்து உட்காருவேன். என் கல்யாணம் சும்மா 2 வாழை 10 தளிர் மாவிலே. உள்ளூர் மேளத்தோட முடியறதை நான் விரும்பலே. தலைவர்கள் வந்து நகமும் சதையும் போல வாழ்க என்று வாழ்த்தணும். நாலா பக்கமும் இருந்து கிளிக்கிளிக்னு Flash Light போட்டோ எடுக்கணும். எங்க கையிலே நீங்க தரப் போற குடை மாதிரி பூச்செண்டு இருக்குதே, அது எங்களையே fade out பண்ணணும். நல்லா ஊதருளு இல்லையோ வெளியூர் மேளம் வரணும். கச்சேரி ஒரு பக்கம் நடந்துகிட்டே யிருக்கணும், இன்னொரு பக்கம் ஆட்கள் சாப்பிட்டுக் கை கழுவிக் கொண்டே இருக்கணும்.

பொன் : கல்யாணப் பேச்சு பேசறபோது, கைகழுவணும் அது, இதுன்னு அபசகுனமா பேசறியே. நம்ம நிலைக்குத்தான் ஆசைப்படணும் மாப்பிள்ளை. ஆசை தான் ஒருத்தனை சித்திரவதை பண்ணுது. புத்தர் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா?

முரு : ஆசையை விட்டுடச் சொன்னாரு. ஆசை விட்டாதான் மேல் நிலைக்கு வரலாம்னு சொன்னாரு. இதுவும் ஒரு ஆசைதானே மாமா.

பொன் : ஆமா...!

முரு : ஆசை இல்லாம முன்னேற்றமே இல்லை மாமா. காந்தியோட ஆசைதானே இந்த சுதந்திரம். பாரதியார் அவர் பாட்டிலே எவ்வளவு விஷயத்தைப் பத்தி ஆசைப்பட்டிருக்காரு தெரியுமா. தாகூரோட

ஆசைதானே கீதாஞ்சலி. அங்கே ஏன் போறீங்க. இங்கே வாங்க. வள்ளலாரோட ஆசைதானே இந்த அருட்பா. இன்னொரு விவரம் தெரியுமா, மாமா உங்களுக்கு?

பொன் : என்ன மாப்பிள்ளே?

முரு : கடவுளே ஆசைப்பட்டிருக்காரு மாமா.

பொன் : கடவுளா?

முரு : ஆமா! ''அலகிலா விளையாட்டுடையார் அவர் தலைவர்—அன்னவர்க்கே சரணம் நாங்களே'' மாமா! கடவுளுக்கே விளையாட்டிலே ரொம்ப ஆசையாம். அதனாலேதான் இந்த உலகத்தைப் படைச்சிருக்காரு. அதுமேலதான் நின்னு நீங்களும், நானும் இப்ப பேசறோம்.

பொன் : பெரிய பெரிய விஷயங்களாப் பேசறியே! குழந்தைப் பிள்ளை நிஜத்துப்பாக்கியை வச்சுக்கிட்டு விளையாடுற மாதிரி இருக்குதே என்ன ஆகுமோ! இதோ பாரு. நான் சொல்றதைக் கேளு. உன் கொள்கையிலே நான் தலையிடலே; ஆனால் கல்யாணத்தை சித்திரையிலே நல்லபடியா எளிமையா நடத்திடுவோம். மறுத்திடாதே! எனக்கும் வயசாயிட்டுது. எப்ப என்ன ஆகுமோ! என் கண் முன்னாலே தம்பதிகளா வந்து ஆசிர்வாதம் வாங்கிக்குங்க. ஆமா, சொல்லிட்டேன்.

முரு : மாமா! நீங்க இல்லாட்டி என்ன கெட்டுப் போவுது!

பொன் : என்ன...?

முரு : உங்க போட்டோவை வைச்சு 'மேனேஜ்' பண்ணிக்கிறோம்!

பொன் : என்ன மாப்பிள்ளே! என் போட்டோவுக்கு மாலே போடுற விஷயத்தை ஒரு வருத்தமும் இல்லாம ஏங்கிட்டியே சொல்றீயே! மாப்பிள்ளே! இந்தா பாருங்க! போட்டோ வைச்செல்லாம் எதுக்கு. என் கண்ணுள்ள போதே நடக்கணும். அன்பு உரிமையோடு கேட்கறேன்.

முரு : மாமா! தயவு செய்து என் பிரின்ஸ்பலேக் கெடுக்காதீங்க! இப்ப கல்யாணம்கிற வார்த்தையைக் கேட்டாலே எனக்குப் பிடிக்கலே. விரும்பிச் செய்த கல்யாணமே விவாகரத்து வர வருது. விரும்பாம நடந்தா?

பொன் : அப்ப! உனக்கு அஞ்சுகத்தைப் பிடிக்கலேயா?

முரு : என்ன சொன்னீங்க மாமா! இன்னொரு தடவை இந்த வார்த்தையை நீங்க சொன்னீங்க. நான் இங்கேயே சுவரிலே முட்டிமுட்டியே உயிரை விட்டுடுவேன் மாமா! அஞ்சுகத்தை மறந்திட்டா எனக்கு இந்த உலகமே ஏது மாமா? அவளேயும், என்னேயும் பிரிக்கிற சக்தி இந்த உலகத்திலே ஏது? சின்ன வயசிலே இருந்து அத்தான், அத்தான்னு அது ஆசையா கூப்பிடறதை நினேச்சே நான் எத்தனே நாள் பட்டினியை அட்ஜஸ் பண்ணினேன் தெரியுமா? எனக்கு இந்தக் குடிசைப் பக்கமே வர பிடிக்கலே. பிளெய்ஞவே சொல்றேனே. உங்களேக் கூட எனக்குப் பிடிக்கலே. அப்படியும் நான் இந்தப் பக்கம் ஏன் வர்றேன்ஞ, என் அஞ்சுகத்தைப் பார்க்கத்தான்.

பொன் : முருகா! நிசமாத்தான் பேசறியா?

முரு : பிறகென்ன! பொய்யா? மாமா அஞ்சுகத்தை நான் உண்மையாத்தான் நேசிக்கிறேன். நீங்கள்

வணங்கும் தெய்வத்தின் மேல் ஆணையிட்டுச் சொல்றேன். தெரியுதா?

பொன் : தெரியுது மாப்பிள்ளே!

முரு : சரி. இந்த 'டாப்பிக்'கை இந்த நேரத்தோட விட்டுடுங்க. என்னோட இலட்சியத்துக்குக் குறுக்கே அங்கேயும், இங்கேயும் ஓடித் திரியாதீங்க! அஞ்சுகம், (கூப்பிடுகிறான்) அஞ்சுகம் ஏன் இன்னும் வரலே?

பொன் : இப்ப வந்துடும்...!

முரு : அதுக்கு பிடிச்ச முல்லேப் பூ வாங்கிட்டு வந்திருக்கேன். ஞாபகமா கொடுத்திடுங்க.

[கொஞ்ச தூரம் நடந்து திரும்பி வந்து]

முரு : மறந்துபோய் சாமிக்குப் போட்டுடாதீங்க.

[முருகன் போகிறான். மனநிறைவோடும், மகிழ்ச்சியோடும் தொடர்ந்து சென்று வழியனுப்பி விட்டு, வந்து தனிமையில் கடவுளே வணங்குகிறார்]

திரை

காட்சி : 7

இடம் : விருத்தாச்சலம்பிள்ளே வீடு.

பாத்திரங்கள் : பார்வதி, அஞ்சுகம்.

[வேலேக்காரி அஞ்சுகம் உலக குளோப்பை சுற்றிச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்]

அஞ்சுகம் : எங்கே காணோம். நம்ம கிட்டே சண்டைக்கு வந்தாங்களே அந்த சீனு. அவங்க நாட்டையே

காணுேமே. எங்கே இருக்குன்னு நானும் உலக மெல்லாம் சுத்தி சுத்தித்தான் பாக்குறேன். காணவே இல்லேயே. இன்னும் கொஞ்ச நாள்லே அந்த நாடுகள் இருந்த இடம் தெரியாம அழியப் போகப் போதுன்னு அன்னிக்கு அம்மா சொன்னுங் களே. அப்படித்தான் உலகத்திலிருந்தே அந்த நாடு அழிஞ்சு போச்சுதா?

[பார்வதி கவலேயுடன் வருகிருள்.]

அம்மா, ஏன் ஒரு மாதிரியா இருக்கறீங்க...?

பார்வதி : ஒரு மாதிரியா இல்லே! இனி எப்பவுமே நான் ஒரே மாதிரியாத்தான்டி இருப்பேன். பெண்—ஒரு நாவல்னு ஒருத்தர் கதை எழுதினுர்; சோக நாவல்னே எழுதியிருக்கலாம்.

அஞ் : ஏன்மா கவலேயா இருக்கறீங்க? ஐயா ஏதாவது சொன்னுங்களா?

பார் : இல்லே அஞ்சுகம். நான்தான் உணர்ச்சி வசப் பட்டு சொல்லக் கூடாத ஒண்ணேச் சொல்லிட்டு இப்ப ரொம்பவும் வேதனேப்படறேன்.

அஞ் : அப்படி என்னம்மா சொல்லிட்டீங்க. அடிக்கடி நீங்க படிச்ச புஸ்தகத்தைப் பத்தியேதானே பேசிக் கிட்டிருப்பீங்க. வேற எதுவுமே தவரு பேச மாட் டீங்களேம்மா.

பார் : பேச மாட்டேன். ஒரு வகையில் பார்க்கப்போனு நான் சொன்னதைக் கூட தவறுன்னு சொல்ல முடியாதுதான்! அஞ்சுகம், நான் ஒண்ணு கேட் கிறேன். நீ பதில் சொல்லுவியா...?

அஞ் : என்னம்மா...?

பார் : உனக்கு உங்கப்பா சொல்றவரை பிடிக்கலேனு வச்சுக்க. உங்கப்பா பேரிலே உனக்கு இருக்கிற

பாசத்துக்காக நீ அவர் சொல்றவரையே ஏத்துக் குவியா?

அஞ் : செருப்புகூட ஒருத்தர் காலுக்கு உள்ளது இன்னொருத்தர் காலுக்குச் சேர்றதில்லையே. சிந்தனையும் கருத்தும் பொருந்திடுமா? வாழ்ந்து முடிஞ்சவங்க சொல்ற யோசனை, புதுசா வாழப் போறவங்களுக்கு உதவுமா? அப்பா இதிலே நீங்க தலையிட வேண்டாம். கடவுள் சாட்சியா சொல்லிட்டேன்னு கண்டிப்பா சொல்லிடுவேன்.

பார் : பிறகு என்ன செய்வே?

அஞ் : எனக்குப் பிடிச்சவரைத் திருமணம் பண்ணிக் கிட்டு, ஆசீர்வாதத்துக்கு மட்டும் அப்பா கிட்டே போவேன்.

பார் : எனக்கு அந்த தைரியம் இல்லாம போச்சுது. அதனாலேதான் இந்தத் துன்பத்தை அனுபவிக் கிறேன்.

அஞ் : உங்களுக்குத் தைரியம் எல்லாம் இருக்கம்மா. இந்தப் புத்தகங்களே அன்பு தியாகம் அது இதுன்னு படிச்சப் பிறகு அதில் வர்ற பாத்திரங்கள் மாதிரி உங்களை நீங்களே நினைச்சுக்கிட்டுதான் பேசத் தெரியாம பேசி மாட்டிக்கிட்டீங்க. ஆமா! அப்படி என்னதான் நடந்து போச்சு?

பார் : எங்கப்பா எனக்குப் பிடிக்காத ஒருத்தரை திருமணம் செய்துக்கச் சொல்லிட்டாரடி! ஏதாவது அதிர்ச்சியிலே நடந்திட்டா அவர் உயிருக்கே ஆபத்துன்னு டாக்டர் சொல்லியிருக்காரேன்னு பயந்து, நான் அந்த சமயத்தில் அவர் சொல்றவரையே திருமணம் பண்ணிக்கிறதாக உறுதி கொடுத்திட்டேன்.

அந்த வாக்குறுதி என் வாழ்க்கைக்கே எமனு கிட்டதடி.

அஞ் : அப்பவும் உணர்ச்சி வசப்பட்டு வாக்குறுதி தந்துட்டு, இப்பவும் உணர்ச்சி வசப்படுறீங்களே! இதிலே என்னம்மா புண்ணியம்! எப்பவும் வேக மாப் போறதால்லே வர்ற கஷ்டங்களை, விவேகத் தாலேதான் நீக்கணும்.

பார் : அஞ்சுகம்! நான்கூட எனக்கு வந்திருக்கிற கவலையை விவேகத்தாலே நீக்க முடியும்னு நம்ப றியா...?

அஞ் : விவேகத்தாலே முடியாதது எதுவுமில்லே. 'முடியாது' என்ற சொல் பிரெஞ்சு மொழியிலேயே இல்லேன்னு நெப்போலியன் சொன்னதாக நீங்க தானே அன்னிக்கு சொன்னீங்க!

பார் : அஞ்சுகம்! நான் எந்த ஒரு மனிதரைப்பற்றி நினைக்கவே அருவருக்கிறேனோ, அவரே என்னை நேராப் பார்க்க நாளைக்கு வாராராம். நான் பூர ணமா சம்மதிக்கிறேன்னு அவர்கிட்டே சொல்லியாச் சாம். அவர் வந்து என்னைப் பார்த்து அவருக்கு என்னைப் பிடிச்சுட்டுதுன்னு அடுத்த மாதமே என் திருமணமாம். இந்த நேரத்திலே, நான் எப்படி இந்த வாக்குறுதியிலே இருந்து தப்பமுடியும் அஞ்சுகம்?

அஞ் : நான் சொல்றேன்னு நினைக்கக்கூடாது. அதை அப்படியே கேட்டு நடந்தா கல்யாணத்தையே நிறுத்திடலாம்.

பார் : அப்பா... மனசு?

அஞ் : வருத்தப் படாமலும் பார்த்துக்கலாம். ஆனால் நான் சொல்றதை அப்படியே கேட்கணும்... வேலைக் காரியோட வார்த்தைதானேன்னு...!

பார் : என்ன வார்த்தை சொல்றேடி அஞ்சுகம். வேலைக்காரின்னு நினைச்சு பழகினால் உங்கிட்டே இப்படி மனம் கலந்து பழகுவேனா? உன்னை என் சகோதரியா மதிக்கிறேன் அஞ்சுகம்.

அஞ் : இந்தக் கல்யாணம் நடக்காதபடியும் அப்பா மனசு நோகாதபடியும் செய்றேன். நான் கேட்கிற உடை நகையெல்லாம் ஒரு நாள் இரவலாக அப்படியே தரணும். அவர் வர்ற அன்னிக்கு நீங்க நான் சொல்றபடியே நடந்துக்கணும் சம்மதமா.

பார் : என்னடி நீ சொல்றது ஒண்ணுமே புரியலையே...!

அஞ் : எதையுமே ஆரம்பத்தில் புரிஞ்சுகிட்டா அப்புறம் சுவாரஸ்யமே ஏது? அடுத்த அறையிலே அப்பா இருக்கார். கேட்டுடப் போறாரு. வாங்க, தனியா போய் பேசுவோம்.

[தனியாகப் பார்வதியை அழைத்துச் செல்கிறாள்.]

திரை

காட்சி : 8

இடம் : ஈஸ்டர்ன் கல்சரல் கிளப்.

பாத்திரங்கள் : முருகன், மெம்பர்கள்.

எழுத்தாளர் : வரவர நம்ம கிளப்புக்குள்ள மதிப்பே போச்சு. பேசாம இங்கே இருந்து நாம விலகிட வேண்டியதுதான்...!

ஆபீஸர் : ஏன்? என்ன சங்கதி, What is the matter?

எழுத் : நம்ம தரம் என்ன, புகழ் என்ன, பணம் என்ன, படிப்பு என்ன, பதவி என்ன!

வக்கீல் : அறிவு என்ன, ஆற்றல் என்ன, அந்தஸ்து என்ன!

கடைக்காரர் : வீடு என்ன, பங்களா என்ன, செல்வாக்கு என்ன!

எழுத் : இப்படி இருக்கிறபோது அந்த எடுபிடி ஆள், அதாஞ் அந்த முருகன் அவனையும் நம்ம கிளப்பிலே மெம்பரா சேர்த்திருக்காங்க சார். எனக்கு நேத்து தான் விஷயமே தெரியும். ரொம்பவும் முறைச்சுக் கிட்டேன்.

டாக்டர் : எந்த முருகன்! நம்ம விருத்தாச்சலம் பிள்ளை வீட்டுக்கு மார்க்கட்டிலேயிருந்து அடிக்கடி புடலங் காயை வாங்கி தோளிலே ' போட்டுக்கிட்டு போவானே! அவனு?

வக் : ஆமாம், ஆமாம். அவனுக்கு என்ன வாழ்வு வந் திருக்கு தெரியுமா, இப்போ! திடீர்னு எங்கே கிடைச்சுதோ தெரியிலே சார்! காலுக்கு குழாயி மாட்டிக்கிட்டு, கழுத்திலே டை. சரி டிரஸ்தான் தொலையட்டும். பேச்சு என்ன பேசறுன்னு தெரி யுமா. முன்னேயெல்லாம் அரிசிக் கடையைப் பத்தித் தானே பேசுவான். இப்ப ஐ. நா. வைப்பத்தி பேசறுன் சார்.

ஆபீ : முன்னே காய்கறி மார்க்கெட்டிலே தகராறு பண்ணிக்கிட்டிருப்பான்லே. இப்ப காமென்வெல்த் பற்றிப் பேசறுன். அந்த காமன்வெல்த்தைப்பற்றி இவன் ரொம்ப கோவிச்சுக்கிறுன் சார்.

வக் : அப்ப எல்லாம் இன்னைக்கு, நாளைக்குன்னுதானே பேசுவான். இப்ப எப்படி தெரியுமா. இந்த 20th Century, 19th Century, 21st Century இப்படித் தான் பேசறுன்.

டாக் : ஒற்றுமை இல்லாம இந்த 'ஏசியா'வே கெட்டுப் போச்சுன்னு நம்ம கிளப் பியூன் பெருமாள்சாமி கிட்டே வந்து பேசறுன் சார். எதைப்பத்தி யாரு பேசறதுன்னு ஒரு வரம்பே இல்லாம போச்சே சார்.

எழுத் : அது இருக்கட்டும். நடக்க வேண்டியதைப் பார்ப்போம். அவனே விலக்க ஒரு முடிவு எடுப் போம். பேசாம அவன் வந்ததும் வெளிநடப்பு செய்திடுவோம்.

வக் : வெளியே, வெளியே, வெளியே! வெளியே என்ன சார் இருக்கு. பிரச்சினே கிளப்புக்குள்ளேதானே இருக்கு. வெளியே கேன்டியன்தான் இருக்கு. விவேகமாக உள்ளே இருந்தே காரியத்தை சாதிக் கிறதுதான் சார் நல்லது.

[முருகன் சீட்டியடித்துக் கொண்டு வருகிறுன்.]

அதோ அவனே வரானே.

எழுத் : ஏய்...!

முரு : என்ன இது! கொஞ்சமும் மரியாதை இல்லாம பேசறீங்க...!

எழுத் : மரியாதை, பணம் இதெல்லாம் திரும்ப கிடைக் கிற இடமா பார்த்துதான் கொடுக்கணும். தெரி யுமா? உங்க கிட்டே மரியாதையைக் கொடுத்தா, புதுசினிமா கம்பெனிக்கு பைனன்சு பண்ணின மாதிரிதான். திரும்ப வராதேப்பா...!

வக் : ஆமா! கோட்டு சூட்டு போட்டு வந்திருக்கிறுயா? இல்லே யாராவது போடுறதுக்கு உன் மேலே தூக்கிப் போட்டு, சுமந்துகிட்டு போறியா?

முரு : ஏன் சார்! நான் போட்டிருக்குது அவ்வளவு மோசமாவா இருக்கு.

வக் : பிறகு என்னப்பா! எதையுமே போட வேண்டிய வன் போட்டாத்தானே நல்லா இருக்கும். உன் தகுதி என்ன? இந்த சாந்தி நகர்லே நீ எப்படி இருந்தே. இப்படியெல்லாம் வந்திட்டா பெரிய மனுஷனாகிவிட முடியுமா?

முரு : எல்லா பெரிய மனுஷனும் என்னை மாதிரி உரு வானவன்தான் சார். என்னமோ ரொம்ப மிரட்டு றீங்களே!

ஆபீ : ஷட் அப். என்ன பேச்சு பேசற.

எழுத் : புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக்கிட்டது மில்லாமே பாய வேறல்ல வருது. உன்னை உள்ளே அனுமதிச்சதே தப்பு. நீ எங்களோட உட்கார்ந்து சீட்டாடுற வரைக்கு உசந்துட்டியா என்ன?

முரு : சரிய்யா. உங்களுக்கு நான் சமதை இல்லே. என் தகுதிக்கு வேற இடத்திலே உட்காரணும்?

[மேஜைமீது ஏறி உட்காருகிறான்.]

எழுந் : வாங்க சார். இன்னிக்கு எல்லோரும் போயிட்டா நாளைக்கு சரியாய் போயிடும்.

வக் : அதுதான் மிஸ்டேக். கிளப்புங்கிறது என்ன? இங்கிலீஷ்லே சொல்லிப்பாருங்க 'Club', அதையே தமிழ்லே சொல்லிப் பாருங்க 'கிளப்பு'. கிளப்புறதே நாமதானே. யாரோ சீட்லே இருக்கிறவர்கிட்டே சொல்லிட்டு, நாம ஏன் கிளம்பணும். இங்கே ஒரு குப்பை இருந்தா, நாம காலாலே தள்ளுற மாதிரி, இவனையும் தள்ள வேண்டியது நம்ம கடமைதான் சார். என்ன டாக்டர் சார்!

டாக் : முதல்லே இவனை மாதிரி ஆட்கள் உள்ளே வர்றதே சுகாதாரக் கேடு சார்! என்ன நினைக்கிறீங்க வக்கீல் சார்.

வக் : இப்பேர்ப் பட்டவங்க உள்ளே வர்றதே ஏதாவது தட்டிகிட்டு போகத்தான் சார். என்ன நினைக்கி றீங்க, டிடெக்டிவ் எழுதுவேளே. சொல்லுங்க சார்.

எழுத் : அநேகமாக இவன் ஒரு கொள்ளைக் கூட்டத்துக்கு உளவு சொல்ல வந்தவனுகத்தான் எனக்குப் படுது. ஏன்னு, நேத்து பெரிசா ஒரு இருமல் இருமினுன். அப்போ அதே நேரத்திலே வெளியேயிருந்து ஒரு கார் புறப்பட்டுப் போச்சு. அடிக்கடி தீப்பெட்டியை எடுத்து உத்துப் பார்க்கிறுன் சார்.

ஆபீ : ஹஹ்ஹா. பற்ற வைக்க நெருப்பு குச்சி இருக்கு தான்னு பார்த்திருப்பான் சார்.

எழுத் : What is this? ஏதாவது ரேடியோ சிஸ்டம் வைச்சு அனுப்பிறதாக, ஏன் இருக்கக்கூடாது.

வக் : May be! May be!

முரு : எனக்கு ஒரு காப்பி!

வக் : பாருங்க சார்! May beன்னு காபிங்கறுன்!

எழுத் : எப்படியும் தொலையருன் சார்! நமக்கு இவன் வேற Problemமா! இப்ப இதுக்குள்ளே சீட்டுப் போட்டிருந்தா ஆளுக்குக் கொஞ்சம் சில்லரையாவது சிக்கியிருக்கும். வீட்டுக்கு டாக்சியில் போக காசு கிடைச்சிருக்கும்...போப்பா...! நாங்க உன்னே சேத் துக்க மாட்டோம்!

முரு : என்ன இது அநியாயம்! அங்கே பேட்மிட்டன் லேயும் சேர்த்துக்க மாட்டேங்கிறுங்க. டேபிள் டென்னிசுக்குப் போனேன். ''பாய்'' பந்து எடுத்துப் போடுன்னு சொல்லிட்டாங்க. பில்லியர்ட்ஸ் ஆடப்

போனு அந்தக் கம்பாலேயே விரட்டிட்டாங்க. ஏன் நான் மெம்பர் பணம் கொடுக்கத்தானே செய்றேன்.

வக் : உன்னே யாரும் சேர்த்துக்கலேன்னு நாங்க என்னப்பா பண்ணுவோம்!

எழுத் : என்னப்பா இது! நாங்களே வீட்டிலே wife-கள் தொல்லே தாங்காம, இங்கே வந்திருக்கோம். நீ வேற தொந்தரவு படுத்தாதேப்பா! போப்பா!

[சிகரெட்டைப் புகைத்து அவன் முகத்தில் ஊதுகிருர்கள். பிடித்துத் தள்ளிவிடுகிருர்கள்.]

முரு : எனக்கே பேரும் புகழும் இருந்து, இப்படி பிடிச்சு என்னே வெளியே தள்ளுவீர்களா! வாங்கோ ஹலோ! மிஸ்டர் முருகன் சார்! வாங்கோ இப்படி உட்காருங்கோ-டேக் யுவர்ஸீட்னு வரவேற்பிங்க! ஸ்வீட், காரம், காபி, பழம் வச்சு பிரமாதமா விருந்து வச்சு சாப்பிடச் சொல்வீங்கோ! நான் வேண்டாம், வேண்டாம் இப்பதான் சாப்பிட்டேன்னு சொல்வேன். மறுபடியும் சாப்பிடச் சொல்லி வற்புறுத்துவீங்க. நானும் மறுபடியும் வேண்டாம்னு பிகு பண்ணுவேன்.

எழுத் : சரிதான் போடா!

[அனேவரும் கழுத்தில் கைபோட்டு, வெளியே பிடித்துத் தள்ளுகிருர்கள்.]

திரை

காட்சி : 9

இடம்: வீதி.

பாத்திரங்கள்: பாதிரியார், முருகன்.

[பாதிரியார் வந்துகொண்டு இருக்கிறார். கிளப்பி லிருந்து பிடித்துத் தள்ளப்பட்ட முருகன் வெளியே வந்து அவர் மேலே விழுகிறான்.]

பாதிரி: தம்பி, நீ யாரப்பா...?

முரு : பார்த்தீங்களா? யாரைப் பார்த்தாலும் என்னை யார் யார்னு கேட்கிறாங்களே. உலகமெல்லாம் சில பேரைத்தானே தெரிஞ்சு வைச்சிருக்கு. என் பேரை யும் தெரிஞ்சு வச்சுக்கலையே சாமி.

பாதிரி : தம்பி, ஏன் அழுகிறாய்? என்ன சமாச்சாரம்? நீ என்ன குற்றம் செய்தாய்?

முரு : ரொம்ப பெரிய மனுஷங்களாம்! நான் அவங் களோட சேரக் கூடாதாம்! என்கிட்டே புகழ் இல்லையாம்! பொருள் இல்லையாம்! தரம் தகுதி எதுவுமே இல்லையாம்! நான் அவங்க கிட்டே பழ குறதே அவமானமா இருக்காம். நீங்க சொல்லுங்க. நீங்களும் ஒரு பாரதியாராச்சேன்னு கேட் கிறேன்.

பாதிரி : நான் பாரதியார் இல்லேப்பா! பாதிரி யார்...!

முரு : சரி; திருத்திக்கிறேன்! நீங்க சொல்லுங்க! உலகத் திலே ஒருத்தனுக்குப் புகழ் இல்லேன்னா அது ஒரு குற்றமா சாமி! அவங்க என்னை எப்படி அலட்சியம் பண்ணினாங்க தெரியுமா! சராசரி மனுஷனுக்கு ஒரு

மரியாதை உண்டே அதுகூட கிடைக்க மாட்டேங் குது சாமி!

பாதிரி : ஹஹ்ஹா... (சிரிப்பு)

முரு : முன்னே புகழ் அங்க வஸ்திரம் மாதிரி இருந்து துங்க! இருந்தா போட்டுக்கலாம்! இல்லாட்டி பரவா யில்லே! இப்ப வேட்டிமாதிரி அவசியமா ஆயிட்டுது சாமி! புகழில்லாட்டி மனுஷனேப்பத்தி என்ன நினேக் கிருங்க தெரியுமா சாமி! சுமார் 5 அடி உயரத்திலே ஒரு புழு நடந்து வருதுன்னுதான் சாமி நினேக் கிருங்க! இப்படி நினேக்கலாமா...?

பாதிரி : ஹஹ்ஹா...(சிரிப்பு)

முரு : என்ன இது? நான் பேசிக்கிட்டே இருக்கேன். நீங்க ஹஹ்ஹான்னு சிரிச்சுக்கிட்டே இருக்கிறீங்க. நீங்களும் புகழ் உள்ளவங்க கிட்டதான் வாய் திறந்து பேசுவீங்களா?

பாதிரி : ஹஹ்ஹா! (சிரிப்பு)

முரு : சரிதான்! இதுக்கும் சிரிப்புதாஞ ஐயா! சாமி! தெய்வம் மாதிரி வந்திருக்கீங்க! கும்பிடறேன். நான் இந்த நாட்டிலே புகழை வாங்கி ஒரு பெரிய மனுஷஞகி, என்னே மிதிச்ச இந்த உலகத்தை நானும் ஒரு மிதி மிதிச்சு, இப்ப என்ன சொல் றேன்னு ஒரு டயலாக் கேட்டுட்டா போதும் சாமி! என் தாபம் அடங்கிடும்! இதுக்கு ஏதாவது ஒரு வழி சொல்லுங்க சாமி!

பாதிரி : உன் கோரிக்கையில் பாவம் கலந்திருக்குது! தம்பி! பழி வாங்க நினேக்கிறுயே, உனக்கு என்று எதையாவது விரும்பு, அதையே ஒரு கருவியாக்கி உலகத்தோடு போர் தொடுக்க விரும்பிஞல்,

ஆண்டவர் சம்மதிப்பாரா? அவருக்கு நாமெல்லாம் குழந்தைகளே! நமக்குள் சண்டை மூட்டிவிட அவர் விரும்பமாட்டார்?

முரு : சரி ஐயா! நான் யாரையும் பழி வாங்க நினைக் கலே. நான் மட்டும் முன்னுக்கு வர ஒரு வழி சொல் லுங்க சாமி!

பாதிரி : மனிதர்களிடம் கை ஏந்தாதே. எதுவும் கிடைக் காது. மனிதனிடம் மனிதன் எதையாவது கேட்பது ஆஸ்பத்திரியிலே ஒரு நோயாளியிடம் மற்றொரு நோயாளி மருந்து கேட்பது போல்தான். சர்வ வல்லமை உள்ள ஆண்டவர்தான் இந்த மனித நோயாளிக்கே டாக்டர். அவரிடம் கை நீட்டு. இரந்து நில்; பிரார்த்தனை செய். கோரிக்கை நிறை வேறும்.

முரு : ஆண்டவர் கிட்டே எப்படி சாமி பிரார்த்தனை செய்றது? எப்படின்னு சொல்லுங்க சாமி.

பாதிரி : எளிமையைக் கடைப்பிடி; இனிய வார்த்தை களையே பேசு. தன்னுயிரைப் போல மன்னுயிரை நேசி. கடுஞ்சொற்களை ஒருபோதும் சொல்லாதே. முகத்திலும், அகத்திலும் அன்பு பொங்க வேண்டும். விரோத மனப்பான்மையை அறவே விட்டுவிடு. இப்படியெல்லாம் உன்னை நீ பக்குவப் படுத்திக் கொண்டால், உன் கோரிக்கை ஆண்டவர் செவியில் எட்டும் தம்பி!

முரு : சாமி! வழிகாட்டிட்டீங்க! என்னைப் பொறுத்த வரையில் உங்களை நான் என்றைக்குமே மறக்க முடியாது சாமி. ரொம்ப நன்றி சாமி!

பாதிரி ஹஹஹா! கர்த்தர் உன்னை இரட்சிப் பாராக!

முரு : (தனக்குள்) என்ன சொன்ஞர்? இனிமையாகப் பேசணும். எளிமையாக இருக்கணும். அன்பாகப் பழகணும்.

[பாதிரியைப் போன்றே தனக்குள் சிரித்துக் கொண்டு, அவரைப்போல அப்படியே நடந்தவஞக, அவர் கூறிய அறிவுரைப்படியே வாழும் முடிவுடன் சொல்கிருன்.]

திரை

காட்சி : 10

இடம் : விருத்தாச்சலம் பிள்ளை வீடு.

பாத்திரங்கள் : பார்வதி, அஞ்சுகம், விருத்தாச்சலம், மில் ஓனர் செல்வநாயகம், செகரட்டரி.

[அஞ்சுகம் தன்னை மிகவும் அழகாகச் சிங்காரித்திருக்கிருள். பார்வதி பார்த்தாலே வெறுக்கும் அளவுக்கு அலங்கோலமாக இருக்கிருள்.]

அஞ்சுகம் : அம்மா! நான் சொன்னதை மறந்திடக் கூடாது. அப்படியே நடக்கணும்.

பார்வதி : சரி...சரி.

அஞ் : அப்பா ஏதாவது ஜாடை காட்டினுர், அது இதுன்னு மாறிட்டீங்க அப்புறம் என்னைக் கேட்கக் கூடாதுங்க!

பார் : மாறமாட்டேன்.

அஞ் : அதோ சத்தம் கேட்குது. வர்ருங்க போல் இருக்கே. இந்தாங்க போங்க.

[பார்வதி அருவருப்பு கொள்ளும் வண்ணம் நடிக்கிருள். அஞ்சுகம் ஆப்பிளை நறுக்கிக்கொண்டிருக்கிருள். மில் ஓனர் செல்வநாயகம் வருகிருர். கூடவே விருத்தாச்சலம் வருகிருர்.]

விருத்தாச்சலம் : பார்வதி...பார்வதி!

பார்வதி : என்னப்பா...?

[பார்வதி பேரிக்காயைக் கடித்துக்கொண்டே வரு கிருள்.]

செல்வநாயகம் : இதுதான் உங்க மகளா?

விருத் : ஆமாம்! குழந்தை மாதிரி சுபாவம்.

செல்வ : ஆமா! ஆமா!! பேரிக்காயைக் கடிச்சு சாப்பிடற திறுசிலிருந்தே தெரியுதே. அதோ ஆப்பிள் நறுக்கிக்கிட்டிருப்பது யாரு?

விருத் : அது நம்ம வீட்டு வேலேக்காரப் பொண்ணு! உங்க மில்லிலே வேலே பார்க்கிற பொன்னம்பலம் மகள். சின்ன வயசிலே இருந்து நம்ம வீட்டிலே தான் வேலே, சமையல் எல்லாம் செஞ்சுக்கிட்டிருக் குதுங்க.

செல்வ : எல்லா வேலேயுமே அதுதான் பார்க்குதா...?

விருத் : ஆமாம்.

செல்வ : அப்போ...! உங்க மகளுக்கு எந்த வேலேயுமே தெரியாது?

விருத் : தெரியும்! தெரியும்! நான் கஷ்டப்பட்டு அதை யெல்லாம் செய்ய விடுகிறதில்லே. சதா படிப்பு தான். எந்தப் புத்தகத்திலே என்ன இருக்குதுன்னு இங்கே நின்னுகிட்டே சொல்லுவா. நேத்து, ஏம்மா! சித்தர் பாடல்லே கடைசிப் பக்கத்திலே என்ன இருக்கு சொல்லு பார்ப்போம்னு கேட்டேன். கரையான் அரிச்சுருக்குன்னு பட்டுன்னு சொல் லிட்டாளே.

செல்வ : அப்படியா?

பார் : ஆமாம்.

செல்வ : ஏன் இப்படி ஒரு மாதிரியா 'ஆமா'ங்குது.

விருத் : சும்மா விளையாட்டுக்கு இப்படிப் பேசுது. நல்லா பேசும்.

செல்வ : ஏன்மா, உன் பேரு என்ன?

பார் : பார்வதி...!

செல்வ : உன் பெயர் என்ன? (வேலைக்காரியைப் பார்த்து)

அஞ் : அஞ்சுகம்.

செல்வ : ஏன்க! நான் கொஞ்சம் எப்பவுமே Intelligenceஐ விரும்புகிறவன். யார் யார் எதை விரும்புறுங்களோ, அதிலே இருந்தே அவங்களைத் தெரிஞ்சுக்கலாமில்லையா? அதனாலே சாதாரணமாக உங்கள் மகள் என்னென்ன விரும்புறுங்க என்பதைப் பத்தி சில கேள்விகள் கேட்கலாம்னு வந்திருக்கேன். கேட்கலாமுங்களா?

பார் : சும்மா கேளுங்க. நமக்குள்ளே என்ன இருக்கு!

செல்வ : (திகிலுடன்) நீங்க சொல்ல வேண்டிய பதிலை அதுவே சொல்லிட்டுது.

விருத் : வேற ஒண்ணுமில்லே; அவ்வளவு ஆர்வம். கேளுங்க கேள்விகளை. அவ சொல்ற பதிலைக் கேட்டுத் திணறப் போறீங்க.

செல்வ : கனிகளிலே உனக்குப் பிடித்தமானது எது?

பார் : எலந்தைப் பழம்.

செல்வ : (கேட்டு அருவருப்பு) ஏம்மா, நீ சொல்லு உனக்குப் பிடித்தமானது.

அஞ் : மாங்கனி.

செல்வ : (கேட்டதும் மதிப்பு) புத்தகங்களில் உனக்குப் பிடித்தமானது எது?

பார் : கோலப் புத்தகம்.

செல்வ : (கேட்டதும் அருவருப்பு) நீ சொல்லு.

அஞ் : வீட்டிலே வரவு செலவு எழுதுற கணக்குப் புத்தகம்.

செல்வ : (கேட்டதும் மதிப்பு) புராண இதிகாசங் களிலே உனக்குப் பிடித்தமானவள் யாரு...?

பார் : திரௌபதி.

[ஒரு விரல் காட்டி, பின் ஐந்து விரல்களைக் காட்டு கிறாள்.]

செல்வ : ஐய்யோ! உனக்கு...?

அஞ் : கண்ணகி...!

செல்வ : (மதிப்புடன் ரசித்து) ஆஹா!

விருத் : ஏதோ விளையாட்டுக்குத்தான்...பார்வதி இப் படிப் பேசுது! நல்லா சொல்லும்; இப்ப கேளுங்க. பூக்களில் சிறந்தது எது? ஏம்மா நல்லா யோசிச்சு சொல்லு. கேட்கிறது யார் தெரியுமில்ல. நல்லா சொல்லு.

செல்வ : பூக்களில் சிறந்தது எது?

பார் : எருக்கம் பூ!

செல்வ : உங்க மகள் சொல்ற வேகத்தைப் பார்த்தா? அந்த எருக்கம் பூவாலேயே மாலை கட்டி என் கழுத் திலே போட்டிடுவா போல இருக்கே! ஏம்மா, நீ சொல்லு. பூக்களில் உனக்குப் பிடித்தமானது எது,

[அஞ்சுகம் தன் கூந்தலிலிருந்து ஒரு ரோஜாவை எடுத்துக் காட்டி]

அஞ் : ரோஜாப்பூ...

விருத் : என் மகள் எப்பவாவது பேசினதை கவனம் வச்சு பேசுது. இதுக்கு சொந்தமா எதுவும் தெரியாது. வேலைக்காரப் பொண்ணுதானே.

செல்வ : நீங்க சும்மா இருங்க; என்னமோ உடம்புக்கு சுகமில்லாத ஆளு ஏன் அலட்டிக்கிறிங்க! ஏம்மா பார்வதி. நீ சொல்லு, உனக்கு உலக நாடுகளில் எது பிடிக்கும்?

பார் : காங்கோ.

செல்வ : நீ சொல்லும்மா அஞ்சுகம்! உலகத்திலே உனக்குப் பிடிச்ச நாடு எது?

அஞ் : என் தாய்நாடான பாரதம்தான்.

செல்வ : இன்னும் ஒரே ஒரு சான்ஸ் Lost chance! இந்தக் காலத்திலே கணவன்கிட்டயிருந்து மனைவி எதிர்பார்க்கிறது எது?

பார் : விவாகரத்து!... டைவர்ஸ்!

செல்வ : நீ சொல்லு அஞ்சுகம்.

அஞ் : கணவனோட மாறாத அன்பு.

செல்வ : (எழுந்து நின்றவாறு) All right. நான் வரட்டுமா. நீங்க போங்கம்மா உள்ளே.

[இருவரும் போகிறார்கள். விருத்தாச்சலம் பிள்ளை அஞ்சுகத்தை மிகவும் கோபமாகப் பார்த்து, 'போ உள்ளே' என்று விரட்டுகிறார். செல்வநாயகம் மீண்டும் அவளைப் பார்க்க விரும்பி]

செல்வ : அந்த வேலைக்காரப் பொண்ணைக் கொஞ்சம் வரச் சொல்றீங்களா?

விருத் : ஏன்?

செல்வ : தாகத்துக்கு ஏதாவது...

விருத் : ஏன் பார்வதியையே கொண்டு வரச் சொல்றேனே! பார்வதி! ஏதாவது தாகத்துக்குக் கொண்டு வா! என்ன இருக்கு?

பார் : உங்களுக்குப் போட்டிருக்கிற அரோரூட்டு கஞ்சி தான் இருக்கு அப்பா.

அஞ் : பால் காய்ச்சி Flaskல் வச்சிருக்கேன். கொண்டு வரட்டுமா?

விருத் : சரிம்மா! ஏதாவது கொண்டு வந்து கொடு.

[அஞ்சுகம் பால் கொண்டு வந்து வைக்கிருள். அவளை செல்வநாயகம் உற்று உற்றுப் பார்க்கிருர். வெற்றிலைப் பாக்கு கொண்டுவந்து வைக்கிருள். உற்று ரசித்துப் பார்க்கிருள்.]

அப்போ வர்ற சித்திரையிலேயே நிச்சயம் பண்ணிக்குவோம்.

செல்வ : ஓ! தாராளமாக. அப்படியே நிச்சயம் பண்ணிக்குவோம்.

விருத் : உங்களுக்கு இப்ப மனசு ஒரு நிறைவா ஆகி இருக்கும்னு நினைக்கிறேன்.

செல்வ : ஆமா ஆமா. மனசு நிறைவு ஆயிட்டுது.

விருந் : இந்தா பாருங்க! நம்ம சம்பந்தத்தைப் பத்தி இந்த சாந்தி நகர்லே என்ன பேசிக்கிருங்க தெரியுமா?

செல்வ : என்ன பேசிக்கிறுங்க?

விருத் : இரண்டு இடமும் தராசு பிடிச்ச மாதிரி சரி யான சம்பந்தம்னு புகழ்ச்சியா பேசுறுங்க.

செல்வ : நம்மகிட்டே என்ன இருக்கு. எதுவுமே நினைச் சதுமே சந்தோஷப் படக்கூடாது. நாம நடக்கும்னு நினைக்கிறதை தெய்வம் தடுத்திடுது. நடக்கா துன்னு தெய்வம் நடத்திடுது.

விருத் : அப்போ ஒண்ணு செய்வோம்.

செல்வ : என்ன?

விருத் : நாம நடக்காதுன்னு நினைச்சுக்குவோமே. தெய்வம் நேர் எதிரா நடத்திருமில்லே.

செல்வ : தெய்வத்துக்கிட்டே நடக்குமா. நம்ம தந்தி திரங்கள் சாதாரணமா ஆபீசர்கள் கிட்டேயே பலிக்கிறதில்லேயே! இறைவன் கிட்ட அப்படி தந்திரம் பண்ண முடியுமா?

விருத் : அப்ப...?

செல்வ : ஊர் போய் லெட்டர் விபரமாக எழுதுறேன்.

விருத் : (எழுந்து) சரிங்க...! போய்ட்டு வாங்க.

[விருத்தாச்சலம் பெண் பார்க்க வந்த மாப்பிள் ளேயை நம்பிக்கையுடன் அனுப்பி வைக் கிறுர்.]

திரை

காட்சி : 11

இடம் : மார்க்கெட்டில் ஒரு பகுதி.

பாத்திரங்கள் : முருகன், வெங்காயக் கடைக்காரன், வெற்றிலைக் கடைக்காரன், கைவண்டிக்காரர்.

[வெங்காயக் கடைக்காரர் குருசாமி, வெற்றிலைக் கடைக்காரர் கருப்பையா இருவரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.]

குருசாமி : ஏண்ணே! இன்னைக்கு கடைசி நாள் தவணையாச்சே. வட்டிக் கடைக்காரர் ஆள் அனுப்புவாரே. என்ன பதில் சொல்றதுன்னே புரியலையே. வியாபாரமும் சரியா இல்லையே அண்ணே.

கருப்பைய்யா : அதை நினைச்சுத்தான் நானும் கவலைப் பட்டுக்கிட்டு இருக்கேன். எனக்கும் இன்னிக்குத் தான் கடைசி வாய்தா. யாரோ ஒரு புது ஆளை வசூல் பண்ணறதுக்குன்னே வச்சிருக்கானும்.

குரு : அது வேறு யாருமில்லே. கோட்டும், சூட்டும் போட்டுக்கிட்டு, இந்த ஊரையே ஒரு கலக்கு கலக்கிக்கிட்டிருந்தானே. அந்த முருகன்தான். அவன் சாதாரணமா நம்ம சேமம் கேட்டாலே, கடன் கேட்கிற தொனியிலே கேட்டுத் தொல்லைப்படுத்துவான். அவனைப் போயி அந்த வட்டிக்கடைக்காரர் வசூலுக்கு வச்சிருக்காரு.

கரு : அண்ணே! ஏதாவது நம்ம மானத்தை வாங்கிடப் படாதேன்னுதான் பயமாயிருக்குது. அண்ணே! மார்க்கெட்டிலே லட்சம் ரூபாய் போயிட்டாலும் நாளை எதிலேயாவது தட்டிக்கிடலாம். மானம் போயிட்டா, அதை மட்டும் எந்த மார்க்கட்டிலே

யாவது திரும்பப் பெற முடியுமா? அதோ வர்ருன் போலிருக்கே.

குரு : ஏதாவது முறைச்சான்னு பதில் பேசாதீங்க. ஐயா! கையிலே பணம் வரலே. வந்ததும் கொண்டு வந்து தந்திடுவோம்னு அடக்கமா பதில் சொல்வோம். பதிலுக்குப் பேசினுதானே சண்டை வளரும்.

கரு : சரியண்ணே! சும்மா இருங்க. அதோ வந்திட்டான்.

[முருகன் அருகில் வந்து நின்று இவர்கள் எதிர் பார்த்ததற்கு மாருகப் பாதிரியார் அறிவுரைப்படி பணிவுடனும் இனிமையாகவும்]

முரு : ஐயா! நீங்கள்தானே வெங்காய வியாபாரி குருசாமி?

முரு : ஆமா!

குரு : நான்தான் வட்டிக்கடை முதலாளிக்கிட்டேயிருந்து வந்திருக்கேன். தாங்கள் இன்னிக்கு கடைசி வாய்தா வச்சிருக்கீங்களாம். தர்றீங்களா...?

குரு : இன்னேக்கு வியாபாரம் ஒண்ணும் சரியில்லே. என் கடையிலே எந்தப் பெட்டியைத் திறந்தாலும் சரி. கால் காசு தேருது. வெங்காயத் தோலே உறிச்ச கதைதான். அதனுலே ஒரு வாரம் போகட்டும்னு அவர்கிட்டே சொல்றீங்களா?

முரு : அதற்கென்ன? அப்படியே சொல்லிடறேன். வெங்காயம் சரியாக விற்கலேன்னு நீங்க என்ன செய்வீங்க. (அடுத்தவரிடம்) பாவம்! ஐயா! நீங்க தானே வெற்றிலேக்கடைக்காரர் கருப்பையா...?

கரு : ஆமா. எனக்குக்கூட இன்னைக்குத்தான் கடைசி வாய்தா. பாருங்க! வெற்றிலே விற்பனை இல்லாம வாடிப் போயிருக்குது. நான் எப்படி கொடுத்த வாக்கை நிறைவேத்துறது? நானும் வெங்காயம் மாதிரிதான். அதனுலே...!

முரு : ஒருவாரம் கழித்துத் தர்ரேன்னு சொல்றீங்களா. அதைப் பத்தி பரவாயில்லே. அப்படியே செய்யுங்க. ஐயாகிட்டே நான் சொல்லிடறேன். இங்கே கைவண்டிக்காரர் ஒருத்தர்...?

கைவண்டிக்காரர் : (இவன் சாது என்று தெரிந்து முறைப்புடன்) ஏன்யா! அது நான்தான். ஆள் வேற அனுப்பிட்டாரோ? நாங்க என்ன இந்த மார்க் கெட்டை விட்டே ஓடிடுவோம்னு நினைக்கிருரா? அவரு சொன்ஞர்னு நீ வேற புத்திசாலி வந்துட்டி யாக்கும். ஏன்யா, இந்த நாட்டிலேயே எல்லா சாதியும் ஒழிஞ்சுப் போச்சுய்யா...! இப்ப இருக் கிறது ஏழை சாதி, பணக்கார சாதி ரெண்டுதான். நீயெல்லாம் நம்ம சுயஜாதி. அவருக்கு வக்காலத்து வாங்காதே. போயிடு.

முரு : ஐயா! ஏன் நீங்க கடுமையாய் பேசறீங்க. உங் களுக்கு எப்போ பணம் வருதோ, அப்போ கொடுங்க. நான் இப்ப உங்களை ஒண்ணும் சொல்ல லேயே. வருத்தப்படாதீங்க. உங்களோட கஷ்ட நிலைமையை நான் அங்கே போய் சொல்லி விடு கிறேன். அப்ப வரட்டுங்களா!

கைவண்டிக்காரர் : என்ன சொல்றதுன்னே! எங்களுக்கு வந்தா கொண்டு வந்து தர மாட்டோமா? அவன் சொன்ஞன்னு நீயும் கேட்க வந்துட்டியாக்கும். என்னை மாதிரி கைவண்டி இழுத்துப் பிழையேன்.

ஏன், அவனுக்குப் போய் கை ஆளா இருக்குறே. இந்தா பாரு. நாம சுத்தமான ஏழைங்க. இந்த ஜன்மத்திலே, நமக்கு வயிறு நிறைய சோறு கிடைக்கப் போறதில்லேன்னு ஆகிப்போச்சு. மனம் நிறைஞ்ச வாழ்க்கையாவது வாழ்ந்திட்டுப் போவோமேய்யா. அவனுக்குப் பின்னாலேயே நாய் குட்டி மாதிரி ஏய்யா.

முரு : நாய்குட்டி அது இதுன்னு ஏன் கடுஞ்சொல்லே உபயோகப்படுத்துறீங்க. ஒரு பெரியவர் உபதேசம் பண்ணியிருக்கார். இனிமையா பேசணும், எளிமையா வாழணும்னு. இப்படி பேசறீங்களே. நான் வரட்டுமா? அடுத்த வாரம் வருகிறேன். ஆண்டவர் உங்களே ரட்சிப்பார்.

[போகிறான்.]

கரு : ஏண்ணே! வட்டிக் கடைக்காரருக்கு, ஏதோ கெட்ட காலம் போல்ருக்கே. அதுதான் இப்படி ஆளே வச்சிருக்கான். இவன் இப்படி பேசினா நாம எப்படி பணத்தைத் திருப்பிக் கொடுப்போம். இன்னும், ஏண்ணே கவலேப்படறே. நமக்கு ஏத்த ஆளாத்தானே அனுப்பிருக்காரு! ஏன் கவலே?

குரு : நான் அதுக்குக் கவலேப்படலே. வரப்போற ஆள் இப்படி இருப்பான்னு முன்னேயே தெரிஞ்சிருந்தா, Amount இன்னும் கொஞ்சம் அதிகமாவே வாங்கி யிருக்கலாமேன்னுதான் கவலேப்படறேன்.

[முருகன் போனதும் எல்லாரும் சிரிக்கிறார்கள்.]

திரை

காட்சி: 12

இடம்: குடிசை வீடு.

பாத்திரங்கள்: பொன்னம்பலம், நல்லபெருமாள், முருகன், அஞ்சுகம்.

பொன்:

வீடும் பெரிதல்ல, ஊரும் பெரிதல்ல,
உற்றுப் பெற்ற பேரும் பெரிதல்ல
யாரும் பெரிதல்ல!

[பாடிக்கொண்டிருக்கிறுர்.]

நல்ல: என்ன வீடு பெரிதல்லன்னு சொல்லிக்கிட்டு வீட்டைத் துப்புறவு பண்ணிக்கிட்டிருக்கீங்க.

பொன்: வீடு பெரிதல்லங்கிறதை நீங்க அந்த அர்த் தத்தை எடுத்துக் கிட்டீங்களா? நான் வீடு பெரிசா இல்லையேன்னு ரொம்ப நாளா சின்ன வீட்டிலேயே குடியிருக்கிறுமேங்கிற வருத்தத்திலேதான் பாடி னேன்?

நல்ல: அப்படீங்களா? வசதி கூடக்கூட எதிலுமே உங்க கண்ணோட்டம் புது தினுசாத்தான் இருக்கு! ஆமாம், அந்த அன்னச் சத்திரம், அனுதை நிலையம் பிளான் எல்லாம் எப்படி இருக்குது?

பொன்: அதுதான் எனக்கும் ஒரே கவலையாய் இருக்கு. ஒரு ஆள்கிட்டே நிதி கேட்க நான் போய்கிட்டு இருந்தேன். அவரு எதிர்தரப்பிலேயே வந்தாரு. நான் கேட்கிறதுக்கு முன்னுலேயே, அவரே பள்ளிக் கூடம் கட்டப் போறேன்னு ஏங்கிட்டேயே நிதி கேட்டாரு. நான் என் பேச்சை நிறுத்திக்கொண் டேன். அதுக்குள்ளே இன்னெரு கவலே.

நல்ல: என்ன?

பொன் : நான் அனுதை நிலையம் கட்டறதுக்குள்ள, அனுதைகள் பிரச்சினை தீர்ந்திடும் போலிருக்கே! அப்புறம் நான் நிலையத்தைக் கட்டிக்கிட்டு அனுதைகளைத் தேடியலையறதா! அன்னச் சத்திரம் கட்டி வச்சிடலாமின்னு இப்போ வெறும் அன்னத்தை மட்டும் சாப்பிடுற பழக்கம் அநேகமா குறைஞ்சு போச்சு! ரொட்டிப் பழக்கம் வந்தாச்சு! ரொட்டிச் சத்திரம்னு பேரு கேட்கவே நல்லாயில்லை பாருங்க! அதனுலேதான் தர்மாஸ்பத்திரி கட்டணும்னு நினைச்சேன். நான் தர்மாஸ்பத்திரி கட்டறதுக் குள்ளே நாட்டிலே பிணியுமே தீர்ந்திடும் போலிருக்கு; இப்போ பிளேக் குறைஞ்சாச்சு. காலரா குறைஞ்சாச்சு. இருக்கட்டும், எப்படியோ நாட்டிலே சுபிட்சம் வரணும். அதுதானே நம்ம கனவு.

நல்ல : அது சரி! நீங்க கட்டிடுங்க. இந்த பிரச்னைகள் நீங்கிட்டாலும் அப்ப அப்ப உள்ள பிரச்னைக்கு ஏற்ப கட்டிடங்களை, அது அதுக்குன்னு மாத்திக் கலாம். எசமா...எந்த பெரியவங்க பெயரை வச்சுக் கட்டப்போறீங்க?

பொன் : எந்தப் பெரியவங்க பெயராலேயும் நான் கட்டப் போறதில்லை. உண்மையிலேயே பெரியவங்க எல்லாம், பெயரை விரும்புறதில்லை. பெயரை விரும்பிஞங்கன்னு அவங்க பெரியவங்க இல்லை. அதனுலே இந்த பேர் பிரச்னைக்கே நான் வரப் போறதில்லை. இந்த மஹாபலிபுரத்திலே சிற்பம் செதுக்கிவச்ச சிற்பிங்க பேரு தெரியுமா உங் களுக்கு?

நல்ல : தெரியாது.

பொன் : தஞ்சாவூர் கோவில் கோபுரத்தைக் கட்டிய கலைஞர்கள் பெயர் தெரியுமா?

நல்ல : தெரியாது.

பொன் : அப்படி இருக்க, இப்ப என்னடான்னு தண்ணீர் பந்தலுக்கு போர்டு எழுதிட்டு, கீழேதான் பெயரையும் போட்டிருப்பான். புத்தகத்ின்மேல் அட்டைப்படம் எழுதிட்டு, உள்ளே புத்தகம் எழுதின ஆசிரியர் பெயரைவிட கீழே தன் பெயரை பெரிசா போட்டிருப்பான். என்ன பேரு! புகழு! இதைக் கேட்டாலே எனக்குப் பிடிக்கலே. பயமா யிருக்கு.

நல்ல : சரி; உங்க இஷ்டப்படி செய்யுங்க. அப்போ நான் வரட்டுமா.

பொன் : இந்தாங்க, மலேக்கோவில் கட்டளேப் பிரசாதம்.

[விபூதிப் பிரசாதம் கொடுக்கிருர். அஞ்சுகம் அங்கு வருகிருள்.]

அஞ் : என்னப்பா! உங்க பெயராலேயே கட்டிடுங்க ளேம்பா? புகழ் வேண்டாங்குறேளே. அதுக்கு தானே எல்லாரும் துடிக்கிருங்க.

பொன் : அஞ்சுகம்! எல்லாம் ஒரு காரியமாத்தான்.

அஞ் : என்னப்பா? .

பொன் : இந்தா பாரு! புகழ் வேண்டாம்னு சொல்லிக் கிட்டிருந்தா அதுவே ஒரு புகழாயிடும். ஆகாகா! பேர் வேண்டாங்குருரே. அவர்தான் பெரிய மனுஷன்னு பேசுவாங்க. முன்னே 4 பேர் பாராட் டிஞ, இப்ப நாப்பது பேரு பாராட்டுவாங்க. உனக்கு என்ன தெரியுது. நீ சின்னபிள்ளே.

[பிறகு அஞ்சுகம் குடம் எடுத்துக் கொண்டு தண்ணீர் கொணரப் போய்விடுகிருள். ஒரு அருட்பா பாடலே உருக்கமாகப் பாடிக் கொண்டிருக்கிருர். அப்போது முருகன் அங்கு வருகிருன்.]

முரு : மாமா! மாமா!

பொன் : என்ன சௌக்கியமா இருக்கியா? ஏன் ஆளேயே இந்தப் பக்கம் காணோம்? என்ன இது. நாளுக்கு நாள் கோலம் மாறிக்கிட்டே போகுது?

முரு : ஆமாம் மாமா! நான் அன்னிக்குச் சொல்லலே. அதே மாதிரி நானும் காலத்தோட சேர்ந்து ஓடிக் கிட்டே இருக்கேன்.

பொன் : பார்த்துப் போ! நடந்து போகும்போதே சில பேர் தட்டி விழுந்திடறுங்க. நீ ஓடிப் போறவனு யிருக்கே. பார்த்துப் போ. அது சரி; நீ இப்ப எங்கே வேலே பார்க்குறே?

முரு : இப்பத்தான் மாமா நான் சேரவேண்டிய இடத்தில் போயி சேர்ந்திருக்கேன். மனுஷன் தங்கமானவன். அதுதான் வட்டிக்கடைக்காரர் தர்மலிங்கம் கடனே வசூல் பண்றதுக்காக என்னே நியமிச்சிருக்காரு.

பொன் : அதுலே என்ன சம்பளம் தந்துடப் போறுரு?

முரு : மாமா! நான் சம்பளத்தை எதிர்பார்த்து மட்டும் அங்கே இல்லே! முன்னுக்கு வர அங்கு ஒரு வழி தெரியுது. என்னே மாதிரித்தான் முன்னே ஒரு ஆளே வச்சிருந்தாராம். பிறகு பிள்ளே இல்லேன்னு அவனேயே சுவீகாரம் எடுத்துக்கிட்டாராம். ஆனு அந்தப் பையன் ஏதோ விபத்திலே செத்துப் போயிட்டான். அதாலே என்னேயே இப்ப சுவீகாரம் எடுத்துக்க ஒரு சான்சு வந்திருக்கு. அப்படி நடந்திட்டா? ஒரே நாள்லே நான் இந்த சாந்தி நகர்லே பெரிய புள்ளியாயிடமில்லே.

பொன் : நல்லா நீ இதுலே கவனிக்க வேண்டியது ஒண்ணு இருக்கு மாப்பிள்ளே. அந்தப் பையன்

எப்போ செத்திருக்கான்? அவரு சுவீகாரம் எடுத்த துக்கு அப்புறம் செத்திருக்கான். நீ அதே ஆளு கிட்டதான் சுவீகாரம் போகணும்னு ஆசைப்படுறே. எனக்கு என்னமோ சாவோட விளையாடுற மாதிரி இருக்கு. வேண்டாம் மாப்பிளே. வள்ளலார் என்ன சொல்றார்னு தெரியுமா?

முரு : என்ன சொல்லியிருக்கப் போறார் மாமா. என்னை மாதிரி ஆட்களுக்குப் பிடிக்காததாகத்தான் ஏதா வது சொல்லியிருப்பாரு. மாமா! அன்னிக்கே நான் என்ன சொல்லி இருக்கேன். என் கொள்கையில் மட்டும் தலையிடாதீங்கன்னு சொன்னேன்ல. என்னை என் போக்கிலேயே விடுங்க மாமா. இதுக்கு தான் நான் உங்களை அடிக்கடி வந்து பார்க்கிற தில்லே. உற்சாகப்படுத்த மாட்டேங்கிறீங்களே. எதுக்கு முன்னேற்றம், எதுக்கு முன்னேற்றம்னு தடுத்துக்கிட்டுதான் இருக்கீங்க.

போன் : என்ன செய்யறது மாப்பிளே. உன் வாழ்க்கையிலே தலையிடாமல் என்னாலே இருக்க முடியலேயே. இந்தா பாரு நாளும், பொழுதும் போயிக்கிட்டே இருக்கு. உனக்கும், அஞ்சுகத்துக் கும் கல்யாணத்தைப் பண்ணிவச்சு, என் கண் குளிரப் பார்க்கணும்னு துடிச்சிக்கிட்டிருக்கேன் மாப்பிளே.

முரு : மாமா! கல்யாணமாகி தம்பதிகள் சுகமாக இருக்கணும்னு, தம்பதிகளுக்காக அந்தக் கலயாணம் நடக்கணுமே தவிர, உங்களை மாதிரி ஆளுங்கள் கண் குளிரனுமேங்கிறதுக்காக நடக்கக்கூடாது மாமா. இந்த மாதிரி வயசானவங்க கண்குளிர னும்ங்றதுக்காக நடந்த கல்யாணங்கள் அப்புறம்

என்ன ஆயிருக்கு தெரியுமா? அவங்க கண் மூடுற துக்கும் இதுவே காரணமாகி இருக்குது மாமா.

பொன் : நீ ஒண்ணு! பெத்த தகப்பனுக்கு இதைப் பார்க் கணும்னு ஆசையிருக்காதா மாப்பிளே. எனக்கு வாழ்க்கையிலே எவ்வளவோ இலட்சியம் ஆசைகள் இருந்தது. இப்ப அதெல்லாம் போயி இந்தக் கல் யாணம் நல்லா நடக்கணுமேங்கிற ஒரே ஆசைதான் மிச்சமா இருக்கு, மாப்பிளே. உனக்குத் தெரிஞ் சிருக்காது. அப்ப நீ சின்னவன். அஞ்சுகத்தோட தாயாரும், நானும் எவ்வளவு அன்பாயிருந்தோம் தெரியுமா? அவள் காலத்துக்குப் பிறகு, எனக்கு உலக வாழ்வே பிடிக்கலே. இருந்தாலும் உலகத்திலே வாழ்ந்துக்கிட்டு இருந்தேன். ஏன்னு, அஞ்சுகம் அப்பதான் அப்பா, அப்பான்னு பேசப் படிச்சு, நடை நடந்து ஏங்கிட்டே வந்து, ஏம்பா அழறேன்னு கேட்டு, என் கண்ணீரைத் துடைச்சிது. நீயே சொல்லு. என் கண்ணீரைத் துடைச்ச அந்தப் பிள்ளையை அனுதை யாக்கிக் கண்ணீர் சிந்தவச்சிட்டு நான் போயிட லாமா? வள்ளலார் மேலே உள்ள பக்தியாலும், இந்த ஒரு பாசத்தாலும்தான் நான் இன்னும் வாழ்ந்திட்டிருக்கேன் மாப்பிள்ளே.

முரு : மாமா! அன்னிக்கு அஞ்சுகம் கண்ணீரைத் துடைச்சுது. இன்னிக்கு நான் கண்ணீரைத் துடைக் கிறேன். இனிமே அழுதுகிட்டிருக்காதீங்க. வீட்லே வேறு ஆளு கிடையாது.

பொன் : இனிமே நான் அழமாட்டேன். எதை எதையோ நினைச்சேன். அழுகை வந்திடுச்சு. நீதான் அன்னிக்கு கடவுள் சாட்சியா வாக்கு கொடுத் திட்டியே!

முரு : அஞ்சுகம்! அஞ்சுகம்!! (கூப்பிடுகிறான்) எங்கே அஞ்சுகம்? நான் வரும்போதெல்லாம் அவள் இல்லாதிருக்காளே.

பொன் : குளத்துக்குத் தண்ணீர் கொண்டு வரப் போயிருக்குது: இப்ப வந்திடும்.

முரு : சரி. அஞ்சுகத்துக்குப் பிடித்த முல்லைப் பூ வாங்கிட்டு வந்திருக்கேன். மறந்துடாமே அஞ்சுகத்திடம் கொடுங்கள்.

[கொஞ்ச தூரம் சென்று பின்வாங்கி]

மறந்து போய் சாமிக்குப் போட்டுடாதீங்க. என் அஞ்சுகத்துக்குக் கொடுங்கள்.

[போகிறான்.]

திரை

காட்சி : 13

இடம் : விருத்தாச்சலம் வீடு.

பாத்திரங்கள் : விருத்தாச்சலம், பார்வதி, அஞ்சுகம்.

[விருத்தாச்சலம் பிள்ளைக்கு பார்வதி மருந்து கொண்டு வந்து தருகிறாள்.]

பார்வதி : இந்தாங்கப்பா...!

விருத்தாச்சலம் : இது எதுக்கம்மா...!

பார் : வயிற்று வலிக்காக அப்பா!

விருத் : கொஞ்ச நேரத்துக்கு முந்தி தந்தியே, அது எதுக்கு?

பார் : அப்பா! ஏழு மணிக்குத் தந்தது இருமலுக்கு, ஏழேகாலுக்குத் தந்தது பொருமலுக்கு. ஏழரைக்குத்

தந்தது நெஞ்சு வலிக்கு. எட்டு மணிக்குத் தந்தேனே அது வயிற்று வலிக்கு.

விருந் : முருகன் இருந்திருந்தா எனக்கும் வசதியா இருக்கும். உனக்கும் சிரமம் குறையும். சரி, எங்கேயோ போயிட்டான். பார்வதி, எனக்கு எப்ப எப்ப என்னென்ன சிரமம் வருங்கிறது, என்னைவிட உனக்குத் தாம்மா சரியா தெரியுது.

பார் : அப்பா! நான் சின்னப்பிள்ளையா இருந்தப்போ, அடம் பிடிச்சு அழுதேன்னு, எதுக்கு அழுதேன், ஏன் அழுதேன்னு, உங்களுக்குத்தானப்பா தெரிஞ்சுது.

விருந் : ஏன் பார்வதி! இந்த ரூமுக்குள்ளே இனிமே யாரையுமே கூட்டிட்டு வரக்கூடாது. அன்னிக்கு மில் ஒனர் மகன் வந்தார்லே, அவர் செகரட்டரி இங்கே வந்து இது என்ன டிஸ்பென்சரி மாதிரி இருக்குது. வைத்தியத் தொழில் வேறு நடக்குதான்னு கேட்டுட்டாரு. அப்புறம் சமாளிச்சேன். ஏன்மா, நம்ம வீடே ஒரு சின்ன ஆஸ்பத்திரி மாதிரி இல்லே.

பார் : அப்பா! நேத்துத்தான் படிச்சேன்.

விருந் : என்னம்மா! ஆரம்பிச்சுட்டியா, உன் படிப்பை!

பார் : நோய்களுக்கெல்லாம் கவலைதான் காரணம்னு அந்தப் புஸ்தகத்திலே, ஒரு மேல்நாட்டு அறிஞர் எழுதியிருக்கார். இன்னொருத்தர் சொன்னரு...

விருந் : தூக்கம் வந்ததும் தூங்கலேன்னு ஏதாவது வியாதி வரும்னு சொல்லியிருப்பாரே.

பார் : ஆமாம். அப்படின்னு சொல்லியிருக்காரே.

விருத் : அப்போ எனக்குத் தூக்கம் வருது, தூங்கவிடு-

பார் : சரியப்பா!

[அப்போது தபால்காரர் போஸ்டு என்று சொல்லிக் கடிதம் கொடுத்துச் செல்கிறார்.]

விருத்: பாத்தியா? முடியாது! இந்த வீட்டிலே அதுதான் நடக்காதுன்னே. என்ன வந்திருக்கு. பிரிச்சுப் பாரு. பார்வதி! முன்னேல்லாம் புதுசா கம்பெனியிலே மருந்து தயார் பண்ணிஞ டாக்டர்களுக்குத்தானே அனுப்புவாங்க! இப்ப மருந்துப் பட்டியலே நமக்கே அனுப்பி வைக்கிறான்ஞ. சரி! எங்கேயிருந்து லெட்டர் வந்திருக்கு?

பார் : மில் முதலாளிகிட்டே இருந்து.

விருத் : (துடிப்புடன்) படி... படி...!

பார் : அன்புள்ள விருத்தாச்சலம் பிள்ளைக்கு, வணக்கம். தங்கள் குடும்பத்தோடு சம்பந்தம் வைத்துக் கொள்ள நாங்கள் விரும்பவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். இப்படிக்கு, மில் ஓனர் செல்வநாயகம்.

[அப்போது அஞ்சுகம் பால் கொண்டு வருகிறாள்.]

விருத் : ஆ! கல்யாணம் நின்று போச்சா? நம்ம சம்பந்தம் வேண்டாம்னு எழுதிட்டாரா?

[அஞ்சுகம் அருகில் வந்து]

அஞ்சு : பால் கொண்டு வந்திருக்கேன்.

விருத் : ஏன் விஷம் கொண்டு வர்றதுதானே. பார்வதி, நான்கூட அன்னிக்கு நடந்தது வேடிக்கைன்னு தான் நினைச்சேன். விபரீதமாப் போச்சு.

பார் : என்னப்பா சொல்றீங்க? என்ன சமாச்சாரம்?

விருத் : என்னன்னு கேட்கிறியா? மில் ஓனர் செல்வ நாயகம் வந்த அன்னிக்கு, இவ எப்படி நடந்து கிட்டா? ஒரு வேலைக்காரி மாதிரியா நடந்து கிட்டா? உன் வாழ்க்கையைக் கெடுக்கிறதுக்குத் திட்டம் போட்டவ மாதிரியே நடந்துகிட்டா. ம்... எப்படி பதில் பேசினு. நாயே, நீயெல்லாம் அவர் முன்னே நிக்க முடியுமா? அவர் ஏதோ பெருந் தன்மையா கேட்டா நீ டாண் டாண்ணு பதில் சொல்லலாமா?

பார் : அப்பா! அவர் கேட்கிறபோது பதில் சொல்லாம இருக்க முடியுமா? அவ நிலையிலிருந்தா எந்தப் பொண்ணும் அப்படித்தான் நடத்திருப்பாங்க.

விருத் : இவ அன்னிக்கு நடந்துட்ட முறையைத் தவிர வேறு எந்தக் காரணமும் இல்லேம்மா. இந்தக் கல்யாணம் நிக்கிறதுக்கு நீ சொன்ன பதில் எல்லாம் எப்ப விசித்திரமாயிட்டுது தெரியுமா? இவ டாண், டாண்ணு பதில் சொன்னதும்தான். இந்தா பாரு பார்வதி, ஒரு குச்சி கோணலா கிடந்தா, அது கோணலா தெரியாது. ஒரு நேரான குச்சியைப் பக்கத்திலே வச்சாதான், இந்தக் குச்சி கோணல்னு தெரியும்மா. போ! என் கண் முன்னுலே நிக்காதே. என் வீட்டு உப்பையே தின்னுட்டு...?

[கை ஓங்குகிருர்.]

பார் : அப்பா! கோவப்படாதீங்க.

விருத் : (தனக்குள் மிகவும் வருந்தி) கிடைக்கக் கூடிய சம்பந்தமா? உடைக்கக் கூடிய சிநேகிதமா? உடைஞ்சு போச்சே! மூணு எஸ்டேட். உன் பேருக்கு எழுதி வைக்கிறேன்னுன். நாலு பங்களா நிச்சயம்

பண்ற அன்னைக்கு எழுதி வைக்கிறேன்னான். ஒரு பெரிய காடே எனக்கு எழுதி வைக்கிறேன்னான்.

பார் : அப்பா! காடா?

விருத் : வெறும் காடல்லம்மா. சந்தனக் காடு. என் ஒவ்வொரு வியாதிக்கும், ஒவ்வொரு நாட்டுக்கு அனுப்பி குணப்படுத்திறேன்னான். ஒரு மாந்தோப்பு அம்மா. மறு வீடு அன்னிக்கு எழுதி வைக்கிறேன் னான். ஒரு புதுமாடல் செவர்லெட் கார் வாங்கித் தர் றேன்னான். நான் தங்க ஒரு ஏர்கண்ஷன் ரூம் கட்டித் தர்றேன்னான். இப்ப ஒரே கண்டிஷன்னு இந்த வீட்டுக் கல்யாணமே வேண்டாம்னுட்டான். போச்சு எல்லாம் போச்சு. இது எல்லாம் யாராலே!

பார் : எல்லாம் கடவுளாலே.

விருத் : கடவுள் எதுக்கம்மா? இவளே போதும். உலகத் தையே கெடுத்திடுவாளே.

அஞ் : யசமான்! நான் நிஜமாக உங்க குடும்பத்துக்கு எந்தத் தீங்கும் செய்யலே. எல்லாம் அந்த ஆண்ட வனுக்கே தெரியும்.

விருத் : பேசாதே! பேசாதே! உன்னை நான் வேலைக்கு வச்சேனா? வந்தவங்ககிட்டே, குலுக்கி, நலுக்கி, மினுக்கி வரச் சொன்னேனா? ஊம். ஒழுங்கா நீ இனிமே என் வீட்டிலே வேலை பார்க்கமாட்டே. இன்னையிலே இருந்து நீ இந்த வீட்டு வேலைக்காரி இல்லே. போ! போ வெளியே. சம்பளத்தைக் கணக்குப் பாத்து உங்க அப்பனை வந்து வாங்கிட்டுப் போகச் சொல்லு.

பார் : அப்பா! அஞ்சுகம் எவ்வளவு நாளா இருக்கி ருப்பா. அவ இருக்கட்டும் அப்பா.

விருத் : அவ இங்கே இருக்கிற வரைக்கும், உனக்குக் கல்யாணமே நடக்காது. ஏம்மா அவளுக்கு ஏண்டு பேசறே. என்னைச் சாகச் சொல்றியா?

பார் : (உடன் பார்வதி பயந்து) அஞ்சுகம்! நீ போம்மா. எதுக்கும் கவலைப்படாதே. அஞ்சுகம், நீ போய்ட்டு வா. அப்பா நீங்க உட்காருங்கப்பா.

[அப்பாவுக்கு அதிர்ச்சியில் ஏதாவது ஆகிவிடக் கூடாதே என்று அன்பு அச்சத்துடன் ஆறுதலாகப் பிடித்து நாற்காலியில் உட்கார வைக்கிறாள்.]

திரை

காட்சி : 14

இடம் : வட்டிக்கடைக்காரர் தர்மலிங்கம் வீடு.

பாத்திரங்கள் : தர்மலிங்கம், விருந்தினர் இருவர், முருகன்.

[தர்மலிங்கம் சைவ உணவைப்பற்றிப் பிரமாதமாகப் பேசிக் கொண்டிருக்கிறார். விருந்தினர் ரசித்துக் கொண்டிருக்கிறார்கள்.]

தர்மலிங்கம் : இட்லரு...?

விருந்தினர் I : ஆ...!

தர்ம : என்ன சாப்பிட்டாரு? தெரியுமா?

விருந் : என்ன சாப்பிட்டாரு?

தர்ம : அவரே ஒரு காலத்திலே சைவ உணவுதான் சாப்பிட்டிருக்கார். பெர்னாட்ஷா எவ்வளவு பெரிய மனுசன். அவருதானே உலக அறிவுக்கே ஒரு 'இது'. அவரே சாகிறவரைக்கும் சைவ உணவுதானே

சாப்பிட்டிருக்காரு. சரி! அங்கேயெல்லாம் ஏன் அலையுறீங்க. இங்கே வாங்க.

விருந்தினர் II : எங்கே?

தர்ம : நம் நாட்டுக்கு. இங்கே இரண்டாயிரம் ஆண்டுக்கு முன்னே வாழ்ந்த தெய்வப் புலவர் திருவள்ளுவருக்குக்கூட வாசுகியம்மா சைவம்தான் சமைச்சுப் போட்டிருக்காங்க. 'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்'னு குறளிலே எழுதியிருக்காரு. நம்ம அருட்பெருஞ்சோதி வள்ளலாரு, ஊனைத் தின்று ஊன் வளர்க்காதீர். கொலையுணவு சாப்பிடுறவங்க, வேற குலம்னே சொல்லியிருக்காரு! காந்தியடிகள் சைவ உணவைப்பற்றிப் பிரமாதமாச் சொல்லியிருக்கிறார். சாகிறவரைக்கும் தூய சைவராகவே வாழ்ந்திருக்காரு. இப்ப நம்ம விநோபா...சைவம் வேற அவர் வேற இல்லே. சைவ வடிவம்னுகூட அவரைச் சொல்லலாம். அப்படி வாழ்ந்து வர்றாங்க பெரியவங்க.

விருந் I : அடாடா! சைவத்தைப் பற்றி, எவ்வளவு அருமையா பேசுறீங்க.

தர்ம : இன்னும் கேளுங்க. இன்னொரு பெரியவர் சொல்றாரு. மனுசன் செத்தா காட்டிலே கொண்டு புதைக்கிறாங்க; ஆனால் பிராணிகளைக் கொன்று, அந்த மனுசன் தன் வயிற்றிலேயே புதைச்சுக்கிறான். அதாவது மனுஷன் மற்ற பிராணிகளுக்காக, நடமாடும் மயானமாகத் திரியிறான்னு சொல்றாரு.

விருந் II : அடா! டா! என்ன அற்புதமா சொல்லிட்டீங்க. இதுக்குத்தான் உங்களை மாதிரி பெரியவங்களை

அடிக்கடி சந்திக்கணுமிங்கிறேன். கொஞ்ச நேரத்துக்குள்ளே சைவக் கருத்தை எங்க மனசிலே ஊன்றிட்டீங்களே. அப்ப நாங்க வர்ரோம்.

தர்ம : என்ன புறப்பட்டீங்க? இன்னிக்கு என்ன கிழமை?

விருந் I : புதன்கிழமை.

தர்ம : எண்ணெ தேய்த்துக் குளிப்பெல்லாம் ஆயிடுதுங்களா?

விருந் I : ஆமா.

விருந் II : ஆமா.

தர்ம : போங்க, வீட்டுக்குள்ள 'டைனிங்' ஹாலுக்குப் போங்க. கோழி குர்மா, பிரியாணி, சூப்பு, சாப்சு, வறுத்த கரி எல்லாப் தயாராயிருக்கு சாப்பிட்டிட்டுப் போங்க.

விருந் I : என்ன! அப்ப இவ்வளவு நேரம் பேசியது...?

தர்ம : ஆமாய்யா! பேசினேன்! அது, பேசுர 'சப்ஜெக்ட்'! இது சாப்பிடுற 'சப்ஜெக்ட்'! சைவத்தைப் பற்றி ஊர், ஊரா போய் நடந்துபோய்கூட பேசுரேன்ல. இந்த சக்தி என் காலுக்கு எப்படி வத்துது?

விருந் II : எப்படி வந்துது?

தர்ம : எல்லாம் ஆட்டுக்கால் சூப்பு தந்த அருள்தான் போங்க! இந்த நாட்டிலே சுத்த சைவம் வளரணு முன்னு...சூப்பு, உள்ளே ஆறுது! போய் சாப்பிட்டு வாங்க, அப்புறம் பேசுவோம்.

[முருகன் வருகிறான்.]

என்ன? பாக்கி எல்லாம் வசூல் பண்ணிட்டு...

முரு : யசமான். அவங்க நிலைமை ரொம்ப மோசமா இருக்குது எசமான். பாவம், அந்த வெங்காயக்

கடைக்காரர் என்ன கஷ்டப்படுகிறார் தெரியுமா? இன்னைக்கு வருமானமே இல்லையாம்.

தர்ம : அப்புறம்...?

முரு : வெற்றிலை பாக்குக் கடைக்காரருக்கும் வியாபாரமே இல்லையாம். வெற்றிலையைவிட அவர் முகம் ரொம்பவும் வாடிப் போயிருக்குதுங்க. அந்தக் கைவண்டிக்காரர் நிலைமையும் ரொம்ப கவலைக்கு இடமாத்தான் இருக்குது. எனன பண்ணுவாங்க எசமான். பொதுவாகவே இப்ப மணி சீசன் ரொம்ப டல்லுங்க.

தர்ம : சரிதான் வாயை மூடுடா? உன்னை வசூல் பண்ணிட்டு வரச் சொன்னேனா? இல்லை, மணி சீசன் பத்தி தெரிஞ்சுட்டு வரச் சொன்னேனா?

முரு : எசமான்! இனிமையாகவே பேசணும். எளிமையா இருக்கணும்னு.

தர்ம: இவன் யார்டா இவன். வேலைக்கு இவனை அமர்த்தினா விவசாரமே பேசிக்கிட்டிருக்கானே. ஆமா! நீ அவங்ககிட்டே போயி எப்படிக் கேட்டே! அந்த அழகைத்தான் சொல்லேன், கேட்கலாம்.

முரு : இங்கேயிருந்து போனேனா...!

தர்ம : அதுதான் போனேயே—மேலே சொல்லு.

முரு : முதல்ல பக்கத்து ஊரு பக்கம் வசூலுக்கு போய்ட்டு, இங்கே மார்க்கெட் பக்கம் வரலாம்னு அங்கே போனேன். போகிற பாதையில் கால்வாய் கரையிலேயே — நமக்கு ஆயிரம் ரூபாய் பாக்கின்னு சொன்னீங்களே! அவனைக் கண்டேன். உடனே அவன் என்ன அன்பா பழகினான் தெரியுங்களா? இளநீர் சாப்பிடுறீங்களான்னு கேட்டான். வேண்டான்னேன். இல்லை, எப்படியாவது சாப்

பிடத்தான் செய்யணும்னு சொன்ஞன். இல்லே, இல்லே. வேண்டாம்னு சொன்னேன். அது முடியாது, சாப்பிட்டுத்தான் ஆகணும்னு சொன்ஞன். நான் முடியவே முடியாது; எனக்கு இளநீர் வேண்டவே வேண்டாம்னு சொன்னேன். அவன் அதுக்கு முடியவே முடியாது. நீங்க எப்படியாவது கண்டிப்பாகச்சாப்பிட்டுத்தான் ஆகணும்னு திடீர்னு அரிவாளை எடுத்திட்டான்.

தர்ம : அப்புறம்...?

முரு : அப்படி அரிவாளும் கையுமா நிற்கிறவன்கிட்டே எப்படி கண்டிப்பா நம்ம தொகையைக் கேட்கிறது.

தர்ம : சரிதான்! அப்புறம் என்ன நடந்தது. இளநீரைச் சீவித் தந்தாஞக்கும்.

முரு : தந்தான். குடிச்சேன்! அப்படி இளநீரை இது வரை நான் குடித்ததில்லே. போங்க! குடிச்சதும் வயிறு மனசு எல்லாம் குளிர்ந்து போச்சு.

தர்ம : எனக்கு எரியுது. சரிதான்; நல்ல ஆளு வந்து சேர்ந்தேப்பா. ஏண்டா உன்னே வசூலுக்கு வச்சிருக்கேஞ? இல்லே, ஊரிலே உள்ள இளநீர்களே குடிச்சிட்டிருக்க அனுப்பினேஞ? தொலேயுது. 10 ரூபாய்க்கு ரெவின்யூ ஸ்டாம்ப் வாங்கிட்டு வரச் சொன்னேனே! எங்கே?

முரு : எசமான்! நான் ரெவின்யூ ஸ்டாம்பு வாங்கத் தான் போனேன். போஸ்டு ஆபீஸ் பக்கம் போனேன். வாசலிலே இளஞ் சிசுவை தெருவிலே போட்டு ஒருத்தி பிச்சை எடுத்துக்கிட்டு இருந்தா. அந்தக் குழந்தையைப் பார்த்தாலே பாவமா இருந்தது. அது என்னேப் பார்த்ததும் சிரித்தது.

தர்ம: ரோட்டிலே அவ்வளவு பேரு போகிறபோது உன்னை மட்டும் பாத்து சிரிச்சுதா? டேய்! வெளியே சொல்லாதடா? தப்பா நினைக்கப் போறாங்க. அப்புறம் என்ன செய்தீங்களாம்?

முரு: யசமான்! உடனே எனக்கு இரக்கம் ஆயிப் போச்சு. கையிலே இருந்த 10 ரூபாயை அப்படியே எடுத்து குழந்தைக்குப் போட்டுட்டு வந்திட்டேன். குழந்தை ஆயிரம் காலத்துப் பயிரு—ஸ்டாம்பு இன்னிக்கு ஒட்டி நாளைக்குக் கிழிக்கிறதுதானுங்களே! அப்புறம் வாங்கிட்டா போச்சுன்னு வந்திட்டேன். போட்டது நான் என்றாலும் புண்ணியம் உங்களுக்குத்தான் எசமான்.

தர்ம: சீ! வாயை மூடுடா! அந்த மோதிரத்தைக் கழற்றிக் கீழே வைடா.

முரு: இது ஒண்ணுதான் யசமான் என் ஆஸ்தி.

தர்ம: சரிதான் எடுத்து வைடா!

முரு: இந்தாங்க.

[கழற்றி வைக்கிறான்.]

தர்ம: போடா வெளியே! பத்து ரூபாய்க்கு இதுக்கு சரியாப் போச்சு. நீ நம்ம வேலைக்குக் கொஞ்சமும் லாயக்கில்லே. ஏதாவது சாமியார் சங்கத்திலே போய்ச் சேருடா.

முரு: என்னாங்க! இப்படி 'டப்'னு என் கதையை முடிச்சிட்டீங்க. நான் என்னென்னவோ கனவு கண்டுட்டிருக்கேனே.

தர்ம: இந்த மாதிரி கனவு காண்கிறவனுக்கெல்லாம் இங்கே வேலை கொடுத்தா, அப்புறம் நானும் எதையாவது கனவு கண்டுகிட்டு இருக்க வேண்டியதுதான்! சரிதான்! நல்ல நேரத்திலே போய்ச் சேரு.

முரு : (தன்னை உணர்ந்து வழக்கம் போல) எனக்கே பேரும் புகழும் இருந்தா இப்படிச் சொல்வீங்களா, எசமான்!

தர்ம : என் நேரத்தைக் கெடுக்காதேப்பா. உங்கிட்டே பேசற நேரத்துக்குள்ளே எனக்கு எவ்வளவு வட்டி கெட்டிருக்கு தெரியுமா? போம். ஊம்.

[விரட்டுகிறார். போகிறான்.]

திரை

காட்சி : 15

இடம் : வனம்.
பாத்திரங்கள்: முருகன், குறத்தி.

[குறத்தி பாடிக்கொண்டு வருகிறாள்.]

குறத்தி : பாட்டு

பச்சைக்குத்தி குறி சொல்வோம்—லேலங்கிடிலேலோ
பாட்டும் கொஞ்சம் பாடிக்குவோம்—லேலங்கிடிலேலோ
காசு பணம் சேர்க்க மாட்டோம்—லேலங்கிடிலேலோ
கௌவரம்தான் எங்கள் செல்வம்—லேலங்கிடிலேலோ.

[அப்போது அங்கு முருகன் வருகிறான். தன் கையைக் குறத்தியிடம் காட்டுகிறான்.]

குறத்தி : பாட்டு

முகத்தில் கவலை கொண்டு
முறுவல் தனை இழந்து
முன் வந்து நிற்பது யாரைய்யா?—உந்தன்
முகவரி என்னன்னு கூறய்யா?—உனக்கு
எந்த ஊரு, பேரு? எடுத்துவளர்த்த தாரு?
சொந்தம் யாருன்னுதான் கூறய்யா—இங்கு
வந்த காரணமும் சொல்லய்யா!

முருகன்: ஆமா! நான் கையை ஊங்கிட்டே காட்டிக்கிட்டு இருக்குறதே அதுக்குத்தானே. ஏங்கிட்டியே யாரு, பேரு, ஊருன்னு கேக்குறியே? நீயே சொல்லு.

குறத்தி : பாட்டு

சின்னமலே மேலே சிட்டுக்கு நீ கண்ணி வச்சே!
சிட்டு விழும் கண்ணியிலே கட்டெறும்பும் சிக்கலேயே!
கோணமலே மேலே குயிலுக்கு நீ கண்ணி வச்சே!
குயில் விழும் கண்ணியிலே கோட்டானும் மாட்டலேயே.
தங்கமலே மேலே நீ சிங்கத்துக்குக் கண்ணி வச்சே!
சிங்கம் விழும் கண்ணியிலே சிறு நரியும் விழலியே!
பச்சமலே மேலே நீ பைங்கிளிக்குக் கண்ணி வச்சே!
பைங்கிளியின் கண்ணியிலே பாவி நீயும் சிக்கிக்கிட்டே!

முரு : ஆமாம்! கரெக்ட்டாத்தான் சொல்லிட்டே! சரி; நான் பங்களா, காரு இதெல்லாம் வாங்க முடியுமா?

குறத்தி : பாட்டு

கந்தன் அருள் இருக்கு—அது
உந்தனுக்கு எந்த நாளும் துணையிருக்கு
கள்ளம் கபடமின்றி—இருந்தால்
கைமேல் பலன் கிடைக்கும் நம்பிடுவாய்!
பேரும் புகழும் உன்னைத் தேடும்—வந்த
பெரிய கவலையெல்லாம் உன்னை விட்டோடும்!
உடனே கிடைக்கும் பங்களா வீடும்—உன்னை
உயர்வாகப் பாராட்டிப் பேசிடும் நாடும்! (பேரும் புகழும்)

[பாடி முடித்துப் போகிறாள்.]

முரு : (தனக்குள்) அந்த முருகனுக்கும் ஒரு குறத்தி தான் வழி காட்டினாள். இந்த முருகனுக்கும் குறத்தி தான் வழி காட்டியிருக்கா! என்ன சொன்னாள்? கள்ளம் கபடமில்லாமல் பழகினால், கைமேல் அருள் கிடைக்கும்! ஊம்!

[போகிறான்.]

திரை

காட்சி : 16

இடம் : சாலை.

பாத்திரங்கள் : முருகன், C. I. D. கள் கிருஷ்ணன், நாராயணன், அரசியல்வாதி மிஸ்டர் பாபு.

[முருகன் வந்துகொண்டிருக்கிறான். எதிரே இருவர் வந்துகொண்டிருக்கிறார்கள். C. I. D. என்று முருகனுக்குத் தெரியாது.]

கிருஷ் : அடடே! யாரு! நம்ம முருகனா! என்னப்பா இது! நாளுக்கு ஒரு கோலம்—வேளைக்கு ஒரு பேச்சு. இந்த சாந்தி நகர்லே நீ ஒரு புதிரான மனிதனா இருக்கிறியேப்பா!

முரு : சார்! இதுக்கு முன்னே வேணும்னா நான் அப்படி இருந்திருக்கலாம். இனி ரொம்ப ப்ளைனான ஆசாமியா இருக்கப் போறேன்! தலையே போகிறதாக இருந்தாலும் சரி, மனசிலே ஒரு ரகசியத்தையும் வச்சுக்கப் போறதில்லை. ஆமாம்!

நாரா : அப்படின்னா ரொம்ப கஷ்டங்கள் வருமே! உன்னாலே தாங்க முடியுமா?

முரு : தாங்கித்தான் ஆகணும்! வேற என்ன பண்றது? வாழ்க்கையிலே நாலு பேரு பாராட்டுறாப் போல முன்னுக்கு வரணும்னா கஷ்டப்படாம முடியுமா சார்!

கிருஷ் : நாலு பேர் பாராட்டணும்னு விரும்புறே! இதோ ரெண்டு பேர் ரெடி! இன்னும் ரெண்டு பேர் கிடைக்காமலா இருக்கப் போறாங்க!

நாரா : முருகன் போகிற போக்கைப் பார்த்தா, கொஞ்ச நாள் போனா ஒரு மகானாகவோ மகாத்மாகவோ ஆனாலும், ஆச்சர்யப்படுகிறதற்கில்லே!

கிருஷ் : ஏன்! பெரிய அடிகள்கூட ஆகலாம்! என்னமோ வர வர அடிகளுக்கும் அவனுக்கும் சம்மந்தம் நெருங் கிக்கிட்டேதான் வருது!

நாரா : அப்படி ஆயிட்டான்னு, இந்த சாந்தி நகர்லே அவனுக்கென்றே ஒரு ஆசிரமம் கட்டிக் கொடுத்தா கூட ஆச்சரியப்படுறதிக்கில்லே! எல்லாரும் இவன் கிட்டே அவ்வளவு பிரியம் வச்சிருக்காங்களாமே!

கிருஷ் : எல்லோருக்குமே நீ செல்லப் பிள்ளைன்னு பேசிக் கிடறுங்களே!

நாரா : உன்னை மறைச்சு அங்கே ஒரு ரகசியமும் கிடை யாதுன்னு பேசிக்கிறுங்களே! உண்மைதானு?

முரு : உண்மைதான்! என்னை மறைச்சு அங்கே எந்த ரகசியமும் கிடையாது!

நாரா : மளிகை வியாபாரி தவசியா பிள்ளைக்கிட்டே தங்கம் ஏதோ இருக்கிறதாக...! உண்மைதானு?

முரு : இருக்குது சார்! பூஜை மாடத்திலே விக்ரகம் வச் சிருக்காரே! அதுக்குக் கீழேதான் நாலு செங்கல் அடுக்குக்குக் கீழேதான், பாளம் பாளமாக வச்சிருக் கார். அவர் உள்ளே அடுக்கி வைக்கிறபோது நான் தான் டார்ச் லைட் அடிச்சிட்டிருந்தேன்!

நாரா : ஆ...? அவருக்கு எவ்வளவு நம்பிக்கை இருந்திருந் தால், உங்கிட்டே இப்படி நடந்திருக்கணும்!

கிருஷ் : ஆமாம் சார்! ரொம்ப நம்பிக்கை. இப்பக்கூட கள்ளங்கபடமில்லாமல் உள்ளபடியே பேசிப் பழக னுங்கற வைராக்கியம் எடுத்ததால்தான் அவர் ரகசி யத்தை சொன்னேன். இல்லை, என் தலையை வெட் டினுலும் சரி.! இதை நான் சொல்லவே மாட்டேன்

கிருஷ் : ஆமா! நாங்க யார் கிட்ட போய் சொல்லப் போகிறோம்; இந்த விருத்தாசலம் பிள்ளைக்கிட்ட கூட ஏதாவது தங்கம் இருக்கிறதா...?

முரு : கிடையாது சார். கொஞ்சம் கறுப்புப் பணமுன்னு சொல்லி, ஏதோ கட்டுகட்டா வச்சிருந்தாரு. அதிலே அவரு வியாதிகளுக்கே பாதி செலவாயிட்டுது சார். ஒருதடவை அவர் கால்லே கட்டி! உடையவும் இல்லே. ஆபரேஷன் செய்யவும் மனதிலே பயம். அதைக் கரைக்க ஏதேதோ மருந்து போட்டு வந்தார். அந்தச் சின்ன கட்டிக்குச் செலவு பண்ணினதிலேயே ஒரு சின்ன மலையையே வித்திட்டாரு. மலைப் பகுதியைக் கொஞ்சம் கொஞ்சமாக வித்து அது கரையக் கரையத்தான் கட்டியும் கரைஞ்சுது. வியாதி வியாதின்னே அவர் பணம் செலவாகுது சார். ஆனா ஒண்ணு, நல்ல மனுசன் சார்!

கிருஷ் : எல்லோருமே அவரைப்பத்தி அப்படித்தான் சொல்றுங்க. இந்த வட்டிக்கடைக்காரர் தர்மலிங்கம் கிட்டே கொஞ்ச நாள் வேலை பார்த்தியே. அவரு எப்படி? ரொம்ப செழிப்பான ஆசாமிதானா?

முரு : சார்! அங்கே ஒரு இரண்டு நாள்தான் தங்கியிருந்தேன் சார்! அதுக்குள்ளே எவ்வளவு முத்து, ரத்தினம், வைரம் எல்லாம் ராத்திரியில கொண்டு வந்து தந்திட்டுப் போறுங்க தெரியுமா சார். மனசிலே எதையும் மறைக்கப்படாதேங்கறதால சொல்றேன் சார். வேற எதுவும் தப்பா நினைக்காதீங்க சார்!

நாரா : எங்களுக்கு எதுக்கப்பா ஊர் வம்பு. ஏதோ நீ பாசமா பேசறியேன்னு நாங்களும் பேசிக்கிட்டிருந்தோம். போய்ட்டு வர்றோம்.

[இருவரும் போகிறார்கள். அப்போது அரசியல்வாதி மிஸ்டர் பாபு அங்கு வருகிறார்.]

பாபு : (சற்று பயமூட்டும் தொனியில்) முருகா! என்னப்பா இது. இவங்க சி. ஐ. டி.களாச்சே! இவங்க கிட்டே போய் சாந்தி நகர் பெரியவங்க பத்தி எதை யெதையோ சொல்லி மாட்டிக்கிட்டியே!

முரு ; இந்தா பாரு! இனி நான் யாருக்கும் பயப்படுறதா இல்லே. மனசிலே எதையுமே மறக்காம பேசறதுதான் நம்ம முடிவு. இந்தப் பாதையிலே போயி உசந்த நிலேக்கு வர்றதுன்னே திட்டமே போட்டிட்டேன்.

பாபு : ஆமா. நான் முன்னே ஒரு வழி சொன்னனே, அதை நீ விட்டுட்டியா?

முரு : என்னேக் கேக்காதே. என் முதுகைக் கேளு. அது சொல்லும், நான் பட்ட பாட்டை. நீங்க காட்டின தடபுடல் வழி நம்மை ரொம்ப ஆபத்திலே கொண்டு விட்டுட்டுது. எல்லாரும் ரொம்ப மகா அல்டாப்புடான்னு சொல்ல ஆரம்பிச்சுட்டாங்க.

பாபு : முருகா! அது ஆபத்தான வழி இல்லே! இது தான் ஆபத்தான வழி. மனசிலே உள்ளதை மனுசன் அப்படியே பேசலாம்னு கடவுள் ஏன் மறைச்சுப் பேசுற சக்தியைத் தந்திருக்காரு! மறைச்சும் மனுசன் பேசிக்கலாமேன்னுதானே! இப்படி அவர் தந்திருக்கிற சக்தியை 'வேஸ்ட்' பண்ணலாமா? இது புரியாம அப்படி அப்படியே உளறினல்? ஊம்! எல்லாம் போகப் போகத் தானுப் புரியும் பாரேன்! பெரிய பெரிய மகான்களே மனசிலே எதையுமே ஒளிக்காம பேசி, மனசை காலி மனசா வைச்சிருந்ததுக்காக, என்ன கிடைச்சது தெரியுமா? அந்த மனசுக்குள்ளேயே துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்து உயிரைக் குடிச்சிருக்குது! மகான்கள் கதையே

அப்படி முடிஞ்சிருக்குது! நீ என்னமோ! உன்னே இனிமே கடவுள்தான் காப்பாத்தணும்! நான் வர்றேன்!

[பாபு போகிருர். போனபின் முருகன் தனக்குள்.]

முரு: (தனக்குள்) நான் முன்னுக்கு வர்றது பிடிக்கலேப் போலிருக்கு. அபிப்பிராயம் சொல்ருரு! யாரைப் பாத்தாலும் ஏங்கிட்டே அபிப்பிராயம் சொல்ருங்களே. எனக்கே பேரும் புகழும் இருந்தா இப்படிச் சொல்வாங்களா?

திரை

காட்சி: 17

இடம்: விருத்தாச்சலம் பிள்ளே வீடு.

பாத்திரங்கள்: விருத்தாச்சலம், முருகன், சோதிடர்.

[விருத்தாச்சலம் பிள்ளே நெற்றியில் தைலம் தேய்த்துக்கொண்டு இருக்கிருர். சோதிடர் ஏடுகளேப் புரட்டிக் கொண்டிருக்கிருர்.]

சோதிடர்: உங்கள் புத்திரி, அதாவது உங்க மகள், அதாவது உங்க 'டாட்டர்', சகலகலாவல்லி சரஸ்வதியோட அவதாரம்.

விருத்: என்ன சரஸ்வதியோட அபராதமா?

சோதி: அபராதமில்லே பிள்ளேவாள்! அவதாரம்னேன். அவளே வந்துதான் இப்படி பிறந்திருக்கவேணும். அதால்தான் அப்படி சதா புஸ்தமும், கையுமாகவே திரியுது. புத்தகப் படிப்பையே பேசறது

இந்தா பாருங்க. அந்த மில் ஓனர் வீட்டு சம்பந்தம் உங்களுக்கு எப்படி நடக்கும்னே. இந்தப் பார்வதிங்கிற பெண்ணோட சாதகத்துக்கு, அந்த லட்சாதிபதி யென்னே? கோடீஸ்வரனில்ல நாயகனு வந்து வாய்க்கணும். நான் சொல்லலே. ஜாதகம் அப்படிப் பேசுது.

விருத் : எல்லாம் நன்மைக்கேன்னு பெரியவங்க சொல்லு வாங்க. சரியாத்தான் இருக்கு. நான்கூட இந்தக் கல்யாணம் முறிஞ்சதில் கொஞ்சம் சஞ்சலப்பட்டேன். அதுல இவ்வளவு பெரிய நன்மையில்ல தொக்கி நிக்குது.

சோதி: அது மட்டுமில்லே பிள்ளைவாள்! இன்னும் எவ்வளவோ விஷயங்கள் தொக்கி நிக்குது. நான் சொல்றபடி நீங்கள் அவசியமா இந்த மாதத்திலே ஒரு காரியம் செய்தாகணும்.

விருத் : என்ன...?

சோதி : புத்திரியோட ஜாதகத்திலே ஒரு தோஷம் இருக்கு.

விருத் : தோஷங்களைப் பத்தி சத்தம் போட்டுப் பேசாதீங்க. புதுப்புது சம்பந்தங்கள், திடீர், திடீர்னு வந்து மோதிக்கிட்டு இருக்குது. நீங்க தோஷம்னு சொல்றதைக் கேட்டுவிட்டு, வாசல்ல நின்னபடியே யோசிச்சிட்டு என்கிட்டே வந்து மோதாமல், போயிடப் போகுது. ஆமா, என்ன தோஷம் அது?

சோதி : நீங்க அதைப் பற்றியெல்லாம் ஒண்ணும் பெரிசா worry பண்ணாதிங்கோ. ஸிம்பிளா, அதுக்கு ஒரு பரிகாரம் பண்ணிடலாம்.

விருத் : என்னது? விபரமா சொல்லுங்க.

சோதி : ஒரு ஏழைப் பிள்ளேக்கும், ஒரு ஏழைப் பெண்ணுக்கும் ஒரு விவாகம் செய்து வச்சு, ஒரு 50 பேருக்கு ரேஷன் சட்டத்திற்கு உட்பட்டு, அன்ன தானம் நடத்துங்க. அந்த தோஷம் அழிஞ்சு போகுது. அப்புறம் உங்க மகளுக்கு அருமையான சம்பந்தம் தானு தேடி வரும் பாருங்களேன்.

விருத் : அதுக்கென்ன செய்திடலாம்...! ஆம்...!

சோதி : ஏன் யோசிக்கிறீங்க! அதுக்கென்ன ஆயிடப் போவுது. கேவலம் நீங்க டாக்டருக்கு கொடுப்பீங்களே, அந்தப் பணம்கூட வராதே. எல்லாம் சேத்து 200—300 ரூபாய்க்குள்ளே குளோஸ் பண்ணிடலாம்.

விருத் : குளோசு குளோசுன்று பேசாதீங்க. சாமி! கல்யாண விஷயம் பேசுறபோது கொஞ்சம் நல்ல வார்த்தையே பேசுங்களேன்.

சோதி : இனிமே என்ன இருக்கு பேசறதுக்கு; எல்லாந் தான் பார்த்து 'குளோசு' பண்ணிட்டேனே. அப்ப நான் வர்றேன். நான் சொன்னதை முதல்லே நடத்துங்க. அப்புறம் நானே வந்து முகூர்த்தத்துக்கு நாள் குறித்துத் தர்றேன். வரட்டுமா பிள்ளேவாள்.

விருத் : சரிங்க! (தனக்குள்) ஒரு ஏழைக்கு ஒரு கல்யாணம். சரி நீங்க போய்ட்டு வாங்க.

[முருகன் வருகிறுன்]

விருத் : முருகா! வா, வா. நல்ல படியா சாமி சகுனத்திலேதான் வர்றே, என்ன உன்னே ஆளேயே காணேம்.

முரு : வாழ்க்கையிலே முன்னுக்கு வர்றதுக்கு பல முயற்சிகள் பண்ணிக்கிட்டிருந்தேங்கய்யா!

விருத் : ஏதாவது பலிச்சுதா?

முரு : ம்... இல்லிங்க ஐயா...!

விருத் : இந்தா பாரு! நான் ஒண்ணு சொல்றேன். ஒரு கல்யாணத்தைப் பண்ணிக்க! ஒரு பொண்ணு வந்து உன் கையைத் தொட்ட முகூர்த்தமாவது, உனக்கு நல்ல காலம் வருதான்னு பார்த்திடலாம்!

முரு : சரி. ஒரு வேளை வரலே—அதைப் போகச் சொல்லிட முடியுமா! என்ன! அதால கல்யாணத் துக்கு முன்னே நிலைமையைப் பார்த்துத்தான் செய் யணும்! வசதி வரட்டும்!

விருத் : வசதி வரட்டும்ணு—வயசும் ஏறிகிட்டேயிருக்கு தில்லே!

முரு : வயசு ஏறட்டுமே! வயசு ஏறி கல்யாணம் பண்ணும இருந்தால், ஏன் கல்யாணம் பண்ணலேனு சில பேர்தான் கேட்பாங்க? கல்யாணம் ஆகி அதுக்குச் சோறு போடாம இருந்தா, ஊரே கேட்டுடுமுங்க! என் நிலைமைக்கு எல்லாம் கல்யாண ஆசையே கூடாதுங்க...!

விருத் : உன்னைவிட கஷ்டப்படுறவங்க 2, 3 கல்யாணம் பண்ணிக் கிருங்க தெரியுமா?

முரு : என்னை மாதிரி ஆளுங்களுக்கு ஒரு கல்யாணமே அதிகம்! அதைப் பாதியா நடத்த முடியாதேங்கிற துக்காகத்தான், ஒண்ணு நடத்திக்கிலாமுன்னு முடிவு பண்ணிருக்கேன்! அதுவும் நான் இப்ப நடத் தப் போறதில்லே! கொஞ்ச நாள் போகட்டும்!

விருத் : முருகா! கொஞ்ச நல்லா சிந்தனை பண்ணு உங்கிட்டே ஒரு முக்கியமான விஷயம் பேசப் போறேன்!

முரு : என்ன எசமான்?

விருத் : ஊரு உலகத்திலே எல்லா ஏழைகளும் தங்களுக்கு ஏத்த பணக்காரன் கிடைக்காமல்தானே கஷ்டப் படுறாங்க! நான் ஒரு பணக்காரன்! எனக்கு ஏத்த ஏழை கிடைக்காமல் கஷ்டப்பட்டுக்கிட்டு இருக் கேண்டா?

முரு : என்ன எசமான்! விவரமா சொல்லுங்க!

விருத் : முருகா! எனக்கு நன்றி செலுத்தணும், எனக்கு நீ எப்பவாவது தியாகம் செய்தால்தான் உன் மனசு ஆறும்னு சொல்லுவியே!

முரு : ஆமாம்!

விருத் : நீ இப்ப உன் நன்றியைக் காட்ட ஒரு நல்ல சந்தர்ப்பம் வந்திருக்கு!

முரு : என்ன எசமான்?

விருத் : சோதிடர் வந்து பார்வதியோட சாதகத்தைப் பாத்து அதுல ஒரு தோஷம் இருக்குன்னும், அந்த தோஷம் நீங்கிறதுக்கு ஒரு ஏழைப் பையனுக்கும் ஏழைப் பொண்ணுக்கும் ஒரு கல்யாணம் நடத்தி வச்சா தீரும்னும் சொல்லியிருக்காரு! அப்ப எனக்கு ஒரு யோசனை வந்துது! நீயும் ஒரு ஏழை. ரொம்ப நாளா என்னையே சுத்திக்கிட்டு இருக்கிறே! யாரா வது ஒரு ஏழைக்குப் பயன்படப் போறதுக்காக, நீ எனக்கு வேண்டிய ஒரு ஏழைக்கே பயன்படட்டு மேன்னு ஒரு யோசனை பண்ணினேன்!

முரு : என்ன எசமான்? விவரமா சொல்லுங்க!

விருத் : நீ விரும்புற பொண்ணு எங்கேயாவது இருந்தா சொல்லு! அடுத்த வாரமே நடத்திப்பிடறேன். மாதம் குடும்பச் செலவுக்குப் பணம் தர்றேன். தோஷப் பரிகாரம் நீங்கினதும் என் மகளுக்கு நல்ல இடத்தில சம்பந்தம் கிடைக்கும்! நீ எனக்கு நன்றி செலுத்த இதைவிட வேற சந்தர்ப்பம் கிடைக்க முடியாது முருகா!

முரு : எசமான்! நான் என் முறைப் பெண்ணே கட்டிக்கிறதா வாக்குத் தந்திருக்கேன். அதுவும் முன்னுக்கு வந்து ஒரு ஸ்டேடஸ் வந்த பிறகுதான் கட்டிக்க முடியுமுன்னு சொல்லிட்டேன். இப்ப எனக்குக் கல்யாணம் நடந்திட்டா, என் வாழ்க்கை முன்னேற்றமே தடைப்பட்டுடும்னு நினைக்கிறேன் எசமான்!

விருத் : முருகா! உன் மூலமாக வேற கல்யாணத்துக்காக இருக்கிற எழைகள் கிடைப்பாங்களா?

முரு : மாட்டாங்க யசமான்! ஏழைகளைப்பற்றி உங்களுக்குத் தெரியாது! யசமான்! நானுந்தான் அவங்க கிட்ட பழகிப் பழகிப் பார்க்கிறேனே! அவங்களுக்கு மானம் சராசரி மனுஷனைவிட சற்று அதிகமா இருக்குது யசமான். தங்கள் கல்யாணம் இன்னொருத்தர் தோஷத்துக்குப் பரிகாரமாக நடக்கிறதை யாருமே விரும்ப மாட்டாங்க! ஏன் எசமான்! ஒரு யோசனை! என் மனசிலே தோணுறதை ஒளிக்காமல் கள்ளங்கபடமில்லாமல் பேசி நடந்துக்கணுமேங்கிறதுக்காகத்தான் சொல்கிறேன். நீங்க கோவிச்சுக்க மாட்டீங்களே!

விருத் : என்ன?

முரு : நானே ஒரு ஏழையைக் குப்பத்திலே தேடிப் பிடிச்சு கூட்டி வர்றேன். அவனுக்கே உங்கள் மகள் பார்வதியைக் கட்டிக் கொடுத்திடுங்களேன்...!

[கேட்டதும் விருத்தாச்சலம் பிள்ளைக்குக் கடுமை யான கோபம் வருகிறது.]

விருத் : ஆ! என்ன சொன்னே! என் அந்தஸ்து என்ன? என் செல்வம் என்ன? வசதி என்ன? ஒரு ஏழைக்கு கட்டிக் கொடுக்க சொன்னியா? என்ன தைரியம் இருந்தா இந்த வார்த்தையைச் சொல்லியிருப்பே! உன் தரத்துக்குள்ள அறிவுதானே உனக்கு இருக்கு! சீ நாயே! போடா வெளியே!

முரு : எசமான்!

[அவன் கன்னத்தில் பளீரென்று பிள்ளை அறைந்து விடுகிறார்.]

விருத் : போ, வெளியே!

முரு : எசமான், மனசில் தோணுனதை ஒளிக்காமல் சொன்னதுக்கா இந்த அடி! எசமான்! எனக்கே பேரும் புகழும் இருந்தா இப்படி செய்வீங்களா? எசமான், ஏழையையும் பணக்காரனையும் ஒண்ணு சேர்க்க அபிப்பிராயம் சொல்றுருன்னு புகழுவீங் கள்லே!

விருத் : போடா! வெளியே! இனிமே இந்த வீட்டு வாசல் பக்கமே வராதே. நாயே! பார்வதி! பார்வதி!

[முருகனைப் பிடித்து வெளியே தள்ளிவிடுகிறார். கட்டிலில் அசதியுடன் சாய்கிறார்.]

திரை

காட்சி : 18

இடம் : பொன்னம்பலம் வீடு.

பாத்திரங்கள் : பொன்னம்பலம், மில் ஓனர் செல்வ நாயகம்.

[பொன்னம்பலம் அருட்பா பாடிக்கொண்டிருக்கிறார்]

பொன் : "பாட்டு வித்தால் பாடுகிறேன்"

[யாரோ அழைக்கும் குரல் கேட்டு]

யாரது? என்ன விஷயம்!

ஒருவர் : மில் ஓனர் செல்வநாயகம், உங்களை நேரில் பார்க்கணும்னு வந்திருக்கார்.

பொன் : ஆ! அவங்களே வந்திருக்காங்களா? வரட்டுங்க! நான் செய்த பாக்கியம்!

[துண்டைக் கட்டிக் கொண்டு ஓடியாடி இருக்கிற பர்னீச்சர்களை இழுத்துப் போடுகிறார். செல்வ நாயகம் வருகிறார்.]

பொன் : எசமான்! வரணும். (மிகுந்த பணிவுடன்) சொல்லியனுப்பி இருந்தா நானே வந்திருப்பேனே! இந்த ஏழை, உங்களை வரவேற்க எந்த வசதியும் இல்லாதவன்ங்க!

செல்வநாயகம் : உங்களை நானேதான் தேடி வந்து பார்க்கணும். உங்களோட குணத்தையும், பொது நோக்கத்தையும், ஊரெல்லாம் சொல்லக் கேட்டேன். நானே பார்க்கணும்னு ஆசைப்பட்டேன்.

பொன் : நம்மாலே என்ன இருக்குங்க! கடவுள் தன்னோட ஆசைகளை மனிதர்கள் மூலமா நடத்திக்கிட்டிருக்கார்.

[அஞ்சுகம் வந்து தட்டை முன் வைத்துச் செல்தல்.]

என் மகள்! பேரு அஞ்சுகங்க! ரொம்ப நாளா விருத்தாசலம் ஐயா வீட்டிலேதான் வேலே பார்த்துக்கிட்டிருந்துதுங்க. இப்ப இல்லே.

செல்வ : (பார்த்துவிட்டு) அப்படியா? இப்ப நான் உங்க கிட்டே முக்கியமான ஒரு சமாச்சாரம் பேச வந்தேன்.

பொன் : என்னங்க...?

[ஒரு பெட்டியைக் காண்பித்து]

செல்வ : இதிலே பணம் நிறைய இருக்கு. நீங்க நல்ல காரியம் செய்ய ஏதேதோ திட்டங்கள் தீட்டி இருக்கிங்களாம். அதையெல்லாம் இதைக்கொண்டு நல்ல படியா நடத்துங்க.

பொன் : (திகைப்புடன் மறுத்து) இந்த ஏழைக்கு இவ்வளவு பெரிய பொறுப்பா?

செல்வ : இனிமேல் நீங்க ஏழையில்லே. லட்சக் கணக்கான ரூபாயை, உங்க பொறுப்பில் செலவு செய்யப் போறீங்க!

பொன் : கடவுள் எனக்கு இப்படி ஒரு சோதனையைத் தருவார்னு நான் நினைக்கவே இல்லீங்க. நான் ஒரு வாரம் கழிச்சு வர்றேன். அப்ப இதைப்பற்றிப் பேசிக்கலாமே. பணத்தைக் கொண்டு போங்க.

செல்வ : நீங்க சொன்ன வார்த்தையையே திரும்பச் சொல்றேன். நம்மாலே என்ன இருக்குதுங்க. கடவுள் தன்னுடை ஆசைகளே மனிதர்கள் மூலமாக நடத்துறாருன்னு நீங்கதானே சொன்னீங்க. நீங்களே வச்சிக்குங்க. இப்ப நான் பணம் தர்ற நிகழ்ச்சியும், ஏன் கடவுளோட ஆசையா இருக்கக் கூடாது. ஊம். வச்சுக்குங்க.

பொன் : (மறுக்க முடியாமல்) சரிங்க. நல்ல காரியங்களுக்குன்னு தர்றீங்க. நான் மறுக்கிறது மூலமா, அதுகள் நின்று போயிடக் கூடாது. வச்சிக்கிறேன்.

[கொஞ்ச தூரம் சென்று பின் திரும்ப செல்வநாயகம் வருகிறார்.]

செல்வ : நான் எப்பவாவது ஒரு சந்தர்ப்பத்திலே உங்ககிட்டே வந்து ஏதாவது விரும்பினா...?

பொன் : செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும், வானகமும் ஆற்றல் அரிதுன்னு வள்ளுவர் சொல்லியிருக்கிறார். இதோ, இந்தக் குப்பத்திலே எத்தனையோ பேர் மனசை நிறைவாக்கி யிருக்கீங்களே. உங்க ஒருத்தர் மனசை நான் நிறைவேற்றமாட்டேனா? நல்ல காரியத்துக்காக அள்ளிக் கொடுத்த உங்களுக்காக, நான் எந்த தியாகத்தையும் செய்யக் காத்திருக்கிறேன்.

செல்வ : ஆனா ஒரு வேண்டுகோள். என்னைப் பத்தி நீங்க ஒரு விஷயம் புரிஞ்சுக்கணும். அன்னிபெசன்ட் அம்மையார்னு ஒரு புனிதவதி இருந்தாங்க. ஆண்டுதோறும் தன் கடைசி நாளிலே, தன்னுடைய சம்பாத்தியத்தை அப்படியே, முழுவதையும் தருமத்துக்குத் தந்திடுவாங்க. புது வருஷம் பிறந்ததும், புதுசா, அப்ப வாழ்றதுக்கு வேண்டிய வசதிகளை, அந்த 1-ந் தேதியில் இருந்துதான் பாடுபட்டுச் சம்பாதிப்பாங்களாம். அவங்க வாழ்க்கை வரலாற்றைப் படிச்சதிலேயிருந்து என் மனசும் மாறி நானும் அப்படியேதான் நடந்து வர்றேன். அதாலே என் தனிப்பட்ட விருப்பத்தை, நீங்க நிறைவேற்ற முடியாத ஒரு நிலை வந்தாலுங்கூட வருத்தப்பட வேண்டாம்.

நான் செய்ற உதவிக்கும், வேற எதுக்கும் சம்பந்த மில்லே. ஒரு நல்ல காரியம் நல்லவர் மூலமா நடக்க உதவினேங்கிற ஒரு மகிழ்ச்சியே எனக்குப் போதும்.

பொன் : ஐயா, நீங்க நீடூழி வாழணும். சீக்கிரமா இந்த நல்ல காரியங்களை உருவாக்கிடுறேன். ஐயா! சீக்கிரம் உருவாக்கிடுறேன்.

செல்வ : வரேன். வணக்கம்.

[செல்வநாயகத்தைத் தக்க மரியாதையுடன் அனுப்பி வைக்கிறார் பொன்னம்பலம்.]

திரை

காட்சி : 19

இடம் ; பிரபல எழுத்தாளர் பெரியசாமி வீடு.
பாத்திரங்கள் : பெரியசாமி, முருகன்.

[இருவரும் உரையாடிக்கொண்டிருக்கிறார்கள்.]

பெரிய : சிகரெட், பீடி, சுருட்டு, கஞ்சா குடிப்பியா?

முரு : கிடையாதுங்க.

பெரிய : மற்ற போதை வஸ்துக்கள்?

முரு : கிடையாதுங்க.

பெரிய : வெளியூர் போயிருக்கிறபோதுகூட...?

முரு : எப்பவும் கிடையாதுங்க.

பெரிய : களவு?

முரு : கிடையாதுங்க.

பெரிய : புறஞ்சொல்லுதல்?

முரு : கிடையவே கிடையாதுங்க.

பெரிய : லஞ்சம்?

முரு : என் வாழ்க்கையிலே அப்படி குற்றமே செய்யலே.

பெரிய : உன் வாழ்க்கையிலே ஒரு குற்றமும் செய்ததில்லையா?

முரு : அப்பப்போ கொஞ்சம் அவசியமானு பொய் சொல்வேன்.

பெரிய : நல்லா சொல்லுவியா?

முரு : சொல்லுவேங்க.

பெரிய : நம்புறுப்பிலே.

முரு : அப்படியே சொல்லுவேங்க.

பெரிய : (மதிப்புடன்) அப்போ, ஆல் ரைட்! டேக் யுவர் சீட். உனக்கொரு வேலே தருவேன். உன்னுலே சரியா செய்ய முடியுதோ, என்னவோ?

முரு : என்ன சார், சொல்லுங்க.

பெரிய : ஏத்துக்கிட்ட கடமையில் ரொம்ப பொறுப்போட நடந்துக்கணும்.

முரு : நான் பட்டுத் தெளிஞ்சவனுங்க. ரொம்ப பொறுப்போட, நடந்துக்குவேன். சீக்கிரமா நான் என்ன செய்யணும்னு கட்டளையிடுங்க.

[சன்னல் கதவு திறந்திருக்கக் கண்டு]

பெரிய : அதாவது அந்தச் சன்னல் கதவைப் போய் நல்லா சாத்திட்டு வா.

[முருகன் எழுந்து போய் சாத்திவிட்டு வருகிறுன். பெரியசாமி சிகரெட் ஸ்டைலாகப் புகைத்துக் கொண்டிருக்கிருர்.]

பெரிய : பீச், பார்க், பள்ளிக் கூடத்துப் பக்கம், லைபிரரி, பொதுக் கூட்டங்கள் நடக்கிற இடம்.

முரு : இங்கேயெல்லாம் போய் என்ன செய்யணும். உங்க புத்தகங்களை வித்திட்டு வரச் சொல்றீங்களா? கொடுங்க சார்—வித்து துட்டை அப்படியே கொண்டு வருவேன்.

பெரிய : பார்த்தியா—உன் லெவலுக்குத்தானே நினைக்கிறே. இது கொஞ்சம் உசந்த 'லெவல்'.

முரு : சொல்லுங்க...?

பெரிய : அதாவது மக்கள் கூடுற பகுதியில் நின்னுக்கிட்டு, நீ தற்செயலாப் பேசற மாதிரி என்னுடைய கவிதை—நாடகம்—கட்டுரை—பெருந்தன்மை, நன்கொடை, இதுகளைப்பற்றி புகழணும். ஒரு அவதார புருஷனே அவதரிச்சிருக்கார்னு அவங்க முடிவு கட்டுற அளவுக்கு, நீ அளக்கணும். அப்புறம் கூடுற மக்களே அவங்களுக்குள்ளேயே, என்னைப் பத்திப் பேச ஆரம்பிப்பாங்க. பேச ஆரம்பிச்சதும் நேராகப் பீச்சுக்கு வந்திட்டியா?

முரு : வந்துட்டேங்க.

பெரிய : அஞ்சு பைசா கடலை வாங்கி, மணலிலே உட்கார்ந்து, எதையோ யோசிக்கிற மாதிரி காட்சி தரணும். எவனாவது நெருங்கி வந்து பேச்சுக் கொடுப்பான். நான் அந்தப் பிரபல எழுத்தாளர் பெரிய சாமியைப் பற்றி யோசிக்கிறேன். அடாடா! என்ன மனுஷன். என்ன பெருந்தன்மை சார். பெர்னட் ஷாவுக்குள்ள அறிவும், காந்திக்குள்ள மனசும், அப்படியே அமைஞ்சிருக்குன்னு வானளாவப் புகழணும். அவங்களே அதைக் கேட்டு, மயங்கி என்னைப் புகழக்

கூடிய அளவுக்கு வரணும். அப்புறம், அவங்களே என்னைப் புகழ ஆரம்பிச்சதும், நேரா லைப்ரரி பக்கம் வா! வந்திட்டியா?

முரு : வந்துட்டேனுங்க.

பெரிய : இங்கே கொஞ்சம் 'காமாக' நடந்துக்கணும். படிச்சவங்க நடமாடற இடம். சதா எப்போ பார்த்தாலும் நான் எழுதின புத்தகத்தையே எல்லோருடைய கண்ணுலேயும் படுகிற தினுசுலே இருந்து படிக்காட்டியும், புரட்டிக்கிட்டேயிருக்கணும். ஒரே புத்தகத்தை மாதம் முப்பது நாளும் வச்சிக்கிட்டிருக்கக்கூடாது. நான் நிறைய 'டைட்டில்ஸ்' எழுதியிருக்கிறேன். இரண்டு நாளைக்கு ஒருதரம் புத்தகங்களை மாத்தி, மாத்தி வச்சுக்கணும். அப்புறம், சாயங்காலமா தியேட்டர் பக்கமா வா!—வந்திட்டியா.

முரு : வந்துட்டேன்.

பெரிய : நான் கதை, வசனம், பாடல் எழுதின படம் வந்திருக்கும். 40—50 ஆட்களைச் சேர்த்துக்கிட்டு உள்ளே போயி திரையிலே என் பேரு காட்டுற நேரம் பாத்து, பலமா கைதட்டணும். கரெக்ட்டா என் பேரு வர்ற சமயத்தில் கைதட்டணும். எனக்கு அடுத்தபடியா என் ஜென்ம வைரியான டைரக்டர், நடிகர் பேர் வரும்போது தட்டிட்டா சம்பளத்திலே பிடிச்சுக்குவேன்.

முரு : அதெல்லாம் கரெக்டா உங்க பேரு வர்றபோது தட்டிடுவேனுங்க.

பெரிய : சும்மா தலையாட்டிட்டா போதாது. கரெக்டா நடந்துக்கணும். உலகத்திலே அவங்க அவங்க காரியத்தை அவங்க அவங்கத்தான் பார்த்துக்கணும். மத்தவங்களுக்குச் சிரமம் வைக்கக்கூடா

துன்னு, பெரியவங்க சொல்லியிருக்காங்க. அந்தக் கருத்திலேதான், என் புகழை நானே பரப்பிக் கறேன். இந்தா பாரு முருகா! இதில் முக்கியமான விஷயம் ஒண்ணு இருக்கு!

முரு : என்னங்க?

பெரிய : நான் மாசச் சம்ளம் தந்து உன்னை ஏற்பாடு செய்திருக்கிறேங்கிற விஷயம் உன் தலை போனாலும் யார் கிட்டேயும் சொல்லக்கூடாது. சொன்னதாத் தெரிஞ்சுது. அப்புறம் நான் ரொம்பப் பொல்லாதவனாயிடுவேன்.

முரு : அதெல்லாம் சொல்லணுங்களா?

பெரிய : என்ன புரியுதா? சொல்லணும்னு மனசிலே தோணுச்சோ அப்படியே ஒளிக்காமல் சொல்லிட்டேன். அப்படி இப்படின்னு என்கிட்டே வந்து உளறினே, அப்புறம் நடக்கிறதே வேற! என்னமோ, என் பேருதான் பெரியசாமியே தவிர, நான் பெரிய ஆசாமிங்கிற விஷயத்தை மட்டும் மறந்திடாதே.

முரு : ஐயா! உங்க நிழல்லே தங்கி வளர்ந்து, நானும் பேரும், புகழும் வாங்கி, பெரியவனாகனும்ங்ற ஒரு லட்சியம் வைச்சிருக்கிறபோது அதைக் கெடுத்துக்கு வேணா?

பெரிய : சம்பளம் என்ன கேட்கிறே?

முரு : கொடுக்கிறதைக் கொடுங்க.

பெரிய : முதல்லே பீச், லைப்ரரி, பொதுக்கூட்டம், தியேட்டர், இப்படி நாலு இடமும் கவனிச்சா இடத்துக்கு 50 ரூபாய்னு 4 இடத்துக்கும் மாதம் 200 ரூபாய் போட்டுத் தர்றேன். அப்புறம் நீ புகழு றதை வச்சு போனஸ், இன்க்ரிமென்ட் எல்லாம்

தர்றேன். அங்கேயெல்லாம் போய் பேசாத நாளைக்கு சம்பளப் பிடிப்பு உண்டுங்கிறதை மறந்திடாதே.

முரு : பாருங்களேன். நான் எப்படி நடந்துக்கிறேன்னு. விருத்தாச்சலம் பிள்ளை இவ்வளவு பழகினதைக் கூட பாராமல் அப்படி பிடிச்சு தள்ளிட்டாரு. நீங்க உடனே அன்பா காலையிலே விலாசம் கொடுத்து வரச் சொல்லி மதியம் இப்படி ஒரு வேலை போட்டுத் தந்தீங்களே, என்னைக்காவது மறக்க முடியுமா? உங்களுக்குத் துரோகம் செய்வேனு சார். ஆனல் ஒரு சந்தேகம்...?

பெரிய : என்ன?

முரு : அங்கே மேதை பெரியசாமிக்கிட்டே, அடிக்கடி போய்க்கிட்டு வர்றியே. அங்கே என்ன வேலை பார்க்கிறேன்னு என்னைக் கேட்டால், என்ன சொல்ல வேணுமுங்கறதைப் பத்தியும் சொல்லிட்டா?

பெரிய : இதோ! இந்தப் பேப்பர் வெயிட்டைப் பாரு. என் நிழலைப் பாரு. இதுதான் நீ! அதாவது என் செகரட்டரின்னு சொல்லிடு.

முரு : (மகிழ்ச்சிப் பெருக்குடன்) அடடா! உங்களுக்கு நான் செகரட்டரியா? எனக்கு இவ்வளவு பெரிய தகுதியா? என் லட்சியத்திலே பாதி நிறைவேறி விட்டதுங்க. இனிமே சாந்தி நகர்லே யார் தயவும் வேண்டாங்க. நீங்கதான் எனக்கு எல்லாம். அப்பா, சித்தப்பா, பெரியப்பா, அண்ணன், தம்பி, 'மாமா!'

பெரிய : (கோபமாக) சட்! என்னை மாமான்னு மட்டும் சொல்லாதே. அதுக்கு இரண்டு அர்த்தம் உண்டு. நீ சொல்லறபோது இரண்டாவது அர்த்தம்தான் தொனிக்குது.

முரு : (பயத்துடன் பணிந்து) சொல்லலீங்க.

பெரிய : சரி! போய் வேலையைப் பாரு!

[முருகன் பணிவுடன் வேலைக்குப் போகிறான்.]

திரை

காட்சி : 20

இடம் : வீதி.

பாத்திரங்கள் : ஈஸ்டர்ன் கல்சரல் கிளப் மெம்பர்கள்.

[எழுத்தாளர் பேப்பர் படித்துக் கொண்டு நிற்கிறார். வக்கீல் அங்கே வருகிறார்.]

எழுத்தாளர் : என்ன இது. பேப்பர் படிச்சிட்டே தெருவிலே நடந்து வர்றீங்க. இப்படி படிச்சிக்கிட்டே வரக் கூடாதுங்க. அப்படி வந்தால் நாளைக்கு நம்ம பேரும் மத்தவங்களாலே படிக்க வேண்டிய நிலைக்கு ஆளாயிடுமுங்க.

வக்கீல் : ஆமாங்க! வந்து ஒரு விஷயமில்லே...? என்னான்னா...? இந்த அதிர்ஷ்ட தேவதைக்கு இரண்டு கண்ணுமே குருடுதான்னு நினைக்கிறேன். சும்மா அடிக்கடி விலாசம் மாறி விலாசம் மாறித் தான், போய் விளையாடிக்கிட்டிருக்கிறாள். அப்படி விலாசம் மாறுகிற போதாவது, நமக்கு சான்ஸ் அடிக்குதான்னா அதுதான் இல்லே.

இன்னொரு வக்கீல் : என்ன சமாச்சாரம் சொல்லுங்க. நான் கண்ணாடி கொண்டு வரலே. படிக்க முடியாது. நீங்களே சொல்லுங்க.

எழுத் : அதாவது முருகன்னு ஒருத்தன் இங்கே ரோடு அளந்துக்கிட்டிருந்தான்லே. அவன் இப்ப உலகம் அளந்துக் கிட்டிருக்கான் சார்! நாம நம்ம கிளப்புக்

குள்ளே வரக் கூடாதுன்னு விரட்டினேமே, அவன் இப்ப அமெரிக்கா, லண்டன் எல்லாம் அத்தை வீட்டுக்குப் போய்ட்டு வர்ற மாதிரி சர்வ சாதாரணமா பறந்துட்டு வர்ருன் சார்.

[மற்ற மெம்பர்களும் வருகிருர்கள்.]

டாக்டர்: இந்த முருகனு? விருத்தாசலம் பிள்ளை வீட்டில் இருப்பானே! அவனு? ஒருநாள் அவர் அறைஞ்சாரு, அங்கே போய் விழுந்திருக்கான்.

ஆபீசர்: அங்கே யாரு அறையப் போருங்களோ, இங்க எப்ப வந்து விழப் போருனே?

எழுத்: பாருங்க. நம்ம கொளுந்தியா வீடு குடியாத்தத்திலேயிருக்கு. போய் ஒருநாள் பார்த்துட்டு வரலாம்னு ரொம்ப நாளா ஆசை? நடக்கலே. பணம் கிடைக்கலே. அப்புறம் போய்ட்டு வர மட்டும் பணம் கிடைச்சுது.—அப்புறம் புறப்பட்டேன்,—அந்த நேரம் பார்த்து தபால் வந்தது—பிரிச்சு பார்த்தா, அவுங்க அங்கேயிருந்து தெற்கே குற்ருலத்திற்கு வேலே மாத்தி போய்ட்டாங்கன்னு இருக்கு. சரி நம்ம கிட்டே குற்ருலத்துக்கு போய்வர சார்ஜ் ஏது? பேசாமல் வீட்டிலேயே இருந்திட்டேன். பார்த்தீங்களா, இந்தக் குடியாத்தம் புரோகிரும் கூட சரியாக நம்ம வாழ்க்கையில நடக்க மாட்டேங்குது.

வக்: நமக்கும் இதே சங்கதிதான். பாம்பேயில் நமக்குப் பொண்ணு கொடுத்த மச்சினன் வீட்டிலே குழந்தைக்கு முதல் வயது பொறந்த நாள்னு—லட்டர் போட்டு அழைச்சான்—நானும் போய்ட்டு வரலாம்னு, மனப்பூர்வமாகத்தான் நினேச்சேன்—வசதி வரலே. அப்புறம் வசதி வந்து, ஒருநாள் புறப்பட்டுப் போனு, அங்கே என்ன நடந்துகிட்டு இருந்தது தெரியுமா? கதவை அடைச்சிருந்தது. அதே பைய

னுக்கு, அட்சராப்பியாசம் ஆரம்பம்—பள்ளியிலே கொண்டுபோய் விடப் போயிருந்தாங்க. ஆப்புறம் என்ன பண்ணுறது? இந்த விசேஷத்துக்குன்னு வந்தது போலவே நடந்துகிட்டேன்.

டாக் : நம்ம நிலைமை இப்படி இருக்கிறபோது, முருகனுக்கு வந்த அதிர்ஷ்டத்தைப் பார்த்திங்களா? பிரபல மேதை பெரியசாமியோட உலகம் சுத்திக்கிட்டிருக்கான் சார்.

ஆபீ : இது ஒரு பெருமையா. லட்டர்ல wrong address எழுதி போஸ்டு பண்ணிஞ கூடத்தான் உலகம் சுத்திக்கிட்டு வரும். அந்த மாதிரி இவனெல்லாம் wrong address பேர்வழிதான் சார்.

இன். வக் : என்னமோ, எச்சில் இலைகள்கூட சில சமயம் காற்று பட்டு சோபாவிலே வந்து விழுந்திடும். அதனுல் சோபாவுக்கு வர்ற தகுதி அதுக்கெல்லாம் வந்திட்டுதுன்னு சொல்றதா என்ன?

எழுத் : இருந்தாலும், அவரோட இவன் பேரும் சேர்ந்து பெரிய எழுத்திலே வருது சார். இவனை உலகமே புகழ ஆரம்பிச்சுட்டுதே.

வக் : இங்கே எக்சிபிசனிலே ரூபாய்க்கு எட்டு போட்டோன்னு அட்டை ஏரோப்பிளேனிலே இருக்கிற மாதிரி, அப்படி, இப்படின்னு போட்டோ எடுத்துக்கிட்டிருந்தான் சார். இப்ப நிஜமாகவே ப்ளேனிலிருந்து இறங்குகிற மாதிரி படம் வந்திருக்கு சார். நிஜமான கேமராக்கள் படம் எடுத்துக்கிட்டிருக்குது சார்.

எழுத் : பார்த்திங்களா? இங்கேயும் நம்ம முருகன் நியூசு. ஈஸ்டர்ன் கண்ட்ரீஸ்களை நினைச்சு, நாம் நட்ம கிளப்புக்குக்குள்ளேயே இருக்கிறோம். நம்மாலே வெளியே

விரட்டப்பட்ட முருகன், நிசமாகவே ஈஸ்டர்ன் கண்ட்ரிகளுக்கு போயிட்டான். பாருங்க சார்?

ஆபி : இது ஒரு பெருமையா? Famous writer பெரியசாமி யோடத்தானே சார் இவன் போயிருக்கான்.

எழுத் : எப்படியோ உலகத்தைச் சுத்த அவனுக்கு சந்தர்ப்பம் கிடைச்சுதா இல்லையா? இன்னைக்கு உலகத்திலே உள்ள பேப்பர்களில் எல்லாம் அவன் பேரு அடிபடுதே. அவன் நாளைக்கு இங்கே வந்து இறங்கிறான்னு, எவ்வளவு பேர் போட்டோ பிடிப்பாங்க! எவ்வளவு பேர் பேட்டி காண போவாங்க தெரியுமா சார். (கவலையுடன்) வந்ததும் நடக்கப் போற ஊர்வலத்தில் அவனும் இருப்பானே சார்.

வக் : ஊம் (பெருமூச்சு விட்டவாறே) பேரு, புகழ்னு திரிஞ்சான். எப்படியோ புகழை உண்டாக்கிட்டான். இப்ப நம்ம ஊர் பிரமுகர்களிலே அவனும் ஒருத்தன். இதை யாரும் மூடி மறைக்கிறதுக்கு இல்லையே.

டாக் : ஆமாம்! எப்ப திரும்பி வர்றதா இருக்கு...

எழுத் : வர்ற பாதையிலேயே ஒரு பெரிய மன்றத்திலே, பெரியசாமி குழந்தையைப் பத்தி ஒரு புஸ்தகம் "குழந்தைச் செல்வம்" எழுதினாரே! அதுக்காகவும், சமூக சேவை செய்ததுக்காகவும், முத்து, ரத்தினம், பதிச்ச ஷீல்டு கொடுக்கிறாங்களாம். அதை வாங்கிக்கிட்டு இன்னும் பல சங்கத்திலே கலந்து பொன்னாடை, வரவேற்பு, இதழ் முதலிய மரியாதையை ரீசிவ் பண்ணிக்கிட்டு அடுத்த மாதம் 4-ம் தேதி காலை ப்ளெய்னில் வந்து சேர்றாங்களாம்.

வக் : அடிசக்கேன்னு! இந்தக் கழுதை வர்றதைப் பத்தி ஒரு மாதத்துக்கு முன்னேயே பேப்பர்லே போட்டு வருதா?

டாக் : இப்ப நம்ம கிளப்பிலிருந்து ஏதாவது செய்ய ணுமே! செய்யாட்டா நல்லாவும் இருக்காது. என்ன பண்ணுறது? என்ன இருந்தாலும் நம்ம ஆளு. நம்ம ஊர்.

எழுத் : ஆமா! ஆமா! என்ன பண்றது. இதுவரை நாமே பேசிக்கிட்டது ஒரு அபிப்பிராயம்தானே, எப்ப அவனுக்குப் பேரும் புகழும் வந்தாச்சோ, அப்பவே நாலு பேரைப் போல நாமும் அவனை ஏத்துக்கிட்டு, use பண்ணிக்க வேண்டியதுதான். அவனை இப்ப தாஜா பண்ணி வச்சிக்கிட்டாதான், நாளைக்கு நம்ம ப்ளான் பண்ணின மாதிரி பெரியசாமிக்கிட்டே போயி ஒரு பெரிய Amount நம்ம கிளப்புக்குக் கேட்க லாம்! அந்த முட்டாளை உலகமே வரவேற்று, பெரியவனு மதிக்கிறபோது நமக்கு ஏன் பொல்லாப்பு சார்?

டாக் : பெரியசாமிக்கு எலக்ஷன் கிறுக்கு வேறு உண்டு. அவனை நிறுத்தி ஜெயிக்க வச்சு பெரிய ஆளாக்கி கைக்குள்ள போட்டு வச்சாலும், ஆச்சர்யப் படுறதிக்கில்லே!

ஆபீ : கரெக்ட் சார்!

டாக் : ஒருத்தன் முழுசா பெரிய மனுஷனுக ஆனதுக் கப்புறம் போய் பல்லைக் காட்டுறதைவிட அவன் பெரிய மனுஷனுகி வர்ரபோதே, அட்வான்சா பல்லைக் காட்டி, ஆளைக் கைக்குள்ள போட்டு வச்சிக் கிறதுதான் நல்லது! நாமெல்லாம் அந்தக் காலத் திலே சிநேகிதமா இல்லையான்னு சொல்லி நெருங்கிப் பழகி ஏதேதோ சொல்லிப் பயன்படுத்திக்கலாம்!

எழுத் : (ஒரு முடிவுடன்) அப்போ சரி! அவனைப்பத்தி பேசுறதை விட்டுட்டு அவனுலேயே ஆதாயம் பெறுவ

தற்கு உள்ள வழியைப் பார்ப்போம். வாங்க! கிளப்புக்குப் போயி ஒரு கை சீட்டுப் போட்டுட்டு அவனை வரவேற்கிறதுக்கு தீர்மானமும் போட்டிடு வோம்.

[அனைவரும் கிளப்புக்குப் புறப்படுகிறார்கள்.]

திரை

காட்சி : 21

இடம் : பொன்னம்பலம் வீடு.

பாத்திரங்கள் : பொன்னம்பலம், அஞ்சுகம், நல்ல பெருமாள்.

[பொன்னம்பலம் மிகுந்த உற்சாகததோடு ஆடிய பாதம், மன்றுடியபாதம் என்ற பாடலைப் பாடியவாறு காலின்மேல் கால் இட்டு ஆட்டி அசைத்துக் கொண்டிருக்கிறார். முன்னிருந்த அடக்கம் இப்போது இவரிடம் இல்லை. இரும்புப் பெட்டியில், பக்கத்தில் பணம் இருப்பதால் இருமல், உறுமலோடு காணப்படுகிறார்.]

பொன்னம்பலம் : அஞ்சுகம்! அஞ்சகம்!

[அதிகார தொனியில் அழைக்கிறார். அஞ்சுகம் வந்து]

அஞ்சுகம் : என்னப்பா இது! முன்னேயெல்லாம் மகளைக் கூப்பிடுறப்லே கூப்பிடுவீங்க. இப்ப மருமகளைக் கூப்பிடுறப்லே கூப்பிடுறீங்களே!

பொன் : அப்படி யெல்லாம் இல்லேம்மா! கொஞ்சம் உதாரமாகக் கூப்பிட்டேன். அவ்வளவுதான் அஞ்சுகம்!

அஞ் : என்னப்பா!

பொன் : எம் பெருமான் என்னை எப்படிச் சோதிக்கிறுர் பாத்தியா! செல்வநாயகம் ரூபத்திலே யில்லா வந்துட்டு போயிருக்காரு. எல்லாரையும் துயரத்தைக் கொடுத்துத்தான் சோதிப்பாருன்னு கேள்விப்பட்டிருக்கிறேன். என்னைத் தொகையைக் கொடுத்தில்லே சோதிக்கிருன்.

அஞ் : அப்பா! தயவுசெய்து பணத்தைப் பக்கத்திலே வச்சுகிட்டு, நல்ல விஷயங்களை யோசிக்காதீங்கப்பா! ஏதாவது ஒண்ணுக்கு ஆபத்து வந்திடும்.

பொன் : ஆமாம்மா! நல்லா சொன்னே! இரும்புப் பெட்டி பக்கத்திலே யிருந்துகிட்டு, ஒரு விஷயத்தைச் சரியா சிந்திக்க முடியலைதான்! அந்த மனுசன் நோட்டை, வீட்டிலே கொண்டுவந்து அடுக்கினதிலே ருந்து, ஒரே குழப்பமாயிருக்கு! எந்த முடிவுக்கும் சீக்கிரமா வரமுடியலேம்மா! அன்ன சத்திரம், தரும ஆசுபத்திரி, அனுதை நிலையம் எல்லாம் துவக்கனு முன்னு சொன்னேன்.

அஞ் : ஆமா! ரொம்ப நாளாக சொல்லிக்கிட்டிருந் தீங்களே!

பொன் : அப்ப சொன்னேன். இப்ப சட்டுபுட்டுன்னு துவக்கிடறதா என்ன? சாதாரண தொகையா கையிலே வந்திருக்குது. ஒரு தடவைக்குப் பல தடவை நல்லா யோசிச்சு செய்தாதானே நல்லது.

அஞ் : போங்கப்பா! என்னமோ கொஞ்ச நாளா உங்க போக்கே எனக்குப் பிடிக்கலை. வைத்தியத்தினுலேயே சில மனுஷங்க செத்துப் போகிற மாதிரி, நீங்க சிந்திக்கிறதினுலேயே அநேக விஷயம் கெட்டுப்

போகுது. ஏதோ நினைக்கிற நல்ல காரியத்தைச் செய்யுங்க! இல்லே அவர் கையிலேயே கொண்டு போயி கொடுத்துட்டு வந்திடுங்க!

பொன் : பதட்டப்படாதேம்மா. நாம பணத்துக்காக எவ்வளவோ கஷ்டப்பட்டோமே! வந்த பணத்தைக் கொஞ்ச நாள் வச்சிருந்து பார்க்கணும்போல ஒரு ஆசை! உங்க அப்பா மனுஷன்தானேம்மா, மகாளு?

அஞ் : அப்பா! அருட்பா புத்தகத்திலே உள்ள அச்சுக் காகிதங்களை எவ்வளவு நாட்களாகத் தொட்டுத் தொட்டுப் பக்குவப்பட்டிருந்தீங்க! ஊம்! கரன்சி நோட்டுக் காகிதத்தை எப்ப தொட்டீங்களோ, அப்பவே அந்தப் பக்குவம் அடிபட்டுப் போச்சே! உங்களை இனிமேல் கடவுள்தான் காப்பாத்தணும்!

[அஞ்சுகம் தண்ணீர் கொண்டுவர குடத்துடன் போகிறாள்.]

பொன் : (தனக்குள்) அதுக்கு என்ன தெரியுது! கோவிச்சுக்குது, சின்னதுதானே!

[நல்லபெருமாள் வருகிறார்.]

அடடே! நல்லபெருமாளா! வாங்க வாங்க! வணக்கம். உங்களுக்கு ஆயுசு நூறு. கொஞ்ச நேரத்துக்கு முன்னேதான், உங்களை நினைச்சுகிட்டிருந்தேன்! உட்காருங்க!

நல்ல : என்ன...! ஏதோ தர்ம காரியங்கள் நடத்தணும்னு ரொம்ப நாளா சொல்லிக்கிட்டிருந்திங்க. அதுக்கு எதிர்பாராத வசதிகள் வந்ததா கேள்விப்பட்டேன். உண்மைதானே...?

பொன் : உண்மைதான்! எல்லாம் நம்மாலே என்ன இருக்குது போங்க! திடீர்னு கொடுக்குது! திடீர்னு

எடுக்குது! அடாடாடா! இந்த தெய்வ அருள்ங்கிறது என்னனென்ன வேலே பண்ணுது தெரியுதுங்களா?

நல்ல : உலகத்திலே சன்மார்க்க வழியிலே இருக்கிற சஸ்பென்சு, வேற எதிலயும் இல்லே, போங்க! நாம எப்ப எப்ப, எப்படி எப்படி பரிபக்குவம் அடையப் போகிறோம்னு நமக்கே தெரியிறதில்லே! அருட்பா புத்தகத்திலே, வேணுமுன்னு, அடுத்த பக்கம் என்ன இருக்குதுன்னு சொல்லிடலாம். ஆனல், ஆண்டவன், நாளேக்கு, அதாவது அடுத்த நாள் நம்மை என்ன பண்ணப் போருர்னு நம்மாலே சொல்ல முடியுங் களா?

பொன் : அதிருக்கட்டும். உங்ககிட்டே தத்துவ விஷயங் களேப் பற்றிப் பேசிக்கிட்டேயிருந்தா பொழுதே போகிறது தெரியாது. இப்ப...வந்து அவசரமா உங்ககிட்டே சில விஷயங்களேப் பேசி முடிவு பண்ணிட்டா நல்லதுன்னு நினேக்கிறேன்.

நல்ல : பேசுவோம்...தாராளமா பேசுவோம்!

பொன் : அன்ன சத்திரம், அனதைப் பள்ளி, தர்ம ஆசுபத்திரி இதெல்லாம் கட்ட, என்ன செலவாகும்னு ஒரு தோராயமா சொல்லுங்களேன்!

நல்ல : உங்ககிட்டே எவ்வளவு வந்திருக்குதோ, அதை அனுசரித்துக் கட்டலாமுங்க!

பொன் : வந்தது இருக்கட்டுமுங்க! ஒரு காரியம் செய்தா, எவ்வளவு கைவசம் இருக்குதோ, அவ்வளவுக்குமா செஞ்சு போடுறது! இந்த ஊருக்கு எவ்வளவு தேவைப்படுமோ, அவ்வளவு தூரத்துக்குச் செய்தா போதுமுங்களே! ஒரு மூட்டை அரிசி கைவசம் யிருக்குதுன்ன, அவ்வளவையுமா சமைச்சிடுறது!

எவ்வளவு பேர் சாப்பிடப் போறுங்களோ, அவ்வளவு தானுங்களே உலேயிலே எடுத்துப் போடணும்!

நல்ல : நல்லா சொன்னீங்க!

பொன் : பாராட்டு இருக்கட்டும். பணம் எவ்வளவு ஆகும்னு சொல்லுங்க!

நல்ல ; ஒரு இரண்டு லட்சம் இருந்தால் போதுமுங்க!

பொன் ; இரண்டு லட்சமா?

நல்ல : ஏன் அவ்வளவு இருக்காதா?

பொன் : இருக்குது! இருந்தாலும், 'இலட்சம்'கிற வார்த்தையைக் கேட்டதும் ஒரு படபடப்பு. அவ்வளவுதான். வேற எதுவுமில்லே. பொதுவாகவே இந்த லட்சம் கோடிங்கிற வார்த்தைகள் கொஞ்சம் பொல்லாத வார்த்தைகள்தானே! அதனுலேதான் கேட்டேன்...சரி...! சீக்கிரமே அதுக்கு வேண்டிய ஏற்பாடு பண்ணுவோம்!

நல்ல : முதல்லே ஒரு கமிட்டி மாதிரி அமைச்சு அதிலே இந்தப் பணத்தைப் போட்டு...

பொன் : எனக்குக்கூட அதுதான் எண்ணம். அப்ப... இப்பவே கொண்டுபோய் போட்டுட்டு வந்திடுவோம்! நீங்களும் கூட வர்றீங்களா? கொஞ்சம் பெருந்தொகையா யிருக்குது பாருங்கள்.

நல்ல : அதுக்கென்ன—வாரேன்!

[இரும்புப் பெட்டியை மனமில்லாதவராகத் திறந்து கட்டு கட்டான நோட்டுகளே மேசையில் எடுத்து வைக்கிறுர். கை பதறுகிறது. நோட்டுக் கட்டைத் தொட்டு, தொட்டு ஆசையுடன் ரசிக்கிறுர். கை பதறுகிறது.]

நல்ல : என்ன!...கை பதறுகிறது?

பொன் : இப்பதான்—பணத்தைப் பெட்டியிலே யிருந்து வெளியே எடுக்கிறபோதுதான் இப்படி! பணத்தைப் பெட்டிக்குள்ளே எடுத்து, அடுக்கிறபோது, இப்படி யெல்லாம் இல்லே. நல்ல தெம்பாதான் இருந்தது.

நல்ல : இருந்திருக்கும்.

[பொன்னம்பலம், பணத்தையே உற்று உற்றுப் பார்க்கிருர்.]

நல்ல : என்ன அதையே பார்க்கிறீங்க பிள்ளேவாள்!

பொன் : பார்க்கப் பார்க்க ஏதேதோ யோசனேகள் .. ஏனுங்க... நாமதான் நாற்பது வருஷமாக நெருங்கிப் பழகின நண்பர்களாச்சே, கொஞ்சம் மனம் திறந்து பேசுவோமே.

நல்ல : தாராளமா பேசுவோம்.

பொன் : அந்த மனுஷன் பணத்தை வாரிக் கொடுத் திட்டு, என் நிம்மதியை வாங்கிட்டுப் போயிட்டாரு. அவர்கிட்டேயே இதைத் திரும்பக் கொடுத்திட்டு, என் நிம்மதியை மீட்டுக்கலாமான்னுகூட தோணுது!...இருந்தாலும், இது பணம் பாருங்க... உங்ககிட்டே சொல்றதுக்கென்ன? திரும்பக் கொடுக் கிறதுக்கும் மனசு வரலே. கிடைச்சதை விட்டுட்டா, அப்புறம் எப்படி...?

நல்ல : அதுவும் வாஸ்தவம்தான். செல்வோம், செல் வோம்கிற சொல்தான், 'செல்வம்'கிற சொல்லா யிருக்குதுன்னு, பண்டிதர்களே, மாசக் கடைசியிலே, சொல்லிருக்கிருங்க. அது சரி... இந்த அன்ன சத்திரத்தை மட்டுமாவது முதல்ல...கட்டிடுங்க ளேன்.

பொன் : நல்ல காரியம்தான்! செய்ய நினைச்சோம்- செய்வோம். செய்யத்தான் போருேம். ஆனுல். ஒரு விஷயம் யோசிக்கணும்; அவன் கொடுத்த அறிவால தான் யோசிக்கிருேமே தவிர, மற்றபடி...வேற ஏது மில்லே. அதாவது...யோசிடா பொன்னம்பலம்னு சொல்ருன், யோசிக்கிருேம். இந்தா பாருங்க. இந்த அன்ன சத்திரம் கட்டுறதிலே என்ன பிரயோசனம்னு நினைக்கிறீங்க?

நல்ல : என்ன...! (வியப்புடன்)

பொன் : நாட்டிலே அன்ன சத்திரங்கள் அதிகமாக, அதிகமாக, வேலே செய்யாமல் சாப்பிட்டுத் தூங்குற சோம்பேறிகள் அதிகமாயிடமாட்டார்களா? இந்த மாதிரி சத்திரத்திலே சாப்பிட்டவன் எவன் சரித்திர மாவது உருப்பிட்டிருக்கிறதா? நாமளே இந்த நாட்டுச்குச் சோம்பேறிகளே உருவாக்கிக் கொடுக் கிறதா? என்ன!

நல்ல : நீங்க சொல்றதும் யோசிக்க வேண்டியதாதான் இருக்கு! அப்ப இந்த அனுதை நிலேயம் கட்டுறதாக ஒரு பிளான் போட்டீங்களே...அதையாவது...?

பொன் : நல்ல காரியம்தான்! செய்ய நினைச்சோம். செய்வோம். செய்யத்தான் போருேம். ஆனுல் ஒண்ணே யோசிக்கணும். அவன் கொடுத்த அறிவால தான் யோசிக்கிருேமே தவிர, மற்றபடி வேற எதுவுமில்லே...! யோசிடா பொன்னம்பலம்கிருன். யோசிக்கிறேன். அதாவது...அனுதை நிலேயம், அனுதை நிலேயம்கிறீங்களே? இப்ப நான் கேட் கிறேன். இந்த உலகத்திலே யாருதான் அனுதை யில்லே. ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில் புரிகிற சர்வேசுவரனே அனுதை

தானேய்யா! அப்ப என்ன ஆகுது—அனாதைகள்னு கடவுள் குலத்தைச் சேர்ந்தவங்கன்னு ஆகுது. அப் பேர்ப்பட்ட கடவுள் குலத்தைச் சேர்ந்த அனாதை களை நாமளா போய் காப்பாத்திடப் போறோம்?

நல்ல : சரியா சொன்னீங்க.

பொன் : மேலும், அங்கங்கே அனாதை நிலையம் இருக்குது. பிள்ளைகளைக் கொண்டு தள்ளிடலாம்கிற தைரியத் திலேதான்ங்க ஒவ்வொருத்தனும் குடும்பத்தை அஜாக்கிரதையா நடத்துறான். நம்ம குப்பம் சின்னை யன் கதைகூட அதுதானே!

நல்ல : நல்லா சொன்னீங்க. பிள்ளைகளைப் பூராவும் அங்கே கொண்டுவந்து, தள்ளிட்டு, அவன் பட்ட ணத்திலே 'ஹாயா'வா திரிகிறானும்.

பொன் : பாத்தீங்களா, உலகம் அப்படியிருக்குது.

நல்ல : சரி, இந்த தர்ம ஆசுபத்திரியாவது கட்டிடுங் களேன். வம்பு இல்லாமல் போகும்—!

பொன்: நல்ல காரியம்தான்! செய்ய நினைச்சோம். செய் வோம். செய்யத்தான் போறோம்! ஆனால், ஒண்ணை யோசிக்கணும். அவன் கொடுத்த அறிவால யோசிக் கிறோமே தவிர...மற்றபடி...வேற எதுவும் இல்லை... யோசிக்கிறேன்! அதாவது நல்லபெருமாள், இந்த ஆசுபத்திரிகளிலே என்ன இருக்குதுங்க! அந்த பஞ்சாட்சர மந்திரத்தை, நெஞ்சார ஒரு தடவை சொன்னாலே, வியாதிகள் பறந்து போயிடும்டா என்கிறான். ஊரிலே உள்ள நோயாளிகளை திரட்டிக் கூட்டிவந்து, ஒண்ணுபோல வரிசையா படுக்கப் போட்டு, இந்த பஞ்சாட்சர மந்திரத்தை ஒரு டியூசன் எடுத்திட்டா போச்சு.

நல்ல : நல்லா சொன்னீங்க.

பொன் : ஆ...! இதுக்கு என்னத்துக்குங்க டாக்டர், ஆசுபத்திரி, மருந்து! மருந்தா அது. அதிலேயும் மருந்திலேயேகூட இப்ப கலப்படம் வருதாம். மருந்துனுலேயே சில நோய்கள் உண்டாகுதுன்னும் சமீபத்திலே கண்டு பிடிச்சிருக்காங்க. இதுக்கெல்லாம், நாம காரணமா இருக்கனுமான்னுதான் யோசிக்கிறேன்.

நல்ல : நீங்க யோசிக்கிறது 'கரெக்டு'தாங்க. இன்னும் ஒண்ணு செய்யுங்களேன்.

பொன் : என்ன?

நல்ல : இதிலேயெல்லாம் இவ்வளவு கோளாறு இருக்கிறதாலே, நீங்க பேசாமல் ஒரு ஆலயமே கட்டிட்டுப் போங்களேன்.

பொன் : நல்ல காரியம்தான்; செய்ய நினைச்சோம். செய்வோம். செய்யத்தான் போறோம். ஆனுல் ஒண்ணை யோசிக்கணும். அதுவும், அவன் கொடுத்த அறிவால்தான் யோசிக்கிறோமே தவிர, மற்றபடி...வேற எதுவுமில்லை...யோசிடா பொன்னம்பலம்கிருரு. யோசிக்கிறேன்.

நல்ல : என்ன...?

பொன் : நான் யோசிச்சா போதாது. நீங்களும் யோசிக்கணும்.

நல்ல : நான் யோசிக்க ஆரம்பிச்சு ரொம்ப நேரமாச்சு.

பொன் : ஈரேழு பதினுலு லோகங்களிலேயும் இங்கேயும், அங்கேயும், எங்கேயும் பரந்து இருக்கிற இறைவனை, தனியா ஒரு கோவில்லே கொண்டுவந்து அடைக்கிறதா? கோவிலையே கட்டிட்டோம்னு வச்சுக்குங்க.

அப்புறம் என்ன செய்யப் போறோம்? தீபங்களை ஏத்துவோம். கற்பூரம் கொளுத்திக் காட்டுவோம். அப்பேர்ப்பட்ட சூரியன், சந்திரன், நட்சத்திர ஜோதிகளைப் படைச்ச கடவுளுக்கு முன்னே, இந்த அகல் விளக்கு, கற்பூரங்களைக் கொண்டு போய் காட்டுகிறது எனக்கு என்னமோ பிடிக்கலேங்க. கடவுள் கிட்டே போய் மனுஷன் கண்ணாமூச்சி விளையாடுகிற மாதிரியா இல்லே...? நல்லா யோசிக்கணும். அவன் கொடுத்த அறிவாலதான் யோசிக்கிறோமே தவிர, மற்றபடி வேற என்ன இருக்கு?

நல்ல : ஆமாமா! அவன் கொடுத்த அறிவாலதான் நானும் யோசிக்கிறேன்.

பொன் : இன்னும் யோசியுங்க. அப்புறம், அந்தக் கோவில்லே போய் என்ன பண்ணுவோம். ரெண்டு கையாலேயும் கும்பிட்டு, பிரார்த்தனை செய்வோம். நாம கையால் கும்பிடுற காட்சிதான், அவருக்குப் பிடிக்குமுன்னு படைக்கிறபோதே, நம்ம ரெண்டு கையையுமே ஒட்டினுப்பிலே படைச்சிருப்பாரே.

நல்ல : ஆமாமா! நல்லா சொன்னீங்க.

பொன் : இன்னும் யோசியுங்க. அப்புறம் அந்தக் கோவில்லே போயி, வேற, என்ன பண்ணுவோம். அவர், புகழைப் பாடி நிற்போம். நாத பிரம்மமாக உள்ள அந்த நாத வடிவத்து முன்னே, நாம, நாலரைக் கட்டை சுருதியிலே, லௌகீக சங்கதிகளை நினைச்சு அலறுறது என்னமோ எனக்குப் பிடிக்கலேங்க. அநேகம் பேர்—இப்படி கோவில்லேயே போய் பாடிப்பாடித்தான், சாமிகளே முதமுதல்லே, கோவில்களை விட்டு வெளியே போயிட்டுதுகளாம்.

நல்ல : அடாடா! அழகா சொல்லிட்டிங்க. துட்டு முன்னுலே இருக்கிறபோது, உங்க மூளை துடிப்பா தான், வேலை செய்யுது.

பொன் : (தற்பெருமையில்லாதவர்போல) நாமளாவா சிந்திக்கிறோம், அதுவும் அவனோடே லீலை தானேய்யா!

நல்ல : அதனுலே, இப்ப என்ன முடிவுக்கு வந்திருக்கீங்க?

பொன் : ஆண்டவனுக்கு ரொம்ப பிரியமானது எதுன்னு, நாம, அவரோட பிள்ளைகள் நல்லா இருக்கணும். அதுதான். அதனுலே, எதையும் இன்னும் தீவிரமா யோசிச்சு பாத்தே செய்யலாம்னு...நினைக்கிறேன்.

நல்ல : என்ன?

பொன் : நீங்க இன்னும் நல்லா யோசிச்சு பாருங்க ஆண்டவன் நம்ம மனசிலேதானே இருக்கிறார். நம்ம மனசை நாம மகிழ்ச்சியா வச்சிகிட்டா அவரு இருக்கிற இடத்தை நாம நல்லா வச்சுகிட்டோ முன்னுதானே அர்த்தம். பாலை, கோவில்லே கொண்டு போய், அவர் மேல ஏன் ஊத்தணும்? பக்தியோட காய்ச்சி, பக்தியோட டம்ளரிலே ஊத்தி, பக்தியோட ஆத்தி, கல்கண்டைப் பொடிச்சு, அதிலே போட்டு, பக்தியோட நாம பருகுறோம்! அட்போ...மனசிலே இருக்கிற ஈஸ்வர னுக்கு அபிஷேகம் ஆகித்தானேய்யா, அது வயித் துக்குப் போய் சேரணும்.

நல்ல : அடாடா! எவ்வளவு புது விஷயங்களைச் சொல் லிட்டிங்க.

பொன் : ஏன்னு...? பணத்தை விட்டுட்டு அப்புறம் முழிக்கப்பிடாது பாருங்க. அதனுலேதான்

முன்ஞலேயே யோசிச்சுகிட்டேன்......எதையுமே பிறகு, மெதுவா யோசிச்சுப் பார்த்தே செய்ய லாம்னு முடிவு பண்ணிட்டேனுங்க.

[இப்படிப் பேசியவாறே பணக்கட்டுகளே, உள்ளே எடுத்துவைக்கிருர், பூட்டுகிருர்.]

நீங்க என்ன யோசிக்கிறீங்க?

நல்ல : நான் புறப்படலாம்னு யோசனே பண்ணிட் டேன்.

பொன் : அப்ப புறப்படுங்க. இந்தாங்க. மலேக்கோவில் விபூதி. கட்டளேப் பிரசாதம் வந்திருக்கு. கொண்டு போங்க.

[நல்லபெருமாள் பக்தி சிரத்தையோடு வாங்கிக் கொண்டு, பொன்னம்பலத்தைப் புரிந்தவாறே புறப்படுகிருர்.]

நல்ல : போய்ட்டு வர்றேன். வணக்கம்.

பொன் : போயிட்டு வாங்க. வணக்கம்.

[அவர், போனதும் தனிமையிலிருக்கும் பொன்னம் பலத்துக்கு மனச்சான்று குத்துகிறது. குழம்பும் நிலேயிலிருந்து, அவரே தன்னேத் தெளிவு படுத்திக் கொண்டு]

பொன் : ஊம், பணத்தை செல்வநாயகம் பிள்ளேயா கொடுத்தார்? நாஞ வாங்கினேன்? 'அவன்' கொடுத் தான்? 'அவன்' வாங்கிஞன். இப்பவும் 'அவன்' தான் மேசையில் எடுத்து வச்சான். திரும்ப, 'அவனே' தான் பெட்டியில் எடுத்துவச்சு பூட்டி ஞன். இப்ப அவன்தான் பூட்டைப் பிடிச்சு இழுத்து இழுத்துப் பாக்கிருன். நிதி வேண்டும்.

[இப்படிப் பாடியவாறே பூட்டை இழுத்து இழுத் துப் பார்க்கிருர்.]

திரை

காட்சி : 22

இடம் : பெருவீதி.

பாத்திரங்கள் : பெரியசாமி, ஒரு தாய், குழந்தை, முருகன்.

[குழந்தைகள் புத்தகம் எழுதியதற்காக ஷீல்டு கொடுத்து, பாராட்டப்பட்ட பெரியசாமி கையில் ஷீல்டுடன் பெருமையோடு வந்து கொண்டிருக்கிறுர். பக்கத்தில் செகரடரி யாகிய முருகனும் பரவசத்தோடு வந்து கொண்டிருக்கிறுன்.]

முருகன் : அடாடாடா! உங்களே மன்றத்திலே எல்லோரும் பாராட்டி, ஷீல்டு தந்து, மண்டபமே அதிருகிற மாதிரியாகக் கைத்தட்டுகிறபோது, எனக்கு எவ்வளவு சந்தோஷமாக இருந்தது தெரியுமா?

பெரிய : முருகா! எனக்கு, என்னேப் பாராட்டுகிறபோது கூட சந்தோஷமில்லே. என்னேப் பாராட்டுகிற போது, என்னுேட எதிரி எழுத்தாளர்கள் தலே குனிந்தார்களே! அப்பதாண்டா நான் தலே நிமிர்ந் தேன். என் மனசு குளிர்ந்தது!

[ஒரு பிச்சைக்காரி, இடுப்பில் தன் குழந்தையுடன் வந்து]

பிச்சைக்காரி : ஐயா! என் குழந்தை பட்டினி கிடக்கு துங்க! இதைப் பாருங்கய்யா! எலும்பும் தோலுமா போயிட்டுதய்யா! என் பிள்ளே......ஏதாச்சும் தாருங்கய்யா!

பெரிய : என்ன டிரபிள் பண்ணுறே! சேச்சே! குழந்தை, குழந்தை, கு ழ ந் தை. பாப்புலேஷனேப்பற்றி யாருக்குமே ஒரு கவலே இருக்கிறதாகத் தெரியலே.

இந்த சொசைட்டியிலே, எந்தத் தெருவுக்குப் போனாலும் சரி, இந்தக் கோடியிலேயிருந்து, அந்தக் கோடி வரைக்கும் ஒரே லல்லபி சாங், தாலாட்டுப் பாட்டுச் சத்தம்தான் கேட்குது! ஏன் நாட்டிலே 'பிராபலம்ஸ்' 'ரெய்ஸ்' ஆகாது!

பிச் : ஐயா! உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டுங்க! குழந்தைக்கு ஏதாச்சும் கொடுங்க! இல்லேன்னு செத்துப் போயிடுமுங்க! இரண்டு நாளாக அது பட்டினியிலே அழுது, அழுது அழக்கூட சக்தி யில்லாமல் போச்சுதுங்க!

பெரிய : வாட்? நான்சென்ஸ் !

[அவள் அருகில் நெருங்கிக் கேட்டதைத் தொல்லை யாகக் கருதிய பெரியசாமி, ஷீல்டை ஓங்கி அவள் மேல் எறிகிறான். அது அந்தக் குழந்தை மேல் பட்டுவிடுகிறது. தாய் கதறுகிறாள். குழந்தையின் தலையிலிருந்து, ரத்தம் பீறிட்டுக் கொண்டு வருகிறது.]

முரு : ஐயோ! என் குழந்தை...தலையெல்லாம் ஒரே இரத்தம்.

பெரிய : ஏய்! வா மேன். பெரிசா என்னமோ 'பீல்' பண்ணிகிட்டிருக்கிறான்.

[தாய், குழந்தையை வாரி அணைத்துக் கதறிக் கொண்டிருக்கிறாள்.]

முரு : சார்! ஆசுபத்திரியிலே கொண்டுபோய் விட்டுட்டு, என்ன ஏதாச்சுன்னு டாக்டர் கிட்டே ஏற்பாடு பண்ணிட்டுப் போவோம். ஒரு பத்து நிமிசத்துக் குள்ள அடுத்த பாராட்டு விழாவுக்குப் போயிடலாம் சார்.

[முருகன் அந்தத் தாய் குழந்தைக்காக மிகவும் பரிதாபமாகக் கெஞ்சுகிறான்.]

பெரிய : நான் டயம் ஆயிடுச்சுன்னு சொல்றேன். அவளுக்காகப் பரிந்து பேசிக்கிட்டு நிற்கிறே. குயிக்கா புறப்படு மேன்!

[முருகனுக்கு பெரியசாமியிடம் சிறிது ஆத்திரம் வருகிறது. தன் சொக்காயிலிருந்து பத்து ரூபாயை எடுத்து]

முரு : இந்தாம்மா! நான் பணம் தர்றேன். குழந்தையை டாக்டர் கிட்டே கொண்டுபோ.

[வாங்கிக்கொண்டு வணங்குகிருள்.]

பிச் : சாமி! நீ நல்லாருக்கணும்.

[போய் விடுகிருள்.]

பெரிய : (முருகன்மேல் கடுங்கோபம்) நான்சென்ஸ்! குழந்தையை எங்கேயோ வாடகைக்கு வாங்கிட்டு வந்து அபிநயிக்கிரு. நீங்க வாரி வழங்கிறியளோ!

[பெரியசாமியிடம் மனிதத் தன்மையில்லாததை உணர்ந்த முருகனுக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வருகிறது.]

முரு : (ஆத்திரத்துடன்) பெரியசாமி! நீ ஒரு தடவை உன்னேப்பத்தி, பெரிய ஆசாமின்னு சொன்னயே. சரியாத்தான் இருக்கு...ஆமா, உனக்கு டயம் ஆயிடுச்சில்லே. பொன்ஞடை, பாராட்டு, வர வேற்புப் பத்திரம், மாலே மரியாதை இதுக்கெல் லாம் உனக்கு நேரம் ஆயிடுச்சில்லே. குழந்தை புஸ்தகத்துக்காகக் கிடைச்ச ஷீல்டிலே இருக்கிற அக்கறை, நிசக் குழந்தை பேரிலே உனக்கு இல்லே! உன்னே மாதிரி ஆள்களேத்தாண்டா, இந்தச் சமுதாயமே நம்பிகிட்டிருக்குது. சமுதாயத்தையே ஏய்க்கிறிங்களேடா பாபிகளா!

பெரிய : (கையை ஓங்கிக்கொண்டு) ஷட் - அப்! வேலைக்கார நாயே! எப்பவோ பட்டினியா தெருவிலே செத்துக் கிடக்கவேண்டிய உனக்கு சாப்பாடு போட்டு உன்னையும் ஆளாக்கி இப்படிக் கொண்டுவந்து நிறுத்திவச்சிருக்கேன் பாரு. பேசத் தாண்டா செய்வே. புகழ் தேவை, முன்னுக்கு வரணும்னு கால்லே வந்து விழுந்தே. இப்ப என்னையே எதிர்த்துப் பேசறே.

முரு : அன்னிக்கு, எங்க வேலு அண்ணே இந்த உலகத்தைப்பற்றிச் சொன்னது சரியாப் போச்சு. நேராக ஊருக்குப் போய், எங்க வேலு அண்ணே கால்லே விழுந்து மன்னிப்பு கேட்டால்தான் என் மனசு ஆறும்!

பெரிய : நன்றி கெட்ட நாயே! பேசவா செய்றே, நீ பேசறதிலே உள்ள ஒவ்வொரு எழுத்தையுமே கத்துக்கொடுத்தவன், இந்த மேதைதாண்டா!

முரு : (துணிவுடன் புது மனிதனைப் போல்) பார்த் தேண்டா, உன் கூடவே வந்து நீ எவ்வளவு பெரிய மேதைன்னு! எனக்கு நீயா மேதை! (மிகுந்த கோபத்தோடு) சீச்சீ! எனக்கு யார் தலைவன்? யார் வழி காட்டி? நண்பன், சகோதரன், ஆசிரியன் யாருங்கிற வாழ்க்கை உண்மையெல்லாம் எனக்கு இன்னிக்குத்தாண்டா தெரிஞ்சுது. அதெல்லாம் எனக்கு இனிமே யார் தெரியுமாடா. தலைவன், வழி காட்டி, நண்பன், சகோதரன் எல்லாமே எனக்கு நானேதாண்டா! (வெறி வந்தவன் போல) பெரியசாமி! இந்த நேரத்திலேயிருந்து, நான் புது மனுசனுயிட்டேன்டா! உன்னை மாதிரி ஆளுங்க கிட்ட வைச்சிருந்த மயக்கமெல்லாம் தீர்ந்து

போச்சுதடா! போடா!...உனக்கு டயம் ஆயிடுச் சில்லே! போ...! போ...! போயிடு (விரட்டுதல்)

[பெரியசாமி பயத்துடன் போகிருன்.]

திரை

காட்சி : 23

இடம் : வட்டிக்கடைக்காரர் தர்மலிங்கம் வீடு.

பாத்திரங்கள் : முருகன், வேலு.

[முருகன் கம்பீரமாக நடந்து, உள்ளே வருகிருன்.]

முருகன் : *யசமான்! யசமான்! எங்கே யசமானேக் காணும்? கதவு எல்லாம் திறந்திருக்குது. உள்ளே ஒருவேளை பூசையிலே இருப்பாரோ! பூசையிலே இருந்தால்கூட என்னுன்னு கேட்டுடுவோமே!... அநேகமா உள்ளே யிருந்து வட்டிக் கணக்குதான் பார்த்துக்கிட்டிருப்பார்னு நினைக்கிறேன்.*

[உள்ளே இருந்து இவனுடைய பழைய நண்பன் வேலு, தடபுடலான உடையுடன் பணக்கார தோரணையில் வருகிருன்.]

வேலு : *யாருங்க...?*

[என்று கேட்டுக்கொண்டே வந்தவன் நன்ருக முருகனை உற்றுப் பார்த்து]

ஓ...நீயா! எப்ப வந்தே?

முரு : *என்ன, வேலு அண்ணே, சௌக்கியமா இருக்கியா? யசமானே போயி தனியா பாத்துட்டு வர்றிங்களா? வியாபாரம் ஏதாவது துவக்க வட்டிக்குப் பணம் கேட்டீங்களா? செய்யுங்க.*

தருவாரு. எங்க ஐயாகிட்டே வட்டிதான் அதிகம் இருந்தாலும் ரொம்ப ராசிக்காரரு. செய்யுங்க.

வேலு : என்ன இது பேசிக்கிட்டே போறே! இப்ப இங்கே யசமான் யார் தெரியுமா? தெரியாட்டி, தெரிஞ்சுகிட்டுப் பேசு!

[பெரிய பணக்காரதோரணையில் அங்கவஸ்திரத்தை இழுத்துவிட்டுக்கொண்டு, கையில் உள்ள வைர மோதிரத்தைத் துடைத்து மினுக்கிக் கொண்டும் பேசுகிறுன் வேலு.]

இப்ப நான்...யாரு...தெரியுமில்லே?

முரு : யாரு?

வேலு : இங்கே யசமான் நான்தான். இவ்வளவு பெரிய வீட்டுக்குச் சொந்தக்காரனும் நான்தான். விலேக்கே வாங்கிப் போட்டுட்டேன்!

முரு : என்ன! விலேக்கா! (மிகுந்த மகிழ்ச்சியுடன்) நீயா! ரொம்ப சந்தோஷம் அண்ணே! ஏண்ணே, முன்னே இருந்தாரே வட்டிக் கடைக்காரரு தர்ம லிங்கம் அவர் எங்கே?

[முருகன் பாசத்தோடு பேசுவது பிடிக்காமல் வேலு புதுப் பணக்கார தொனியில் பாசமே யின்றிப் பேசுகிறுன்.]

வேலு : அவரைப்பற்றி எனக்கு என்ன தெரியும்! எங்கேயாச்சும் போய்க் கேளு. அதையெல்லாம், நான் ஏன் தெரிஞ்சு வச்சுக்கணும்!...ஊம்! ஊரெல் லாம் சுத்திட்டு வந்திட்டியா!

முரு : வந்திட்டேனுங்க!

வேலு : சௌக்கியமா இருக்கிறேயில்ல!

முரு : இருக்கேனுங்க.

வேலு : இப்ப என்ன செய்றே?

முரு : இப்ப...நான் குழப்பத்திலே இருக்கேன்.

வேலு : வேற எதுவும் முக்கியமான விஷயம் இல்லையே.

முரு : இல்லே...

வேலு : அப்போ சரி; முக்கியமான விஷயம் ஏதாவது இருந்தால் மட்டும் வா. வர்றபோது, வெளியே 'பெல்' இருக்கு. அதை அடிச்சிட்டு வா. டேய் ப்யூன்!

[அருகில் உள்ளே சோபாவில் ஸ்டெயிலாக உட்கார்ந்து அதிகார தொனியில்]

டேய் ப்யூன்! எங்கே போயிட்டான்!

முரு : என்ன வேலு அண்ணே! எப்பவுமே உனக்கு விளையாட்டுதாண்ணே! விளையாடினது போதும். ஏண்ணே, எங்க யசமான்...எங்கே?

[உரிமையோடு முருகன் சோபாவில், வேலுவின் அருகில் போய் உட்காருகிருன். உடன் கோபம் கொண்ட வேலு]

வேலு : சரிதான். என்ன பக்கத்திலேயே வந்து உட்கார்ந்துட்டே...எழுந்திரு.

முரு : என்ன அண்ணே இது, இன்னும் விளையாடிக் கிட்டு இருக்கிறே.

வேலு : நான் ஒண்ணும் விளையாடலே. நிசமாகத்தான் சொல்றேன்!

முரு : (அதிர்ச்சியுடன்) நிசமாவா என்னைப் பக்கத்திலே உட்காரக்கூடாதுங்கிறே!

வேலு : ஆமா.

முரு : நாம கோவில் பக்கத்திலே உள்ள பாலத்திலே உட்கார்ந்து, ராத்திரியெல்லாம் 2 மணி வரைக்கு

பேசிக்கிட்டு இருப்போமே, அப்ப...நீங்கதானே பணக்காரன் அன்பு ஏழைக்கு உதவாதுன்னு சொல்லிருக்கிங்க.

[தோளில் உரிமையோடு தொட்டுப் பேசுகிறுன் முருகன்.]

வேலு: தொட்டுப் பேசாதே. சலவை கலைஞ்சிடும், சலவை கலைஞ்சிடும்!... நாம அப்படியெல்லாம் இருந்தோம்னு ஏதோ அன்னிக்கு இருந்தோம். அப்படியே எப்பவும் இருக்க முடியுமா என்ன? சட்! கொஞ்சமும் நாகரிகம் தெரியலியே.

முரு: (திகிலுடன்) அண்ணே! இதற்குப் பெயர் நாகரிகமா?

வேலு: அண்ணே, கிண்ணேன்னு கூப்பிட்டுக்கிட்டிராதே. யாருக்கு யார் அண்ணே? என்னமோ கூடப்பிறந்தவன் மாதிரி வந்து, உறவு கொண்டாடுறுன்.

முரு: (கலங்கும் தொனியில்) நான் உன்னே அண்ணேன்னு கூப்பிடக் கூடாதா? பின்னே எப்படிக் கூப்பிடணும்?

வேலு: சார்னு கூப்பிடு. இல்லே மிஸ்டர்னு கூப்பிடு. மனிசன் எப்ப எப்ப, எப்படி எப்படி வளர்றுனே, அப்ப அப்ப அப்படி அப்படி நடந்துக்கணுமே தவிர முன்னேயிருந்ததையெல்லாம், நினேச்சுகிட்டு திரியக்கூடாது. போன வருசத்துக் காலண்டர் இந்த வருசத்துக்கு உதவுமா? இதுகூட புரியலேயே. சரி...சரி. கிளம்பிறியா. எனக்கு டயம் ஆச்சு. (வாட்சைப் பார்க்கிறுன்)

முரு: டக்கு, டக்குன்னு அடிக்கிற இந்த யந்திரத்தைத் தான் பார்க்கிறுங்களே தவிர, அதைப்போலவே

டக்கு, டக்குன்னு அடிக்கிற மனித யந்திரத்தை யாருமே நினைக்கமாட்டேங்கிறுங்களே.

வேலு: (கோபமாக) இந்தா. என் வேலையைக் கெடுக்காதே. எனக்கு வேற என்கேஜ்மென்ட்ஸ் இருக்கு.

[ப்யூன் வந்து பணிவுடன் நிற்கிறுன்.]

ப்யூன்! எங்கே போயிருந்தே?

ப்யூன் : பக்கத்துக் கடையிலே டீ குடிக்கப் போயிருந்தேன்!

வேலு : எங்கிட்டே சொல்லிகிட்டுப் போறதுக்கென்ன?

ப்யூன் : இனிமே சொல்லிகிட்டு போறேனுங்க.

வேலு : ஆல் ரைட்! வீட்டைப் பாத்துக்க. கேட்டைப் பூட்டிடு. யாராவது வந்து, என்னைக் கேட்டால், மில் ஓனர் செல்வநாயகம் கல்யாணத்துக்குப் போய் இருக்கிறதாகச் சொல்லு. ஏர்கண்டிசன் ரூமை ஆப் பண்ணிவை. ஆன் பண்ணி வச்சுகிட்டு உள்ளே போய் நீ படுத்துத் தூங்காதே...டிரைவர்!

டிரைவர் : கார் ரெடிங்க!

[கொஞ்சம் நடந்து சென்று, திரும்பி வந்து, முருகனை ஒரு பார்வை பார்த்துவிட்டு, ப்யூனிடம்]

வேலு : யாராவது அனுவசியமான ஆட்கள் வந்தா அனுப்பிச்சுடு. நிறுத்திவச்சு பேசிக்கிட்டிராதே.

[வேலு ஸ்டைலாக நடந்து போய் விடுகிறுர்.]

முரு : (தனக்குள்) என்ன, வீட்டைப் பணத்தைக் கொடுத்துத்தானே வாங்கியிருப்பான். ஒரு வேளை, இதயத்தைக் கொடுத்தே வாங்கிட்டானு? இதே வேலு குடிசையிலே இருந்தபோது, எவ்வளவு

பாசமா பழகினுன். கட்டிப்பிடிச்சுப் பேசுவானே. சாப்பிட்டாச்சான்னு அவனே கேட்டு, எத்தனே தடவை அவனுக்கு உள்ளதை எனக்குப் பங்கு போட்டுத் தந்திருக்கிருன். இன்னேக்கு இப்படி மாறிட்டானே...ஊம், பாவம், அவன் என்ன செய்வான்? நிலேமை அப்படி.

ப்யூன் : இந்தாய்யா, வெளியே போயிடு. கேட்டைச் சாத்தனும். ஐயா ரொம்ப கோவிச்சுக்குவாரு.

முரு : நீ என்ன செய்வே. உன் நிலேமை அப்படி!

[முருகன் பெருமூச்சு விட்டவாறே, அவ்விடத்தை விட்டு வெளியேறுகிருன்.]

திரை

காட்சி : 24

இடம் : கல்யாண வீடு.

பாத்திரங்கள் : முருகன், பொன்னம்பலம், செல்வ நாயகம், அஞ்சுகம், கல்யாணத்துக்கு வந்திருப் போர்.

[முன்பு விருத்தாசலம் வாழ்ந்த வீடு. முருகன் பிரமிப்புடனும் பயத்துடனும் கல்யாண வீட்டுக்குள் வருகிருன். கெட்டிமேளம் கொட்டி, மணமகளே மேடைக்கு அழைத்து வருகிருர்கள். யார் மணமகள் என்று உற்றுப் பார்க்கிருன். இவனுக்கு உரிமையான அஞ்சு கமே! கண்களே நம்பாமல் துடைத்துப் பார்க் கிருன். அஞ்சுகமே! மணமகனுக செல்வ நாயகம் அமர்ந்திருக்கிருர். மாங்கல்யம் வைத் துள்ள தட்டு, பெரியோர்களின் ஆசிக்காகத் தாம்பாளத்தில் வைத்து அவர்கள் முன்பு வரு

கிறது. அப்போது, அந்தத் தட்டு முருகனிடமும் நீட்டப்படுகிறது. முருகன், தன் இரு கைகளாலும் ஆசி புரிகிறான். இவனைப் பார்த்தும் பாராததுபோல, படாடோபமாக நிற்கும் பொன்னம்பலத்திடம்]

நல்ல : அதோ! அந்தப் பையன் வந்திருகிறானே அவன் உங்களுக்கு நெருங்கின பந்துவில்லே!

பொன் : நெருங்கின பந்துவா? யாரு சொன்னது! அவன் தூர பந்துதான்!

[இந்தச் சொல், முருகன் காதில் விழுந்ததும், பொன்னம்பலத்தைத் திரும்பி ஒரு பார்வை பார்க்கிறான். அவர் இவனைப் பாராததுபோல பார்வையை வேறு பக்கம் திருப்பிவிடுகிறார். முருகன் வெறுப்புடன், அந்தத் திருமணப் பந்தலிலிருந்து வெளியேறிவிடுகிறான். கெட்டி மேளம் முழங்குகிறது. இவன் கையிலும் மலர்கள் தரப்படுகின்றன. இவனும், ஆசீர் வதித்து, அந்த மலரைத் தம்பதிகள் மேல் தூவி விட்டு, வெளியேறி விடுகிறான்.]

திரை

காட்சி : 25

இடம் : கல்யாண வீட்டு வாசல்.

பாத்திரங்கள் : முருகன், வாசலில் வெற்றிலைத் தட்டுடன் சிலர்.

[வெளியேறி வரும்போது அவன் கையில் எல்லோருக்கும் போல் தேங்காய் பொட்டலம் தரப்படுகிறது. வாங்கித் தனக்குள் சிரித்துக் கொள்ளுகிறான்.]

முருகன் : (தனக்குள்) மாமா சொன்ன நேரத்திலேயே கல்யாணம் பண்ணிக்கிட்டிருந்தால் இப்ப என்

கையிலே ஒரு பிள்ளை இருக்கும்! (பொட்டலத்தைத் தூக்கித் தூக்கிப் போட்டுக் கனம் பார்த்து) பரவால்லே, இப்ப என்ன கெட்டுப் போச்சு! இந்தப் பொட்டலமும், ஏறக்குறைய ஒரு பிள்ளைக்குள்ள வெயிட்தான் இருக்கு!

[கொஞ்சம் நகர்ந்து வந்ததும், அவன் சிந்தனை பழைய உறவை நினைந்து வருந்துகிறது. மாமா அன்று சொன்னது இவன் காதில் ஒலிக்கிறது.]

முரு : (தனக்குள்) அஞ்சுகம்! நீ செல்வநாயகத்துக்கு வாழ்க்கைத் துணைவியாயிட்டே! செல்வத்துக் கெல்லாம், நீ அரசியாயிட்டே! அதுக்காக என்னைப் பார்த்தும் பாராததுபோல, ஏன் இருக்கணும்! மாமா!...பொண்ணை இன்னொருத்தருக்குக் கட்டிக் கொடுத்திட்டதுக்காக சொந்தஉறவு முறையையுமா மறந்திடணும்? யாரோபோல் நடந்துகிட்டாரே! முன்னேயெல்லாம், வார்த்தைக்கு வார்த்தை நாம, நெருங்கின பந்துன்னு அவரே சொல்வாரே...இப்ப, யாரோ ஒருத்தர், அதைப்பத்தி நினைவு படுத்துற போதுகூட, தூர பந்துன்னு சொல்லிட்டாரே.

[மாமா அன்று சொன்ன குரல் ஒலிக்கிறது.]

''என்ன மாப்பிள்ளே நீ...நம்ம நெடுங்கிளை பந்து இப்படி போய்கிட்டிருக்கிறியே!...முருகா! என் கண் உள்ளபோதே, அஞ்சுகத்தைக் கல்யாணம் பண்ணி கிட்டு கிட்டவந்து ஆசிர்வாதம் வாங்கிக்க.''

[பழைய உறவை ரசித்தவனாக]

முரு : எவ்வளவு வாஞ்சையா இருந்திருக்கீங்க! பந்த பாசத்தையும், உறவு முறையையும் பணம் வந்ததும் மறந்திட்டீங்களே! நான் உங்க அக்காள் மகனில்லே.

ஆசை மருமகனில்லே! என்னைப் பார்த்தும் பார்க்காத மாதிரி இருந்திட்டீங்களே மாமா! உங்களை நினைச்சாகூட எனக்கு வருத்தமில்ல மாமா! நீங்க எல்லாம் வள்ளலாரைக் கும்பிடுறீங்களே! அதை நினைச்சாதான் வருத்தமா இருக்கு.

திரை

காட்சி: 26

இடம்: குடிசைப் பக்கம்.

[முன்பு மளிகைக் கடை நடத்தி பிரமாதமாக வாழ்ந்த ஒருவர், மட்டிப்பால் ஊதுவத்தி பையில் போட்டு விற்றுக் கொண்டு வருகிறார். முருகன் அவர் எதிரே வந்து வியப்புடன்]

முருகன் : ஐயா! நீங்களா!

[அவனைக்கூட சரியாகக் கவனிக்காமல், அவர் 'மட்டிப்பால் ஊதுவத்தி' என்று விற்றுக் கொண்டே போகிறார்.]

முரு : ஐயா! என்ன இது கோலம். நீங்க?

மளிகைக் கடைக்காரர் : முருகா! வா, வா. (கட்டியணைக்கிறார்.)

முரு : ஐயா! என்ன இது? ஏன் இப்படி ஆயிட்டீங்க? எவ்வளவு செல்வத்தோடவும், செல்வாக்கோடவும் இருந்தீங்க. மளிகைக்கடை மார்க்கண்டம் பிள்ளைன்னு, இந்த ஊரே புகழ்ந்ததே. ஏன் இன்னைக்கு இப்படி மட்டிப்பால் ஊதுவத்தி விற்க வேண்டிய நிலைக்கு ஆளாயிட்டீங்க?

மனி : முருகா! (மிகுந்த தெளிவான குரலில் மகிழ்வுடன்) நான் ஏன் இப்படி ஆயிட்டேங்கிறதுக்குள்ள காரணத்தைக் கேட்டால் நீகூட சந்தோஷப் படுவே. நான் ஏன் இப்படி ஆயிட்டேன் தெரியுமா?

முரு : ஏனுங்க?

மனி : நான் வியாபாரத்திலே எவ்வளவு தப்பு பண்ணி வந்தேன்கிறது உனக்கே தெரியுமில்லே. கலப்படம், படிக் கல்லைத் தேய்த்து தராசிலே போடுறது, தரா சைச் சரியாகப் பிடிக்காமல், வளைச்சுப் பிடிக்கிறது, இரண்டு கணக்கு எழுதுறது இதிலேயெல்லாம் நான் தானே ராஜாவாயிருந்தேன்.

முரு : ஆமாங்க.

மனி : தொழிலாளிகளுக்குக்கூட சரியாகக் கூலி கொடுக் காமல், அவங்க வயிற்றிலே அடிச்சிருக்கேன்ல. ஒரு முறை உனக்குக்கூட...

முரு : மூணு ரூபாய் கூலி பேசிட்டு, முக்கால் ரூபாயை மூஞ்சியிலே எறிஞ்சு, விரட்டினீங்க.

மனி : அப்படியெல்லாம், இருந்த எனக்கு ஒரு நாள் நாமும் நல்லவனு நடக்கணும்கிற ஆசை வந்தது. வியாபாரத்திலே நேர்மை—சத்தியத்தைக் கடை பிடிக்கணும்கிற விருப்பம் வந்தது.

முரு : அப்புறம்...?

மனி : ஒரு நல்ல நாளா பார்த்து தராசை நேரா பிடிச் சேன். அப்படிப் பிடிச்சேனோ, இல்லையோ என் வாழ்க்கை கீழே 'படார்'னு சரிஞ்சிட்டுது. ஊரிலே எல்லோரும் பேசிக்கிட்டாங்க. டேய், மார்க்கண்டம் பிள்ளைக்கு சத்தியத்திலேயும், நேர்மையிலேயும் நாட்டம் வந்தாச்சு. இனிமேல் பிசினசுக்கு லாயக்

படமாட்டாருன்னு பேசிக்கிட்டாங்க. இந்த சத்தம் பெரிய வியாபாரிங்க காதிலே விழுந்துதோ இல்லையோ. உடனே மொத்தமா லாட், லாட்டா எனக்குச் சரக்குக் கொடுத்து வந்ததை நிறுத்திக் கிட்டாங்க.

முரு : அப்புறம் என்ன?

மணி : அப்புறம் என்ன! பிசினஸ் சட சடன்னு சரிஞ்சுது! கடையை இழுத்து மூடவேண்டிய நிலை வந்திட்டுது! என்னமோ நான் நேர்மையைக் கடைபிடிக்கணும்னு நினைச்ச நேரம் சரியில்லை போலிருக்கு! நல்லவனாகவும் கொடுத்துவைக்கணும்! நான் திருந்த நல்லவனா கணும்னு நினைக்கிறபோது, துரதிருஷ்டப்படி வந் திருக்கிறது! அதைப்பற்றிக் கவலைப்படலை! ஏன்னா, வியாபாரம் கெட்டு ஏழையாகி நான் வீதிக்கு வந்த பிறகுதான், என் கண்ணுக்கே மனுஷாள்களையே சரியா தெரிஞ்சுது! அது வரையிலே வந்திராத அன்பும், ஆனந்தமும் மனதிலே உதிச்சுது! சரி; இனி மேல் இப்படியே வாழ்நாளை நடத்திட வேண்டியது தான்னு முடிவு பண்ணிட்டு, மட்டிப்பால் ஊதுவத்தி வியாபாரத்தைத் துவக்கிட்டேன்!

முரு : (வியப்புடன்) என்னங்க இது!

மணி : இதுக்கு ஆச்சரியப்படுறியே. அதோ அரசியல் வாதி மிஸ்டர் பாபு வருகிறாரே! அவர் கதையைக் கேட்டா இன்னும் ரொம்ப ஆச்சரியப்படுவே போல் இருக்கே.

[முன்பு தடபுடலான அரசியல் வாதியாக இருந்த மிஸ்டர் பாபு தினசரி, வாரப் பத்திரிகை விற்றுக் கொண்டு வருகிறார்.]

பாபு : தினசரி பேப்பர்! வீக்லி மன்த்லி பேப்பர்! பேப்பர்! பேப்பர்...!

[முருகன் அவர் அருகில் ஓடிப் போய் கட்டிப் பிடித்து...]

முரு : ஐயா! நீங்க மிஸ்டர் பாபு இல்லே!

பாபு : இல்லே...இப்ப நான் மிஸ்டர் பாபு இல்லே. தோழர் பாபு.

முரு : என்னங்க இது! ஒரு காலத்திலே நீங்க எப்படி யிருந்தீங்க! நாட்டிலே உள்ள ஏழைகளையெல்லாம் ஒழிக்கப் போறேன்னு சொல்லிட்டு, இப்ப நீங்களே ஒரு ஏழையாயிட்டீங்க. எப்படி எப்படியெல்லாம் கலர் சொக்காய் போட்டிருப்பீங்க. இப்ப கந்தல் சொக்காய் போட்டிருக்கிங்களே? எவ்வளவு அழகா அரும்பு மீசை வச்சிருந்தீங்க. இப்ப முக க்ஷவரம்கூட பண்ண வசதியில்லையா? ஏன் இப்படி தாடியும், மீசையும்...?

பாபு : முருகா! (புன்னகையுடன்) உலகமெல்லாம் சுத்திட்டு வந்திட்டியா, நல்லா இருக்கியா?

முரு : (அன்புத் துடிப்புடன்) நான் எப்படியும் இருக் கேனுங்க. நீங்க ஏங்க இப்படிப் போயிட்டீங்க?

பாபு : முருகா! வருத்தப்படாதே: ஒரு இலட்சியத்துக் காகத்தான், நான், இப்படி ஆகியிருக்கிறேன். வருத்தப்படாதே.

முரு : அது, என்னங்க இலட்சியம்?

பாபு : முருகா! நீ பெரிய சாமியோட உலகம் சுற்றப் போனதும், அரசாங்கம் என்னை ஒரு அரசியல் குற்றத்துக்காகச் சிறையிலே பிடித்துப் போட்டது. எனக்கு சர்வ கலா சாலையிலேகூட வராத ஞானம், அந்தச் சிறைச்சாலையிலே உதிச்சுது. அதாவது,

என்னுன்னு இனிமேல் விடுதலையாகி வெளியே போனதும், அரசியல்லே பொய்யே பேசக் கூடா துன்னு ஞானம் வந்துது. அரசியலிலே உண்மைதான் பேசுறதுன்னு வைராக்கியமே எடுத்தேன். அப்புறம் விடுதலையாகி வெளியே வந்தேன். ஊர்வலமாக அழைத்து வந்தாங்க. பெரிய மேடையிலே என்னைக் கொண்டுவந்து, உட்கார்த்திவச்சு, பிரமாதமாகப் புகழ்ந்து பேசினுங்க. அப்புறம், நான் பேசவேண்டிய கட்டம் வந்தது. எழுந்து வந்து, மைக்கைப் பிடிச் சேன். பேச ஆரம்பிச்சேன். பெரியோர்களே! தாய் மார்களே! வணக்கம்னு சொன்னேன். அப்ப...? நான் சிறையிலே எடுத்தேனே சபதம், அது நினை வுக்கு வந்தது. உடனே அரசியலை பொய் இல்லா மல் பேசப் பார்த்தேன். அவ்வளவுதான். அரசியலை பொய் இல்லாமல் பேசணும். அரசியல்லே உண்மை யைத்தான் பேசணும்கிற முடிவு எடுத்ததும் என்ன ஆச்சு தெரியுமா?

முரு : என்ன...?

பாபு : அப்புறம் அரசியலிலே பேசறதுக்கும் சுவையான விஷயமே இல்லாமல் போச்சு. அப்பதான் முருகா புரிஞ்சுது, பொய் இல்லேன்னு பொலிடிகலே இல்லேங்கிற ரகசியம்.

முரு : அப்புறம்...?

பாபு : அப்புறம் என்ன? ஜனங்கள் என்னை மதிக்கலை. ரசிக்கலை. உடனே வணக்கம், நன்றின்னு சொல்லி விட்டு வந்து உட்கார்ந்துகிட்டேன்.

முரு : அப்புறம்...?

பாபு : ஒரு நாலைஞ்சு கூட்டங்கள் இப்படியே நடந்தது, அப்புறம் யாருமே என்னைக் கூப்பிடலை. ஜனங்கள்

என் காது கேட்கவே பேசிக்கிட்டாங்க. அடாடா! ஒரு காலத்திலே பாபு பேச்சுன்னு எவ்வளவு மக்கள் வந்து மொய்ப்பாங்க! பக்கத்து ஊரிலேயிருந்தெல் லாம், சைகிளிலேயும் வண்டியிலேயும், காரிலேயும் திரண்டு வருவாங்களே. இப்ப இப்படி ஆகிப் போச்சேன்னு பேசிக்கிட்டாங்க! அரசியலிலே உண்மையே பேசியும் சில பேர் வெற்றி கண்டிருக்காங்க! என்னமோ எனக்கு அந்த பாக் கியம் கொடுத்து வைக்கலே.

முரு : பிறகு...?

பாபு : பிறகு! என்ன? வருமானம் குறைஞ்சுது. வறுமை வந்தது. குடிசை அழைச்சுது! முருகா! முன்னே யெல்லாம் நான் அடிக்கடி என்ன சாப்பிடுவேன்?

முரு : விலே உயர்ந்த பிஸ்தா பருப்பு.

பாபு : இப்ப என்ன சாப்பிடுறேன் பார்த்தாயா! என் கையிலே என்ன இருக்குது பாரு.

முரு : வேர்க்கடலே.

பாபு : முருகா! முன்னே நான் சாப்பட்டு வந்தேனே, பிஸ்தா! அது பொய்! இப்ப, நான் சாப்பிடு கிறேனே வேர்க்கடலே, இதுதான் உண்மை. முருகா! அதிலே இல்லாத சுவை, இதிலே இருக்கு துப்பா. இந்தா நீ கூட சாப்பிடு. காந்தி சாப்பிட் டது மிச்சம் இருக்கு! சாப்பிடு.

[இப்படிப் பேசி, முருகன் கையிலும், இரண்டு வேர்க்கடலேப் பருப்பை தந்துவிட்டு, பாபு "பேப்பர் தினசரி வீக்லி பேப்பர்" என்று கூவியவாறே போய்விடுகிறுன். அடுத்து "கதம்பம், மல்லிகைப்பூ, இருவாட்சிப்பூ" என்று விற்றுவரும் ஒரு பழகிய குரல் கேட் கிறது. முருகன் திரும்பிப் பார்க்கிறுன். அவர் பழைய வட்டிக்காரரர் தர்மலிங்கம்.]

பூக்காரர் : (விற்றவாறே வருகிறார்.) கதம்பம்! மல்லிகைப்பூ! இருவாட்சிப்பூ...!

முரு : யசமான்! என்ன இது! நீங்களா இப்படி ஆயிட்டீங்க? நீங்க வட்டிக்கடை வச்சு நடத்தி, எனக்கு எல்லாம்கூட, அதிலே வேலே கொடுத்திருந்தீங்களே. ஏன் யசமான் இப்படி ஆயிட்டீங்க. உங்களுக்கு ஏன் யசமான் வறுமை வந்தது?

பூக் : முருகா! நீ சௌக்கியமா இருக்கியா? உலகம் எல்லாம் சுத்திட்டு, சந்தோஷமா வந்தியா?

முரு : என் கதை எப்படியும் இருக்கட்டுமுங்க. நீங்க ஏன் யசமான் இப்படி ஆயிட்டீங்க.

பூக் : இப்ப என்னப்பா கெட்டுப் போச்சு. முன்னே அள்ளி அள்ளிக் கொடுத்தேன். இப்ப அளந்து கொடுக்கிறேன். இதிலே வருத்தப்படுறதுக்கு என்ன இருக்கு? முருகா! உண்மையா சொல்லட்டுமா? இப்பதான், என் மனசே நிறைஞ்சிருக்குது. பண மெல்லாம் இருக்கிறபோது என்னமோ ஒரு பெரிய பாரம் சதா அழுத்திக்கிட்ருக்கிற மாதிரி இருந்தது. இப்ப 'ப்ரீ'யா இருக்கு.

முரு : யசமான்...?

பூக் : அப்படியெல்லாம் கூப்பிடாதே. முருகா! நான் ஏன் இப்படி ஆனேன் தெரியுமா? நான் எவ்வளவோ பேருக்குப் பணம் கொடுத்தேன், பிசினஸ் துவக்கிறதுக்கு. அவங்க, அதை வாங்கிட்டுப் போயி பிசினஸ் துவக்கிறாங்க. அப்படி பிசினசு துவக்கிற போது, முதல் நாள் கணக்கு நோட்டு வாங்கி, முதல் பக்கத்திலே மஞ்சள் துண்டாலே பிள்ளையார் சுழி, ஓம், சிவமயம் இதெல்லாம் போட்டான். நானும் மங்களகரமாக பிசினசைத் துவக்கிறாங்க

போல்ருக்குன்னுதான் நினேச்சேன். அப்புறம், ஒன்னுரெண்டு மாசம் கழிச்சதும், கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க. நானும், கல்யாணம்தானே, நல்ல காரியம்தானேன்னு ஆசிர்வாதம் பண்ணினேன்.

முரு : அப்புறம்...?

பூக் : அப்புறம் என்ன பண்ணுனுங்கன்னு, என்கிட்ட பணம் வாங்கி, பிசினஸ் துவக்கினுங்களே அந்த பிசினஸ் வந்த பணத்தை அப்படியே விற்று பணமாக்கி தங்களோட பெண்டாட்டிகளோட பேருக்கு எழுதிவச்சிட்டு, எனக்கு மஞ்சள் நோட்டீசி அனுப்பிச்டாங்க. ஒரே நாளையிலே, என்னே அவ்வளவு பேரும் சேர்ந்து ஏழையாக்கிட்டாங்க.

முரு : பிறகு...?

பூக் : பிறகு என்ன! போட்டிருந்த சொக்காய் மேல் துண்டோட கடையை விட்டு வெளியேறும்படியா ஆயிட்டுது. சொக்காய் பையிலே 12 ரூபாய் மட்டும் இருந்தது. அதில் 2 ரூபாய்க்கு இந்தக் கூடையை வாங்கினேன். பத்து ரூபாய்க்கு பூவாங்கிக் கட்டி, இந்தப் பூவியாபாரத்தைத் துவக்கிட்டேன். ஆனுல், முருகா! இப்ப மனசிலே எவ்வளவு மகிழ்ச்சி இருக்குது தெரியுமா! இப்ப இன்னொரு விஷயம் தெரியுமா? சைவத்தைப் பற்றிப் பேசுறதை விட்டுட்டு நிசமாக சைவனுகவே வாழ்றேன்.

முரு : என்னுங்க இது! இருந்ததை எல்லாம் இழந்திட்டும், இப்பவும் இவ்வளவு நிதானமாக, பொறுமையாகவே பேசுறீங்களே. ஆச்சரியமா இருக்குதே.

பூக் : இன்னும், ஒரு விஷயத்தைக் கேட்டால் நீ இன்னும் அதிகமாக ஆச்சரியப்படுவே. என்னே ஏமாத்தி, என் பணத்துக்கு பங்களா வாங்கி மனைவி பேருக்கு எழுதிவச்சிட்டு, அந்த பங்களா ஹால்

ஊஞ்சல்லே இருந்து ஆடிக்கிட்டிருக்கிருங்களே, அந்த பங்களாக்களுக்குக்கூட நான்தான், தினம் பூசப்ளே பண்ணிக்கிட்டிருக்கிறேன். அப்படின்ஞ என் மனசு எவ்வளவு பக்குவ நிலேக்கு வந்திருக்குதுன்னு, நீயே யோசிச்சுக்கியேன். அப்ப நான் வரட்டுமா. பங்களாக்களுக்குக் கொடுக்க நேரமாயிட்டுது. (கூவியவாறே) கதம்பம், மல்லிகைப்பூ, இரு வாட்சிப்பூ!

[இப்படி கூவி விற்றவாறே போய் விடுகிருர். முருகன் வியப்புடன்]

முரு : என்ன இது! ஒரே ஆச்சரியமா இருக்குது. (திடீரென கவனம் விருத்தாச்சலத்திடம் திரும்பி) ஆமா... நம்ம விருத்தாசலம் ஐயா எங்கே இருக்கிருரோ...? என்ன ஆனுரோ...? போய் விசாரிப்போம்!

[ஆர்வத்தோடு குடிசைப் பகுதிக்குள் போகிருன்.]

திரை

காட்சி : 27

இடம் : விருத்தாச்சலம் குடிசை வீடு.
பாத்திரங்கள் : முருகன், விருத்தாச்சலம்.

[விருத்தாசலம் ஒரு கயிற்றுக் கட்டிலில், மிகுந்த ஏழ்மைக்கோலத்தில், கந்தல் உடையுடனிருக்கிருர். முருகன் ஓடி வந்து 'யசமான்' என்று அன்பு உரிமையுடன் அழைத்தவனுக அவரது காலில் விழுகிருன். விருத்தாச்சலத்துக்கு முன்பு — தான் அவனே நோக்கி வீசிய கடுமொழிகள் நினேவுக்கு வருகின்றன.]

குரல் : ''என்ன தைரியமிருந்தா என் பொண்ணே ஒரு ஏழைக்கு கட்டிக் கொடுக்கச் சொல்லுவே! போடா வெளியே!''

[முன் இவ்வாறு சொல்லி விரட்டியதை எண்ணி, தேம்பித் தேம்பி அழுகிறார். அவனைக் கட்டிப் பிடித்து]

விருத்தாச்சலம் : ஐயோ! முருகா! உன்னை நான் என்ன வெல்லாம் பேசிட்டேனே! உன் கன்னத்தில்கூட அறைஞ்சு வெளியே தள்ளிட்டேனே. அதுக்காக இப்ப நான் என்னையே தண்டிச்சுக்கிறேன்.

[இப்படி உணர்ச்சி வசப்பட்டுக் கூறியவராக தன் கன்னத்திலேயே பளார் பளார் என்று அறைந்து கொள்கிறார். பார்வதி, ஏழைமைக் கோலத்தில், ஆனால் இப்பவும் ஒரு பழைய புத்தகத்துடன் வந்து நிற்கிறாள்.]

முரு : என்னுங்க யசமான் இது! என்னை அடிக்க உங்களுக்கு உரிமையில்லையா, என்ன! எனக்கு எவ்வளவோ உபகாரம் பண்ணியிருக்கிங்களே! என்கிட்ட எவ்வளவோ அன்பைப் பொழிஞ்சு, என்னை வளர்த்து ஆளாக்கியிருக்கிங்களே! அத்தனை நாள் அன்பை ஏத்துக்கிட்ட நான், ஒரே ஒரு நாள் கோபத்தை ஏத்துக்கக் கூடாதா? உங்க வீட்டிலேயே தின்று வளர்ந்த உடம்புதானே இது யசமான்!

[பேசிக் கொண்டு வரும்போது இவனே அழுது விடுகிறான்.]

யசமான்! யசமான்! ஏன் யசமான் உங்களுக்கு இந்த நிலைமை! நம்ம வீடு வாசல் எல்லாம் என்ன ஆச்சு?

விருந் : முருகா! செல்வநாயகம் பிள்ளை என் வீட்டுச் சம்பந்தத்தை, வேண்டாம்னு தள்ளிட்ட பிறகு! என் மனசே உடைஞ்சு போச்சு! பணமெல்லாம் பெரிய இடத்திலேயே மாப்பிள்ளை தேடுறதிலேயே செலவாயிட்டுது! கடைசியில் கொஞ்ச மிச்சம் மீதி யிருந்ததும், என் நோய்களுக்காகச் செலவாயிட்டுது! ஆனால், இப்ப ஏதும் நோய் நொடி இல்லை. மனசில

பணக்காரனு இருந்தபோது ஒரு ஆணவம், அகந்தை, அலட்சியம் இருந்துதே அதெல்லாம் இப்ப இல்லே. எல்லாம், அந்த நோயோடவே போயிட்டுது! முருகா! உள்ளதைச் சொல்றதுன்னு, நான்தான் இந்தக் குடிசையில் இருக்கிறேனே தவிர, இப்ப என் மனசு மட்டும் சொர்க்கத்திலே இருக்குற மாதிரி, ஏதோ ஒருவித நிம்மதியோட இருக்குது! முருகா! நீ நல்லாருக்கியா, உன்னையேதான் நினைச்சுகிட்டே யிருந்தேன்! பெரியசாமியோட உலகம் எல்லாம் சுத்திட்டு, சௌக்கியமா திரும்பி வந்தியா?

முரு : சௌக்கியம்தான்ங்க.

விருத் : (தன்னை உணர்ந்த நிலையில்) முருகா! ஒரு ஏழைக்குப் பார்வதியைக் கட்டிக் கொடுக்கச் சொல்லி, நீ சொன்னதும் எனக்குக் கோபம் வந்தது பாரு! அந்தப் பாவத்தைத்தான், இப்ப அனுபவிக்கிறேன். ஒரு ஏழையாவது இப்ப என் மகளைக் கட்டிகிட்டா போதும்னு நான் நினைக்கிற கட்டத்துக்கு வந்திருக்கிறேன்.

முரு : (அவரை ஆறுதல் படுத்தும் முறையில்) வருத்தப் படாதீங்க யசமான்! பார்வதி விரும்பினு நீங்களும் சம்மதிச்சா, நீங்க சொல்லுற அந்த ஏழை நானுகவே இருக்கிறேன், யசமான்!

[விருத்தாசலம், பார்வதியின் முகத்தைப் பார்க்கிருர். அவள் முகத்தில், புன்னகை அரும்பி நிற்கிறது. தன் கையிலிருக்கும் பழைய புத்தகத்தில், நாணம் இழையோடும் தன் முகத்தை மறைத்துக் கொள்கிருள்.]

விருத் : (தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு) பார்வதி! நீ ரொம்பவும் கொடுத்து வச்சவ!

முரு : யசமான்!

விருத் : இன்னுமா அப்படி! இனியே நானும் எசமானில்லே! நீயும் ஏழையில்லே! நம் எல்லாருக்கும் ஆண்டவன்தான் யசமான்! அப்ப கல்யாணத்தை, நல்ல நாள் பார்த்து...

முரு : நல்ல நாள் பார்க்கிறது என்ன! கெட்ட நாளிலே கீழே ஒரு புதையல் கிடந்ததுன்னு எடுக்காமல், நல்ல நாள் வந்து எடுத்துக்கலாம்னு விட்டுவிட்டு வந்திடுவோமா என்ன! இன்னைக்கே நல்ல நாள் தான்! ஆனு ஒன்னு! இந்த சாந்தி நகரிலே எனக்கு வேண்டிய—எனக்கு ரொம்ப நாள் பழக்கமுள்ள ஒருத்தர் இருக்கிறார்—அவருக்கு என்கிட்ட ரொம்ப அன்பு! அவரு முன்னுலேதான், நான் பார்வதிக்கு மாலேயிடுவேன். புறப்படுவோமா!

விருத் : அப்படியே செய்வோம்!

முரு : அப்போ! நான் கடைக்குப் போய் மாலேயெல்லாம் வாங்கிட்டு இங்கே வர்றேன். அதுக்குள்ளே தயாராயிருங்க!

திரை

காட்சி : 28

இடம் : வீதி.

பாத்திரங்கள் : முருகன், நண்பர்.

[முருகன் வேகமாக வந்து கொண்டிருக்கிறுன். அண்ணே, அண்ணே என்று, இவனது பழைய நண்பனெருவன் கூப்பிட்டவாறு தொடர்ந்து வருகிறுன்.]

நண்பன் : அண்ணே! முருகண்ணே! உங்க கிட்டே புதுப் பணக்காரர் பொன்னம்பலம் இந்தக் கடிதத்தைக் கொடுத்திட்டு வரச் சொன்னுர்!

[வாங்கிப் பிரித்துப் பார்க்கிறுன். அவரது குரலிலேயே கடித வாசகங்களைக் கேட்பதுபோலிருக்கிறது.]

''பெருமையுள்ள முருகனுக்கு!

நாம் ஒன்று நினைக்க, தெய்வம் ஒன்று நினைக்கும் என்று அடிக்கடி சொல்வேனே! அப்படியே நடந்துவிட்டது. வெளிநாடுசென்று புகழோடு வந்திருக்கும் உன்னைப் பார்த்துப் பேச எனக்கு ஆசைதான். இருந்தாலும், நான் இப்போதிருக்கும் சூழ்நிலையில் உன் அருகில் வர முடியாமல் போய் விட்டது. தானாக என்னைத் தேடிவந்த செல்வத்தைத் நட்ட மனமில்லை. அந்த தைரியமும் எனக்கு இல்லை. நாம் எல்லோருமே ஏழ்மையில் உழல்வதை விட இது நல்லது அல்லவா? அஞ்சுகத்தை மனப்பூர்வமாகத்தான் நான், செல்வநாயகத்துக்குக் கொடுத்தேன். அவருக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். அது, என் வரைக்கும்தான் தெரியும்.

அவர் குணத்தை நீயும் அறிந்தால், அஞ்சுகத்தை நான் அவருக்குக் கொடுத்ததைப்பற்றி நீயே சந்தோஷப்படுவாய்! நல்ல உபகாரி. உன்னைப் பற்றியும் செல்வநாயகத்திடம் சொல்லி யிருக்கிறேன். அவர் உனக்கு என்று ஒரு கிராமத்தையே இனமாக எழுதித் தர முடிவு செய்து இருக்கிறார்.

அவருடைய செல்வாக்கினால், நீ பேரும் புகழும் அடைய வழியிருக்கிறது; நீ அடைவது என்ன, அதுவே உன்னைத் தேடி வந்திருக்கிறது.

இன்னுமொரு நல்ல சேதி! நானும் அவரும் உனக்கு ஒரு ஜட்ஜ் வீட்டில் பெண் பார்த்துப் பேசி முடிவு செய்திருக்கிறோம். நீ சம்மதம் தரவேண்டியதுதான் தாமதம்!

வேறு எதுவும் வித்தியாசமாக நினைத்துக் கொள்ளாதே. இதற்கெல்லாம் விதி என்று பேர்

வைத்தார்கள் போலும்! நீ வந்து என்னை ஒருநாள் சந்தித்துப் போ! நீ ஒரு காலத்தில் விரும்பிய பேர், புகழ் வாய்ப்பு-வசதி எல்லாம் ஒன்ருகி, இந்தக் கடிதத்தின் மூலம் உன்னைத் தேடி வந்திருக்கிறது. உரிமையோடு கேட்கிறேன். நீ ஏற்றுக் கொள்!

இப்படிக்கு வள்ளலாரின் அடிமை,

மிராசுதார் பொன்னம்பலம்.''

[அலட்சியச் சிரிப்புடன் கடிதத்தை மடித்து கையில் வைத்துக் கொள்கிருன்.]

முரு: (தெளிவு பெற்றுவிட்ட ஞானி நிலையில்) பொருளாம்! புகழாம்! ஜட்ஜ் மகளாம்! நான் ஏற்றுக் கொள்ள வேண்டுமாம்! நான் விரும்பியலைந்தபோது எனக்குக் கிடைக்காத பொருளும் புகழும் நான் வெறுத்தவுடன் என்னைத் தேடிவருகின்றன. குடிசையிலே வாழ்றபோது, என்கிட்ட அன்போடவும் ஆசையோடவும் பழகினவங்க, பங்களா வாசியானதும், என்னைப் பார்க்கக்கூட அருவருக்கிருங்க! பங்களாவாசியாயிருந்து ஏழையா வாழ்வு வாழ குடிசைக்கு வந்தவங்க, என்கிட்டே பாசமா பேசுருங்க. பண்பா நடந்துக்கிருங்க. ஆசையோட கேட்கிருங்க, முருகா, நீ நல்லா இருக்கியான்னு. ம்... என்ன உலகம். என்ன வாழ்க்கை! என்ன மனிதர்கள்!

[ஒரு பெருமூச்சுடன் அங்கிருந்து புறப்படுகிருன்.]

திரை

காட்சி : 29

இடம் : கோயில்.

பாத்திரங்கள் : முருகன், பார்வதி, விருத்தாசலம், போட்டோ பிடிப்பவர், நிருபர், இன்னும் சில வழிப்போக்கர்கள்.

[முன்பு முருகன் சென்று, வணங்கி வரம்கேட்ட வெட்டவெளி சுவாமி விக்ரகம், இப்போது பிரமாதமான பெரிய கோவிலாகியிருக்கிறது. உலகம் சுற்றிய முருகன் இங்கு வருவதை யறிந்து போட்டோ பிடிக்கவும், பேட்டி காணவும் பலர் வந்திருக்கிறார்கள். விருத்தாசலம், பார்வதியோடு வந்திருக்கிறார். முருகன் வந்து வளர்ந்துவிட்ட கோவிலை வியப்புடனும், திகிலுடனும் பார்க்கிறான். கம்பிக் கதவு போட்டு பூட்டப்பட்டுள்ள பூட்டைப் பிடித்து இழுத்துப் பார்த்துவிட்டு]

முரு : (தனக்குள்) ஆ...! கோயில். கதவு, கட்டிடம். சாமி. முன்னேறியாச்சா, சாமி. நான் எவ்வளவு பாசத்தோடு உம்ம முன்னாலேதான், என் கல்யாணத்தை நடத்திக்கணுமுன்னு கூட்டிவந்திருக்கேன். இப்ப நானே உம்மகிட்ட நெருங்கி வர முடியலையே. நீங்களே முன்னேறிகிட்டிங்களே சாமி! பார்த்திங்களா சாமி! மாலை! உங்களுக்குப் போட்டு உங்க பாதத்தைத் தொட்டு வணங்கிட்டு, அப்புறம் நாங்க மாலை மாத்திக்கணும்கிற ஆசையோட வந்திருக்கிறேன். இங்கே வந்து பார்த்தா நம்ம ரெண்டுபேருக்கு மத்தியிலே, கதவு, பூட்டு! நீங்க முன்னேறினதிலே நான்கூட உங்க கிட்ட நெருங்க முடியலையே! உங்களுக்கே இந்த கதின்னா, நான் முன்னேறினா, என்கிட்ட பழைய ஆளுங்க யாருமே நெருங்க முடியாதா?

சாமி, புகழ்வேணும், பொருள் வேணும்னு யார் யாரையோ சந்திச்சுட்டேன். தெரியுமா? இப்ப என் நிலைமை என்ன தெரியுமா சாமி. எனக்குப் புகழ் முழுதும் வரலை. கொஞ்சம்தான் வந்து எட்டிப்பார்த்தது. அதற்குள்ளேயே எவ்வளவு பயமாயிட்டுது தெரியுமா சாமி.

சாமி! இதுவரையிலே புகழ் பொருள் எல்லாத்தையும் நீர் ஒரு வரம் மாதிரிதான் கொடுக்கிறீற்னு நினைச்சேன். இப்பதான் புரியுது. நீர்ஒண்ணும் வரமாகக் கொடுக்கலை. நீர் ஒரு வாணிபமாகத்தான் நடத்தி வந்திருக்கிறீரு. சும்மா கொடுக்கலை நீரு. அவங்க அவங்ககிட்ட யிருந்து இதயங்களை வாங்கிக்கிட்டுதான், பதிலா புகழ் பொருளைக் கொடுத்து வந்திருக்கிறீரு.

எப்ப நீர் இதயத்தையும் புகழையும் சேர்த்துக் கொடுக்கிறீரோ அப்ப நீர் இந்த முருகனுக்கு முதல் சான்சு கொடுத்தால் போதும். அதுவரையில் வெறும் புகழைக் கொடுத்து என்னை விரட்டிட்டாதேயும்.

பார்த்தீரா, எனக்குக் கொஞ்சம் புகழ் வந்திட்டுதாம். அதுக்குள்ள போட்டோ பிடிக்க ஆளு, பேட்டிக்கு நிருபர் எல்லாம் வந்தாச்சு. இப்ப இந்தப் புகழை நான் என்ன செய்யப் போகிறேன் தெரியுமா? சட்டையிலே ஒட்டியிருக்கிற தேளை உதறுகிற மாதிரி உதறிடுறேன்.

பாருங்க மாமா கடிதம். இது மூலமா புகழ் பொருள் என்னைத் தேடி வந்திருக்குது. இதை இப்ப நான் என்ன செய்யப் போகிறேன் தெரியுமா?

[அந்தக் கடிதத்தைக் கசக்கிக் காலில் போட்டு மிதிக்கிறான்.]

ஆச்சரியப்படுகிறீர்களா சாமி. புகழ் வேணும்னு கேட்ட முருகன், இவன்தானுன்னு நினைக்கிறீங்களா? இப்ப எனக்கு நிசமான ஞானம் வந்திட்டது சாமி, எனக்கு அந்த புகழே வேண்டாம். இப்ப எனக்குக் கொஞ்சம் புகழ் வந்திருக்கிறதே, இதையே என்பேரிலே வந்து விழுந்துட்ட ஒரு களங்கமாக நினைக்கிறேன். அதுக்காக, இந்த முருகன்கிற பேரையே குமரன்னு மாத்திக்கிட்டு, கொஞ்சமும் புகழ் இல்லாத வெறும் மனிதனுகத் திரியப் போகிறேன். புகழில்லாமல் பெரிய காரியங்களைச் செய்ய முடியாது. பொருள் இல்லாதவனுக்கு மதிப்பே இல்லேன்னு சொல்லுறுன்களே, அப்பேர்ப்பட்ட பொல்லாத உலகத்தை நான் பொருள் புகழ் எதுவுமில்லாமலே வெறும் மனிதனுக வாழ்ந்தே, சீர்திருத்தி புது உலகம் படைச்சுக் காட்டுறேன் சாமி, உங்ககிட்டே.

இதென்னடா இது, முருகன் நம்மகிட்ட வந்து பேசருன்னு நினைக்கிறீங்களா? எனக்கு வேற யாரு சாமி யிருக்காங்க? எனக்கு மனுசங்க கிட்டயே தான் நம்பிக்கை அறவே போச்சுதே சாமி! அதனுலேதான், உங்ககிட்ட வந்து பேசறேன். (கம்பியைப் பிடித்து உரிமையோடு எட்டிப்பார்த்து) ஒரு விஷயம் தெரியுமா உங்களுக்கு!

என் சிநேகிதன் ஒருத்தன் மிருகக் காட்சிசாலையிலே வேலை பார்த்தான். தினமும் சிரிச்ச முகமா போய் வருவான். ஒரு சிங்கம் தினமும் இவனில்லேன்னு, தீனி தின்னுதாம்! ஒரு விஷப்பாம்பு, இவனைப் பார்க்கலேன்னு, இரை எடுக்காதாம்! அந்தப் பிராணிகள்கூட அவனை அப்படி நேசிச்சிருக்குது! அப்புறம் அதே ஆளு, மனுஷங்க வேலை பார்க்கிற ஆபீசிலே வந்து வேலை பார்க்கும்புடி

ஆச்சுது! வந்து, வேலைக்குச் சேர்ந்தான். சேர்ந்த அன்னையிலே யிருந்து, ஆபீசுக்குப் போற போதும் அழுது கிட்டேதான் போவான். வரும்போதும் அழுது கிட்டேதான் வருவான். யோசிச்சு பாருங்க சாமி! மிருகங்க கிட்டே சிரிச்சிருக்கான்! மனிசங்ககிட்டே அழுதிருக்கிறான்!

உலகத்தில் மனிசங்க நிலவரம் இப்படி இருக்கிற போது, நாய்கள் ஜாக்கிரதை, திருடர்கள் ஜாக்கிரதைன்னு போர்டு என்ன வேண்டியிருக்குது, சாமி!

பெரிய அறிவாளிங்க நிறைய புத்தகம் எழுதி அறிவு சொல்லிருக்காங்க. என்னைப் பொருத்தவரையில் இரண்டே வார்த்தையிலே ஓர் அறிவுரைகூட இல்லே, ஓர் ஆலோசனை சொல்ல விரும்புகிறேன் சாமி! என்னான்னா, இங்கே உள்ள மனுசங்க எல்லாம் நல்லபடியாக வாழணும்னா, அவங்களுக்கு மனுசங்ககிட்டே யிருந்துதான், முதல் பாதுகாப்பு கொடுக்கணும். அதுக்காக 'மனிதர்கள் ஜாக்கிரதை!' 'மனிதர்கள் ஜாக்கிரதை'—ன்னு நிறைய போர்டுகள் எழுதி, மனுசங்க கண் படுற இடத்திலே எல்லாம், கொண்டு போய் தொங்கவிடணும் சாமி!

சாமி! என் மனசிலே தோணினதுகளை அப்படியே சொல்லிட்டேன், ஞாபகம் வச்சுகிங்க! மறந்திடாதீங்க. தப்பித் தவறிக்கூட எனக்குப் புகழோ, பொருளோ தந்திடாதீங்க. இதைத்தான், என் கல்யாண வரமாக உம்மகிட்ட கேட்டுக்கிறேன்.

[இப்படி சுவாமி விக்ரகத்திடம் பேசியவாறே, பார்வதியின் கழுத்தில் மாலை யிடுகிறான். விருத்தாச்சலம் வாழ்த்துகிறார்.]

விருத்: சௌக்கியமாயிருங்க.

முரு : சௌக்கியமாக இருப்போம் மாமா! சந்தேகமே வேண்டாம். அதுதான் இப்ப நான். சுதாரிச்சுக்கிட்டேனே! சௌக்கியமாக இருக்கலாம்கிற நம்பிக்கை வந்தப்புறம்தானே பார்வதி கழுத்திலே மாலையைப் போட்டேன். நாங்க நிச்சயமாக நல்லபடியாக, இந்த உலகத்தில் வாழ்ந்தே தீருவோம்! அது சரி—மாமா! நீங்க அந்த உலகத்தோடவே வாழப்போறீங்களா? இல்லே, எங்க உலகத்துக்கு வர்றீங்களா?

விருத் : அதென்ன—அப்படிக் கேட்கிறீங்களே! உங்க கூடத்தான் வரப்போறேன்.

[முருகன் சுவாமியை எட்டிப் பார்த்து உருக்கமாக மறுபடியும் வணங்கிவிட்டு, இரண்டு அடி தூரம் எல்லோருடனும் நடந்து, பிறகு மறுபடியும் சுவாமியிடம் அன்பு உரிமையுடன்.]

முரு : சாமி! நமக்குள்ளே ரொம்ப நாள் பழக்கம். உம்மகிட்ட எனக்கு ரொம்ப பக்தி உண்டு. இப்ப, உம்ம விட்டு கொஞ்ச நாள் பிரிந்து போகிற நிலைக்கு வந்திருக்கிறேன்! நீர் படைச்ச உலகம் இந்த இலட்சணத்தில் இருக்குது. நான், புகழ் மயக்கம் பொருள் மயக்கமில்லாத புது உலகத்தைப் படைக்கப் புறப்பட்டிருக்கிறேன். அப்படி ஒரு அற்புத உலகத்தைப் படைச்சுகிட்டு, அப்புறமா வந்து, உம்மை நான் சந்திக்கிறேன். அதுவரை, உம்மை இங்கே தனியா விட்டுட்டுப் போறேனேன்னு எனக்கு வருத்தமாகவும் இருக்குது. ஏன்னா, இங்கே மனிதர்கள் ரொம்ப இருக்கிறுங்க. மனிதர்கள் ஜாக்கிரதை! மனிதர்கள் ஜாக்கிரதை!

[சுவாமியை நோக்கித் திரும்பித் திரும்பிச் சொன்னவனாக விடை பெறுகிறான்.]

★